# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்

உங்கள் குடும்பத்தினர் மற்றும்
நிறுவனத்தினர் அனைவரது
மேம்பாட்டிற்குமான
ஆன்மிக - பண்பாட்டு இதழ்

நவம்பர்-2016
கார்த்திகை
விலை ₹10



ISSN 0972-4400
96



# விவேகானந்தர் இல்லம்

## பாரதத்தின் ஒரு பெருமைமிகு பாரம்பரியச் சின்னம்

சுவாமி விவேகானந்தர் சென்னையில் 9 நாட்கள் தங்கிப் புனிதப்படுத்திய இடம் விவேகானந்தர் இல்லம். சுவாமி விவேகானந்தர் இங்கிருந்துதான் தேசிய மறுமலர்ச்சிக்கான விதைகளைத் தமது சொற்பொழிவுகள் மூலம் விதைத்தார். இந்தியப் பெண்களின் முன்னேற்றத்திற்கான முதற்கட்டப் பணி சகோதரி ஆர்.எஸ். சுப்பலக்ஷ்மி அவர்களால் தொடங்கப்பட்டதும் சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடம் தொடங்கப் பெற்றதும் இங்குதான்.



இந்த இல்லத்தில் சுவாமி விவேகானந்தர் தங்கிய அறை இப்போது தியான அறையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. விவேகானந்தர் இல்லம் இன்று இந்தியக் கலாச்சாரத்தை நமது இளந்தலைமுறைக்குப் புகட்டும் வகையில் செயல்பட்டு வருகிறது.

அன்பர்களே! தற்போது இந்த இல்லத்தின் மாதாந்திரச் செலவுகள் மிகவும் கூடிவிட்ட நிலையில் விவேகானந்தர் இல்லத்தைப் பேணுவதில் உங்கள் பங்கும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். உங்களைப் போன்ற நல்ல உள்ளங்களின் நன்கொடைகள் விவேகானந்தர் இல்லத்தைப் பராமரிப்பதற்கு மிகவும் அவசியம்.

| | |
|---|---|
| இல்லத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கான மாதாந்திரச் சம்பளம் | - ரூ. 1,50,000/- |
| 173 வருடத்துக் கட்டிடம் என்பதால் தொடர்ந்து வரும் பழுதுபார்ப்புச் செலவுகள் | - ரூ. 1,00,000/- |
| கண்காட்சி பராமரிப்புச் செலவு | - ரூ. 1,50,000/- |
| மாதாந்திர மின்சாரக் கட்டணம் | - ரூ. 25,000/- |
| சாதுக்கள் மற்றும் ஊழியர்களுக்கான உணவு மற்றும் பராமரிப்புச் செலவுகள் | - ரூ. 20,000/- |
| தோட்டப் பராமரிப்பு, டீசல், கம்ப்யூட்டர் மற்றும் இதரச் செலவுகள் | - ரூ. 25,000/- |

ரூ.1,00,000/- க்கும் மேல் நன்கொடை அளிப்பவர்களின் பெயர்கள் இல்லத்தில் உரிய விதத்தில் பொறிக்கப்படும். நன்கொடைகளை **'Sri Ramakrishna Math, Chennai-4'** என்ற பெயரில் செக்/டிடி.யாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும். இணைய தளம் மூலமாகவும் அனுப்பலாம்.

ரூ.5,000/- க்கும் மேல் செலுத்தும் நன்கொடையாளர்களின் பெயர்கள் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தில் வெளியிடப்படும்.

நன்கொடைகளுக்கு இந்திய வருமான வரிச் சட்டம் 80G - யின் கீழ் வரிவிலக்கு உண்டு.


நிதி உதவியை உங்கள் வங்கிக் கணக்கிலிருந்து நேரடியாக அனுப்பலாம். வங்கி விவரம்: Sri Ramakrishna Math (Vivekananda House), Bank and Branch: Andhra Bank, North Mada Street, Mylapore, Chennai-600004.
Account No. : 036010011013883 IFSC : ANDB0000360

இறைத் தொண்டில்
சுவாமி கௌதமானந்தர்
தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
சென்னை.



**ஸ்ரீராமகிருஷ்ண மடம், 31,** ஸ்ரீராமகிருஷ்ண மடம் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 2462 1110
email : mail@chennaimath.org, website : www.chennaimath.org

**விவேகானந்தர் இல்லம்,** காமராஜர் சாலை, சென்னை - 5.
போன் : 2844 6188 email : mail@vivekanandahouse.org
website : www.vivekanandahouse.org



# நிவேதிதை நூற்றைம்பது

சகோதரி நிவேதிதையின் 150-வது பிறந்த ஆண்டு சிறப்பு வெளியீடு-மலிவு பதிப்பு

**நூலின் விலை ~~ரூ.160/-~~ சலுகை விலை ரூ.50/- மட்டுமே.**

**தபால் செலவு தனி.**

அன்புடையீர், வணக்கம்.

சகோதரி நிவேதிதையின் 150-வது ஜயந்தி விழா 2017 அக்டோபர் முதல் 2018 அக்டோபர் வரை நாடெங்கும் விமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளது. சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை; மகாகவி பாரதியின் ஞானகுரு; இங்கிலாந்திலிருந்து வந்து நம் மக்களுக்காகச் சேவை செய்த விடுதலை வீராங்கனை சகோதரி நிவேதிதை. சகோதரி நிவேதிதை நம் நாட்டிற்கு வந்து, நமது கலாச்சார, பண்பாட்டு, ஆன்மிகத்தைக் கற்று உன்னதம் அடைந்தவர். சகோதரியின் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்வுகளையும் அவரது சிந்தனைகளையும் இந்த நூல் அருமையாகப் பதிவு செய்துள்ளது.

'நிவேதிதை நூற்றைம்பது' என்ற நூலை அவரது பிறந்த தினமான வரும் 28-அக்டோபர் அன்று வெளியிடுகிறோம்.

நூலின் பக்கங்கள்: 350 (Deluxe). எழுதியவர்: யதீஸ்வரி கிருஷ்ணப்ரியா அம்பா

## 2017-ஆம் ஆண்டுக்கான காலண்டர்

நிவேதிதையின் 150-வது பிறந்த ஆண்டை முன்னிட்டு அவரது 12 புகைப்படங்கள் அடங்கிய வண்ணமயமான 2017-க்கான காலண்டர் 28-அக்டோபர் அன்றே விற்பனைக்கு வர உள்ளது. விலை ரூபாய் 80/- மட்டுமே. குறைந்த அளவு பிரதிகள் மட்டுமே வெளியிடப்படுவதால் உங்கள் நிறுவனத்திற்கு அல்லது அமைப்பிற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் காலண்டர் பிரதிகளை உடனடியாக எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

தொடர்பு: ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை - 4. ✆: 044-2462 1110; mail@chennaimath.org




ஸ்ரீகிருஷ்ண ரூபத்தில்
காளிதேவி!

**THE RAMCO CEMENTS LIMITED**

*(formerly Madras Cements Ltd.)*

Auras Corporate Centre, V Floor, 98-A, Dr. Radhakrishnan Salai, Mylapore,
Chennai - 600 004, India. Tel: +91 44 2847 8666.
Website: www.ramcocements.in




மதம் என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற தெய்விகத்தை வெளிப்படுத்துவது.
- சுவாமி விவேகானந்தர்

# ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்


ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தமிழ் மாத இதழ்

தொகுதி 96 ❖ இதழ் 11
❖ நவம்பர்- 2016 ❖ துன்முகி ௵ கார்த்திகை மீ


கல்வி என்பது மனிதனிடம் ஏற்கெனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது.
- சுவாமி விவேகானந்தர்




**சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்ற கதை**

10 **அன்று விதைத்த விதை** -ஜி.மீனாட்சி

**இளைஞர்களுக்கு/மாணவர்களுக்கு...**

18 சுயமுன்னேற்றப் பகுதி: **சாதிக்க முடியாதவர் என்று யாருமில்லை** - ராசிகேசவன்

21 **பூதம் காத்த செல்வம்!** - சுவாமி பரமசுகானந்தர்

24 ஆசிரியர் உலகம்: **லட்சிய விரதத்தினரே!**
- சுவாமி நிகிலேஸ்வரானந்தர்

28 **ராமகிருஷ்ண மிஷன் பள்ளிகளின் சாதனை**

29 **உழைப்பும் முயற்சியும்**
- முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப

34 மாணவர் சக்தி: **அடிபணியாதே; அடி! பணியாதே!** - சுவிர்

38 **ஒரு வெற்றியாளர் எழுதுகிறார்...**

41 **சகோதரி நிவேதிதை மேடை நாடகம்**

44 படக்கதை: **அவதூதரின் 24 குருமார்கள்**
படம் : தாகோஜு சிவப்ரசாத்

48 **கீழடியில் தொன்மையான நகரம்**
- ராஜமாதா

50 ஹாஸ்ய யோகம்: **இன்டர்வியூ**

**பக்தர்களுக்கு / அன்பர்களுக்கு...**

5 **ஸ்ரீராமகிருஷ்ண பாரம்பரியத்தில் நாம்!**
- சுவாமி கௌதமானந்தர்

8 **முதன்முதலில் சந்நியாசி கீதத்தை மொழிபெயர்த்தவர்** - உஷா மகாதேவன்

14 **பிரார்த்தனை செய்வோம்!**
- சுவாமி அபவர்கானந்தர்

22 **மந்திர சக்தியை எழுப்ப....**

23 **ஆறு தரிசனங்களில் யோகம்**
- சுவாமி நீலமாதவானந்தர்

27 **சண்டை போடுங்கள்!**

30 தியானப் பயிற்சி : **உபதேசத் தியானம்**
- சுவாமி விமூர்த்தானந்தர்

37 **ஸ்ரீராமகிருஷ்ண மடத்துச் செய்திகள்**

39 புகைப்படப் புதிர்: **மரமே மூலவர்**
- தஞ்சை ஜெயபாலன்

42 **படி விழா நூற்றாண்டு**
- மும்பை ராமகிருஷ்ணன்




அட்டைப்படம் : ஸ்ரீவள்ளி - தெய்வயானை சமேத அருள்மிகு ஸ்ரீசுப்பிரமணியசுவாமி, பழமுதிர்சோலை.
நான்காம் பக்க அட்டைப்பட உதவி : எம்.என்.ஸ்ரீனிவாசன்

## ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தா விவரம்

| | | தனிப்பிரதி | ஓர் ஆண்டுச் சந்தா | 3 ஆண்டுச் சந்தா | 5 ஆண்டுச் சந்தா | 20 ஆண்டுச் சந்தா |
|---|---|---|---|---|---|---|
| இந்தியா | | ₹ 10/- | ₹ 110/- | ₹ 330/- | ₹ 550/- | ₹ 1500/- |
| | இணைய தளம் மூலமாகச் செலுத்த... | | ₹ 120/- | ₹ 360/- | ₹ 590/- | ₹ 1750/- |
| இதர நாடுகள் | | | ₹ 1200/- | ₹ 3600/- | ₹ 6000/- | |
| | இணைய தளம் மூலமாகச் செலுத்த... | | ₹ 1320/- | ₹ 3950/- | ₹ 6500/- | |


வெளிநாட்டுச் சந்தாத் தொகையில், விமானத் தபால் செலவும் அடக்கம்.


**சந்தா, முகவரி மாற்றம், அஞ்சல்வழி புத்தக விவரங்களுக்கு 044 - 24621110 (Ext : 215)** என்ற தொலைபேசி அல்லது **mail@chennaimath.org** என்ற இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ளவும். **கட்டுரைகள், விளம்பரங்கள் தொடர்பான தகவல்களுக்கு 044 - 24621110 (Ext : 211)** என்ற தொலைபேசி அல்லது **srv@chennaimath.org** என்ற இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ளவும்.
**சந்தாத் தொகையை** செக் / டி.டி.யில் செலுத்த **'Sri Ramakrishna Math'** என்ற பெயரில் எடுத்து முழு முகவரி, அஞ்சல் குறியீட்டு எண், தொலைபேசி மற்றும் இ-மெயில் இருந்தால் அதையும் தவறாது குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.
**மணியார்டர் (M.O.)** மூலம் அனுப்புபவர்கள் **Sri Ramakrishna Vijayam, Sri Ramakrishna Math, No. 31, Ramakrishna Math Road, Mylapore, Chennai - 600004** என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.
மாஸ்டர், விசா கிரெடிட் கார்டுகள் மூலம் மடத்தின் இணைய தளத்தில் சந்தா கட்டலாம்; நூல்கள் வாங்கலாம். **web : www.chennaimath.org**

ஆசிரியர் : சுவாமி அபவர்கானந்தர் ✿ நிர்வாக ஆசிரியர்: சுவாமி கௌதமானந்தர்

Printed by B. Rajkumar, Rasi Graphics Pvt. Limited, No.40, Peters Road, Royapettah, Chennai-600014 and Published by Swami Vimurtananda on behalf of Sri Ramakrishna Math Trust, No.31, Ramakrishna Math Road, Mylapore, Chennai-600004 and Printed at Rasi Graphics Pvt. Limited, No.40, Peters Road, Royapettah, Chennai-600014 and Published at Sri Ramakrishna Math Trust, No.31, Ramakrishna Math Road, Mylapore, Chennai-600004.

சுவாமி கௌதமானந்தர்



# ஸ்ரீராமகிருஷ்ண பாரம்பரியத்தில் நாம்!

பாரம்பரியம் என்றால் தொடர்ந்து வருவது. நமக்கென்று உள்ள சிந்தனைகள், சடங்குகள், சாஸ்திரங்கள், பண்பாடு, கலாச்சாரம் போன்ற யாவும் சேர்ந்ததே நமது பாரம்பரியம்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நமது வரலாற்றில் பலவிதமான யுகங்கள் இருந்தன. வைதீக யுகத்திற்குப் பின் உபநிஷத் யுகம், தொடர்ந்து புராண யுகம். அதற்குப் பிறகு பௌத்த, ஜைன தர்மங்கள் வந்தன.

ஸ்ரீராமகிருஷ்ணர் பிறந்த பிறகு அவரது உபதேசங்களால் ஒரு தாக்கம், இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் பரவியுள்ளது. அதனால் இந்தப் பாரம்பரியத்தில் நல்ல பல மாற்றங்கள், வித்தியாசங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இதனால் ஆன்மிக அன்பர்களின் வாழ்க்கைத் தரம் மாறிவிட்டிருக்கிறது. அது எப்படி?

தற்காலத்தில் ஆங்கிலத்தில் படித்தால்தான் கல்வி, பெருமை, வளமை எல்லாம் உண்டாகும் என்று நாம் நம்பி, மேலைநாட்டவர்களைப் போன்ற உடை, தோற்றம், வாழ்க்கை முறை ஆகியவற்றைப் பின்பற்றுகிறோம்.

ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் இவை எதற்கும் மதிப்பு கொடுத்ததில்லை. ஒருமுறை அவர் பஞ்சகச்சமும் உத்திரீயமும் அணிந்து தேவேந்திரநாத் தாகூரைக் காணச் சென்றார்.

தேவேந்திரர் அப்போது, ''பிரம்ம சமாஜ சபைக்கு நீங்கள் வந்து அருளுரை வழங்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் இயல்பாக, ''இறைவனின் திருவுள்ளம் இருந்தால் வருகிறேன்'' என்றார்.

அதற்கு தேவேந்திரர், ''ஆனால் நீங்கள் வரும்போது நல்ல உடை அணிந்து வாருங்கள்'' என்றார்.

''அது முடியாது. துணியில் என்ன இருக்கிறது? எவ்வளவு துணி போட்டுக் கொண்டாலும் உயிர் போய்விட்டால் என்ன பிரயோஜனம்? முக்கியம் ஆன்மாதானே?'' என்றார் குருதேவர்.

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ உரைக்குப் பிறகு ஒவ்வொரு வீதியிலும் அவருடைய புகைப்படத்தை வைத்து அதன் கீழ் இந்துத்துறவி என்று எழுதியிருந்தார்கள். அதன் முன் வெள்ளைக்காரர்கள் எல்லோரும் வணங்கியபடி சென்றார்கள். எனவே கௌரவம் உடையால் வருவதில்லை.

## 8 ஆண்டுகளுக்குப் பின் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் விலையேற்றம்

அன்பார்ந்த வாசகர்களே!

உங்களது உற்ற தோழனான ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், நீங்கள் வாழ்க்கையில் எல்லா வகையிலும் சிறப்படைய வேண்டும் என்ற ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இறையருளால் 96 வருடங்களாகச் செயல்பட்டு வருகிறது. உங்களது அன்பான ஒத்துழைப்பால் விஜயத்தின் சர்குலேஷன் தற்போது 1,70,000 என்ற அளவில் முன்னேறி வருகிறது. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வியாபார நோக்கமின்றி இறைவனுக்கு ஆற்றும் சிறந்த தொண்டாக, அடக்க விலையில் நடத்தப்படும் பத்திரிகை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

தற்போது தாளின் கூடுதல் விலை, அச்சுக்கூலி, பைண்டிங் என்று பலவகையில் ஒவ்வொரு மாதத்திற்கும் ரூ.2.6 லட்சம் கூடுதல் செலவாகின்றது. வருடந்தோறும் பேப்பர், பைண்டிங் போன்ற செலவுகள் உயர்ந்து கொண்டே வந்தாலும் கடந்த 8 ஆண்டுகளாக விஜயத்தின் விலையேற்றத்தைக் கட்டுக்குள் வைத்திருந்தோம்.

ஆனால் 2008-ஆம் ஆண்டிற்குப் பிறகு தற்போது தவிர்க்க இயலாத நிலையில் எங்களுக்கு விருப்பமே இல்லாவிட்டாலும் உங்களுக்கு அதிக சிரமம் ஏற்படாத வகையில் ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் தனிப்பிரதி விலையை 2016 டிசம்பர் முதல் ரூ.12/- என்று உயர்த்தியுள்ளோம்.

தனிப்பிரதி ரூ.12/- ஓர் ஆண்டுச் சந்தா ரூ.140/- மூன்றாண்டுச் சந்தா ரூ.420/-
ஐந்தாண்டு சந்தா ரூ.700/- 20 ஆண்டு சந்தா ரூ.2100/-

அன்பார்ந்த வாசகர்களே, இந்த விலையேற்றத்தை ஏற்று என்றும்போல் நீங்கள் ஆதரவு அளிப்பீர்கள் என்று நம்புகிறோம். நீங்கள் அனைவரும் எல்லா நலன்களும் பெற இறைவனை இறைஞ்சுகிறோம். -ஆசிரியர்

தொடர்ந்து ஒரு காரியத்தைச் செய்தால் அதுவே பழக்கமாகிவிடுகிறது. பழக்கம் மிகச் சக்தி வாய்ந்தது. - ஒரு பெரியவர்

உண்மையான கௌரவம் எது? அது நம் பாரம்பரியமான ஆன்மிக வாழ்க்கையில் இருக்கிறது. நாமே நமது நாட்டின் பண்பாட்டிற்கு மரியாதை கொடுக்கவில்லை என்றால், வேறு யார் கொடுப்பார்கள்?

நமது பண்பாடு, ஆன்மிகம் ஆகியவற்றை ஒவ்வொரு விஷயத்திலும் நாம் எல்லோரும் செயல்முறையில் கொண்டு வரவேண்டும். இதையே ஸ்ரீராமகிருஷ்ணர் வாழ்ந்து காட்டியுள்ளார்.

பாரம்பரியத்தில் மொழி முக்கிய இடம் வகிக்கிறது. தாய்மொழியும் சம்ஸ்கிருதமும் மிக முக்கியமானவை. தாய்மொழியினால்தான் நமக்கு தேசிய உணர்வு உண்டாகிறது.

வேற்று மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நம் மொழி அப்படியே மெல்ல மறைந்துவிடும். அது நம் கல்வியாளர்களுக்குத் தெரிவதில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணருக்கு வங்க மொழியைத் தவிர வேறு தெரியாது. அதிலும் கிராமத்து மொழியே தெரியும்.

அவரது பேச்சு கேட்பவர்களின் இதயத்தை நேராகச் சென்று அடையும். அப்படி ஒரு சக்தி இருந்தது அவருடைய மொழியில்!

கல்வியில், ஞானத்தில், பக்தியில் முதிர்ந்து இருப்பதைப் பொருத்தே உண்மையான ஆளுமை அமைகிறது.

சமஸ்கிருதத்திற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் முக்கியத்துவம் அளித்தார். சமஸ்கிருதத்தில் பேசினால் அவரால் புரிந்துகொள்ள முடியும். சிறுவயது முதலே சாதுக்கள் - அறிஞர்கள் மூலம் பல சாஸ்திரங்களின் முக்கியக் கருத்துகளைத் தெரிந்து வைத்திருந்தார்.

நமது தர்ம விஷயங்களெல்லாம் சமஸ்கிருதத்தில்தான் உள்ளன. இவற்றை நாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த தர்மத்தையும் நமது நாட்டையும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அழிக்க அந்நிய படையெடுப்புகள் அனேகம் நிகழ்த்தப்பட்டன. ஆனாலும் இவற்றை அழிக்க முடியவில்லை.

இறைவனே இந்திய தேசத்தையும் பாரம்பரியத்தையும் காத்து வருகிறார். இதற்கான காரணத்தை சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்: ‘நாம் இந்த உலகத்திற்கு ஆன்மிகத்தைக் கொடுக்க வேண்டும். உண்மையான ஆன்மிகம் நம்மிடமே, இந்த பாரதத்தில் மட்டுமே உள்ளது’.

இந்து மதத்தில்தான் இறைவனை நாம் விரும்பியபடி பாவிக்கிறோம். அவர் எல்லோருக்கும் உரியவர்.

நம் நாட்டில்தான்

இறைவன், ஆன்மா, மனித வாழ்க்கை அத்துடன் கஷ்ட நஷ்டங்கள் ஏன் உண்டாகின்றன? மனிதனுக்கு எது நல்லது? மனிதன் நிரந்தரமான ஆனந்தத்தை எப்படி அடைய முடியும்? போன்ற பல பரந்த விஷயங்கள் சிந்திக்கப்பட்டுள்ளன.

இந்த விஷயங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் நம்முடைய சாஸ்திரங்களை அறிந்து கொள்ள வேண்டும். முக்கியமான நம் சாஸ்திரங்களில் இருக்கும் சாரத்தைக் கொண்டே ராமாயணம், மகாபாரதம், பாகவதம், கீதை போன்ற நூல்கள் வந்தன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு நம் செயல்பாடுகள் இருந்தால்தான் நாம் நன்றாக வாழ முடியும். அத்துடன் ஆன்மிகத்தில் முன்னேறி இறைவனையே நாம் காண முடியும். ஏனெனில் இறைவனைக் காண்பதுதான் வாழ்க்கையினுடைய நோக்கம்.

ஆகவே நாம் நமது ஆன்மிகத்தைப் புரிந்துகொள்ள சமஸ்கிருதம் கற்கவேண்டும் என்று ஸ்ரீராமகிருஷ்ணரிடமும் ஓர் அபிப்பிராயம் இருந்தது. சுவாமி விவேகானந்தரும் பலமுறை தமது சொற்பொழிவுகளில் இதை வலியுறுத்தியிருக்கிறார்.

சமஸ்கிருதத்தில் சிறிது அக்கறை காட்டினால் அதை நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள முடியும். அது நம் பாரம்பரியம். அதன் மூலமே இந்தப் பண்பாடு, கலாச்சாரத்தை நாம் காப்பாற்றி வந்தோம்.

எது ஆன்மிகம்? எங்கும் இறைவன்



இருப்பதை அனுபூதியில் உணர்வதே அது. மண்ணிலிருந்து பல விதமான பொருள்கள் செய்கிறோம். அவற்றினுள் களிமண்தான் இருக்கிறது. அதைப் போல் இந்த உலகத்தில் உள்ள ஜீவன்கள், மலைகள், நதிகள் யாவும் ஒரே பொருள்தான். அது இறைவன். அதுவே பிரம்மம். அந்த ஒன்றே இந்த உலகமெல்லாம் நிறைந்துள்ளது.

‘சர்வம் கல்விதம் பிரம்ம’ - ‘இங்கு யாவுமாக பிரம்மமே நிறைந்துள்ளது’ என்று நம் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் அதை நேரடியாக அனுபவித்தார்.

இதனை அவர் இவ்விதம் போதித்தார்: ‘உள்ளேயும், வெளியேயும் எங்கே பார்த்தாலும் இறைவன்தான் இருக்கிறான். இது உண்மை. இதை என் கண்களால் நான் பார்க்கிறேன்.

‘இன்றைக்கும் இந்தக் கலியுகத்தில் நாம் எல்லோரும் முயற்சி செய்தால் இறைவனைப் பார்க்க முடியும்’.

நாம் எல்லோரும் ‘நான், நான்’ என்று சொல்கிறோம். ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்கிறார், ‘ ‘நான்’ என்பது யார்? என்று சிந்தனை செய்து பார்த்தால், நான் என்பது ஒன்றும் கிடையாது. உண்மையில் இறைவன் தான் இருக்கிறார்’.

‘நெருப்பின் தீப்பொறிகள் சிறியதாக இருந்தாலும், அந்த நெருப்பில் இருக்கும் எல்லாச் சக்தியும் அவற்றிற்குள்ளும் உள்ளது. ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் அந்த இறைவனே இருக்கிறான். எல்லா ஜீவனிலும் அந்த சக்தி இருக்கிறது’ என்பார் குருதேவர்.

இதை உணர நாம் சிறிது



பாடுபட வேண்டும். அப்போதுதான் நமக்குள் இருக்கும் இந்த சக்தியை நாமே புரிந்து கொள்ள முடியும்.

‘என்றும் உள்ள ஆன்மாவே நான். இறைவன் எல்லாவற்றையும் அறிந்தவன். அவனை அடைந்து விட்டால் நானும் அனைத்தையும் அறிகிறேன்.

‘எனக்குள் அளவற்ற இன்பம், அளவற்ற அறிவு, அழிவற்ற வாழ்வு ஆகியவை நிறைந்துள்ளன’- இதுவே நம்முடைய நிஜ இயல்பு.

இந்த இயல்பையே நாம் ஆன்மா என்கிறோம். ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்கிறார்: ‘ஆன்மாக்களாகிய நாம் இறைவனுடைய அம்சங்கள். இந்த ஆன்மா உடல் எனும் சிறையில் அகப்பட்டது போன்று இருக்கிறது. உடலே நாம் என்று மயங்கி, மாட்டிக் கொண்டு திண்டாடுகிறோம். வெளியில் செல்ல முடியாமல் உழன்று கொண்டிருக்கிறோம். இது எப்படி ஏற்பட்டது? கர்மத்தால்தான்.

‘கர்மத்தில் பாவம், புண்ணியம் என்று இரண்டு உண்டு. புண்ணியம் செய்தால், இன்பம் வந்து சேரும். பாவம் செய்தால், அது நமக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும்’.

ஒருவன் மரணத்திற்குப் பிறகு மீண்டும் பிறப்பதற்குக் கர்மவினைகளே காரணம்.

மீண்டும் இந்த உலகிற்கு வரக்கூடாது என்று நினைத்தால், என்ன செய்யலாம்?

ஸ்ரீராமகிருஷ்ணர் சொல்கிறார்: ‘நீ இரண்டையும் இறைவனுக்குக் கொடுத்துவிட்டு அவரது அருளுக்காக வேண்டு. இறைவா! எனக்கு இந்தப் புண்ணியமும் பாவமும் வேண்டாம். நீதான் வேண்டும். உன்னுடைய பாதபத்மத்திற்கு என்னை அழைத்துச் செல். நீ எப்பொழுதும் அழிவற்றவனாக, ஆனந்தமாக இருப்பது போல நானும் இருப்பேன்’. இந்த நிலையே மோட்சம்.

மற்றொரு நிலை இறைவனின் லோகத்தில் வாழ்வது. அங்கு அவனது குழந்தைகளாக அவனைத் தியானம் செய்தபடி ஆனந்தமாக இருப்போம்.

சுவாமி சாரதானந்தர் சொல்கிறார்: ‘இது முற்றிலும் உண்மை. ஸ்ரீராமகிருஷ்ண லோகம் இருக்கிறது. அங்கு அவரது பக்தர்கள் இடம் பெறுகிறார்கள். கைலாயம், வைகுண்டம் யாவும் ஒன்றே. ஸ்ரீராமகிருஷ்ண லோகமும் அதைப் போன்ற ஒன்றுதான்.’

ஒரு நிகழ்வு. ஓர் அம்மா புற்று நோயால் இறந்து விட்டார்கள். அவர்கள் காலமாவதற்கு ஒரு வாரம் முன் நான் சென்று பார்த்தேன். அவர் கூறினார்: ‘சுவாமிஜி எனக்கு மரண பயமில்லை. குருதேவரும் அன்னையும் இருக்கிறார்கள். அவர்களிடம்தான் நான் போகிறேன்’.

இதுவே நமது பாரம்பரியம். நாம் இறைவனிடமிருந்து வந்திருக்கிறோம், மீண்டும் இறைவனிடமே சேரப் போகிறோம். இந்த வாழ்க்கையில் இருக்கும் சிறிது காலம் அவர் உபதேசத்தின்படி நாம் நடக்க வேண்டும். தவறு செய்தாலும் சிரத்தையிருந்தால் அவரே தவறையெல்லாம் சரி செய்து விடுவார்.

இப்பாரம்பரியத்தில் மற்றொரு சிறப்பு என்னவென்றால், பல்வேறு ஆசார்யர்கள் ‘நீங்கள் ஞானத்தினால் தான் முக்தியை அடைய முடியும். சிலர் பக்தியினால் மட்டுமே முடியும். சிலர் யோகத்தின் வாயிலாகத் தான் முடியும்’ என்கிறார்கள். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணரோ, ‘எல்லோரும் முக்தி அடைய முடியும். உனக்கு எது பிடித்திருக்கிறதோ அதைச் செய். எந்த யோகத்தில் போனாலும் இறைவன் உனக்குக் கிடைப்பான்.

‘எதுவும் முடியவில்லையென்றால் உன் இஷ்ட தெய்வத்திடம் சரணாகதி அடைந்து விடு. அவர் அருளால் நீ இறையனுபூதி பெறுவாய்’ என்று அருளியுள்ளார்.

இப்படிப்பட்ட மிகப் பெரும் அருட்சக்தியான ஸ்ரீராமகிருஷ்ணரே நம்முள் நிறைந்திருக்கிறார். அவருடைய பாரம்பரியத்தில் வாழ்ந்து, அவரை அடைவோமாக! ❖

ஜபம் போன்ற சாதனைகளின் முழுப்பயனைப் பெற வேண்டுமானால் கடவுளைத் தியானம் செய்வது இன்றியமையாதது. - சுவாமி பிரம்மானந்தர்

உஷா மகாதேவன்

# முதன் முதலில் சந்நியாசி கீதத்தை மொழிபெயர்த்தவர்

சுவாமி விவேகானந்தர் 1897 ஜனவரி 26 இல் தமது மேலைநாட்டுச் சீடர்களுடன் பாம்பன் வந்தடைந்தார். மன்னர் பாஸ்கர சேதுபதியும் அவருடன் வந்தவர்களும் சுவாமிஜியை வீழ்ந்து வணங்கி வரவேற்றனர்.

அந்தத் துறவியரசரை சிம்மாசனத்தில் அமர வைத்து, அவரது திருவடிகளுக்குப் பாதரட்சை அணிவித்து மகிழ்ந்தார் மன்னர். அதைக் கண்டு எல்லோரும் உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்ந்தனர்.

வரவேற்புக் குழுவில் இருந்த ஒரு 19 வயது இளைஞரின் மனதில் இந்தக் காட்சிகள் காலத்தால் களைய முடியாத அற்புதச் சித்திரங்களாகப் பதிந்தன. அவரது உள்ளமும் உடலும் ஒரு சேர சுவாமிஜிக்கு அந்தக் கணமே அர்ப்பணிக்கப்பட்டன. அவருடைய நனவிலும் கனவிலும் சொல்லிலும் செயலிலும் சுவாமிஜியே நிறைந்தார். அவர்தான் பண்டிதர் ம.கோபாலகிருஷ்ண ஐயர். 'ம.கோ' என்று நண்பர்களால் அழைக்கப்பட்டவர்.

சுவாமிஜியின் சிந்தனைகள் ம.கோ.வின் மனதை எந்த அளவுக்கு ஆக்கிரமித்திருந்தன என்பதற்கு ஓர் அருமையான சான்று, அவர் சுவாமிஜியின் புகழ் பெற்ற பாடலான சந்நியாசி கீதத்தை முதன் முதலில் தமிழில் மொழி பெயர்த்ததுதான்.

நியூயார்க்கில் 1895 ஜூலையில் ஆயிரம் தீவு பூங்காவில் தங்கியிருந்த நாட்களில் 13 சரணங்கள் கொண்ட சந்நியாசி கீதத்தை இயற்றினார் சுவாமிஜி. அது 1895 -இல் 'பிரம்மவாதின்' இதழில் வெளி வந்தது.



ஒரு வீரத்துறவியின் சங்கல்பங்களையும் சக்தியையும் விளக்கும் அற்புதப் படைப்பு சந்நியாசி கீதம். ஒரு லட்சியத் துறவியின் உருவத்தைக் கண் முன் நிறுத்தும் காவியம் அது. அந்தக் கவிதையில் சுவாமிஜியின் திருவுருவத்தையே தரிசித்தார் ம.கோ.

தமிழ்ப் பண்டிதரான அவர் அந்த அற்புத கீதம் தமிழில் பாடப்படவேண்டும் என்று நினைத்தார். பாடலை உள் வாங்கி உணர்ந்து அனுபவித்துத் தமிழில் மொழியாக்கம் செய்தார். அதன் முதல் சரணம் இது.

மனவலி படைத்த மாசிலாத் துறவீ!
சுவைமலி இன்பச் சுரந்தனை எழுப்புதி!
மகிதலக் கறைஉறா வெகுதொலைக் கப்பால்-
புலப்பகை வெறுக்கை புகழ்இவை அமைதியைக்
கலைப்பதற் கென்றும் தலைப்படாத் தலத்தை
அறிவுமெய் என்னும் அருவிக ளுடனே
பரமா நந்தத் திருமா நதிபாய்
வெற்புறு குகையைப் பொற்புறு வனத்தைப்
பிறப்பிட மாக்கொடு சிறப்பிமிக் கார்ந்தே-
எழும்கீ தத்தை முழங்குதி நன்கு!
ஓதுக நீ ''ஓம் தத் ஸத் ஓம்'' என. (1)

1904 ஜூலையில் இது விவேக சிந்தாமணி மாத இதழில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து அதன் திறனாய்வுக் கட்டுரை விவேகபானு செப்டம்பர் இதழில் வெளிவந்தது.

'சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகளை உணர்வுபூர்வமாகக் கிரகித்து எழுதப்பட்ட நூல்' என்று அதை சிலாகித்திருந்தார் திறனாய்வாளர்.

## துன்பம் எப்போது நேரும்?

தாமரைக்குத் தந்தை கதிரவன், தாய் தண்ணீர். இருந்தாலும் தாமரையைப் பறித்து நீரில் போட்டால் அழுகிப் போகும். வெயிலில் போட்டால் காய்ந்துவிடும். அதேபோல் தமது நிலையிலிருந்து ஒருவர் தாழ்ந்தால் எங்கிருந்தாலும் துன்பம் நேரும்.

-விவேக சிந்தாமணி

## ம.கோ. குடும்பத்தினரின் பக்தி

ம.கோ. சந்நியாசி கீதத்தின் தமிழாக்கத்தைத் தமது சகோதரர் ஜகதீச ஐயருக்கு சமர்ப்பணம் செய்திருந்தார்.

ஜகதீச ஐயர், பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்காமலே ஏகலைவனைப் போல் தம் குருவாக ஏற்றுக் கொண்டவர். அவரே ம.கோ.விற்கு முதன் முதலில் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் உரைகளையும் உபதேசங்களையும் பற்றி எடுத்துரைத்தவர்.

'சுவாமி விவேகானந்தரின் அருளுரைகளைக் கேட்கவே இவ்வுலகை நீத்து சொர்க்கத்தை அடைந்தாயோ' என்று ம.கோ. தன் மூத்த சகோதரரின் மறைவிற்குப் பின் எழுதிய அஞ்சலியில் ஜகதீச ஐயரின் பக்தியைப் புகழ்ந்து போற்றுகிறார்.

ம.கோ. மற்றும் அவருடைய சகோதரர்கள் மூவரும் சுவாமிஜியின் அருள்தாக்கம் பெற்றவர்கள். அதனாலேயே அந்தக் குடும்பத்தில் முதலில் பிறந்த ஆண் வாரிசுக்கு 'நரேந்திரநாத்' எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தின் செயலரான ராமானுஜாச் சாரியார், ராமகிருஷ்ண மடத்திற்கு நன்கொடை வசூலித்தபோது மதுரையில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தி கணிசமான தொகையைத் திரட்டித் தந்தனர் ம.கோ. குடும்பத்தினர்.

## மாணவர்களும், ம.கோவும்.....

ம.கோ. மதுரை கல்லூரியில் (நேடிவ் காலேஜ் என்று அந்தக் காலத்தில் அறியப் பட்டது) தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றினார். ம.கோ. தமிழ் கற்றுத் தந்ததோடு சுவாமிஜியை ஆராதிக்கவும் மாணவர்களை ஊக்குவித்தார். அவருடைய அனைத்து மாணவர்களும் சந்நியாசி கீதத்தை மனப்பாடமாக அறிந்திருந்தார்கள். அது மட்டுமல்ல; அதன் தமிழாக்கத்தைச் சிறு புத்தகமாகவும் வெளியிட்டனர். அது 1910-இல் ம.கோ. வின் முன்னுரையுடன் வெளிவந்தது.

ம.கோ. மதுரை விவேகானந்த யூனியனின் செயலாளராகவும், அவரே தொடங்கிய 'விவேகோதயம்' என்ற இதழின் ஆசிரியராகவும் இருந்தார். சுவாமிஜியின் பெயரால் ஒரு நூலகமும் அவரால் நடத்தப்பட்டது.

'கோபாலகிருஷ்ண ஐயர் கம்பீரமானவர்; அதிரும் குரல் கொண்டவர். சந்நியாசி கீதத்தை அவர் பாடக் கேட்கும் வாய்ப்பு பெற்றவன் நான். அதை மிகவும் ரசித்தேன்.

'இதைக் காலத்திற்கும் போற்றிப் பாதுகாக்க நினைத்தேன். எனவே ஒவ்வொரு வருடமும் விவேகானந்த ஜயந்தியன்று ராமகிருஷ்ணா ஆரம்பப் பள்ளியில் பாட ஏற்பாடு செய்தேன்' என்று தன் நினைவலையைப் பதிவு செய்கிறார் சிவகங்கை விவேகானந்த வேதாந்த சங்கத்தின் தலைவராக இருந்த ரங்கசாமி ஐயர். இன்றும் அந்தப் பள்ளியில் இந்த நிகழ்வு தொடர்கிறது.

ம.கோ. ராமகிருஷ்ண மடத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். 'சுவாமி அபேதானந்தரின் ஒரு சொற்பொழிவையும், சென்னை விக்டோரியா ஹாலில் சுவாமிஜி ஆற்றிய உரையையும் அவற்றின் சக்தி, உயர்நடை, உணர்ச்சி முழுவதும் வெளிப்படும்படி தமிழாக்கம் செய்திருந்தார்.



சுவாமிஜியைத் தரிசித்த அந்தக் கணத்திலிருந்து வாழ்வின் ஓர் அரிய திருப்பத்தை உணர்ந்து, அதற்கேற்ப வாழ்ந்த ம.கோ. புகழ்பெற்ற தமிழ்க் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், கட்டுரையாளர், தொழில் முறை ஆசிரியர், இலக்கிய இதழ்களின் ஆசிரியர் என்று பல்துறை அறிஞர்.

ம.கோ-வின் அனைத்துத் திறமைகளும் எண்ணங்களும் செயல்களும் சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டிய திசையிலேயே சென்றன. சிறந்த தேசபக்தரான அவர் இளைய சமுதாயத்தினரிடையே வாழ்வியல் மதிப்பீடுகளைப் பதிய வைக்க 19 வயதிலிருந்து பாடுபட்டவர். நாட்டுப் பற்றுமிக்க நல்லவர்களுக்கெல்லாம் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்!

தமிழாக்கம்: மோகனா சூரியநாராயணன்

### ராம நாம மகிமை!

நமக்குப் போதுமான தூய்மையில்லை என்று ராமநாம பஜனை செய்வதை நிறுத்திட வேண்டாம். ராமநாம பஜனையும் தூய்மை அடைவதற்கான சாதனமே ஆகும். இதயத்திலிருந்து எழும் ராம நாமத்தால் மன அடக்கமும் கட்டுப்பாடும் எளிதில் உண்டாகிவிடும். - காந்தியடிகள்

இறைவனின் நாமத்தையும், புகழையும் பாடுவதன் மூலம் ஜபம், யோகம் ஆகியவற்றின் பயனையும் பெறலாம். -பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

3-ஆம் ஆண்டு சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற கதை

# அன்று விதைத்த விதை



**ரூ.8,000**
**பரிசு பெறுபவர்**
**ஜி.மீனாட்சி**

குளிர் உடலைத் துளைத்தது. பனி போர்த்திய மலையும், அடர்ந்த மரங்களுமாய் இயற்கையின் சொர்க்க புரியாய் மிளிர்ந்தது டார்ஜிலிங். ஷர்மிளா குடும்பத்தினர் நேற்றுதான் இங்கு வந்தனர். வந்தவுடனேயே சுற்றிப் பார்க்கக் கிளம்பிவிட்டார்கள்.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் அனு, புவியியல் பாடத்தில் டார்ஜிலிங் பற்றிப் படித்ததிலிருந்து அங்கு அழைத்துப் போகச் சொல்லி நச்சரித்து வந்தாள். அனுவின் நிர்ப்பந்தமும், வேலைப் பளுவிலிருந்து சற்றே விடுதலை கிடைத்ததுவும்... இதோ டார்ஜிலிங் பயணத்தை சாத்தியமாக்கிவிட்டது.

ஐ.ஏ.எஸ் தேர்வாகி, பல கட்டப் பயிற்சிகளை முடித்த பிறகு கடந்த ஆறு மாதங்களுக்கு முன்புதான் ஷர்மிளாவை சுற்றுலாத் துறைக்கு மாற்றியிருந்தார்கள். அதனால் டார்ஜிலிங் பயணம் இயல்பாகவே வாய்த்துவிட்டது.

இன்று ராய் வில்லாவைச் சுற்றிப் பார்க்கப் போகிறார்கள். மனதுக்குள் பல ஆண்டுகளாய் பூட்டி வைத்த ஆசை, ஒரு பூ மலர்வதைப் போல மொட்டவிழ்ந்து விட்டதில் ஷர்மிளாவின் மனசு உற்சாக கீதமிசைத்தது.

கம்பீரமான அந்தக் கட்டடத்தின் ஓர் அறையில் சகோதரி நிவேதிதையின் ஆளுயரப் புகைப்படம். எதிரே ஒளி சிந்தும் குத்துவிளக்கு. அதன் அருகே சந்தன மணம் கமழும் ஊதுவத்தி... அறையெங்கும் விரிந்து கிடக்கும் தெய்விகம்.

அறைக்குள் நுழைந்ததுமே மெய்சிலிர்த்தது ஷர்மிளாவுக்கு. சகோதரி நிவேதிதையின் கருணை பொங்கும், கூர்மையான, அறிவு நிரம்பிய பார்வை அவளை வருடுவதுபோல் மனசுக்குள் ஒரு ஜில்லிப்பு.

அதன் முன் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ தெரியாது. மிதுன் மெல்ல அவளது தோளைத் தொட்ட பிறகுதான் மனம் இயல்பு நிலைக்குத் திரும்பியது.

மிதுனின் பார்வையில் கனிவு கூடியிருந்தது. 'போகலாமா' என்று அவன் கண்களாலேயே கேட்டபோது, மெல்ல தலையசைத்தபடியே எழுந்தாள் ஷர்மிளா. நிவேதிதையின் புகைப்படத்துக்கு எதிரே விழுந்து வணங்கி எழுந்தபோது, நெஞ்சில் அலாதியான நிம்மதி படர்ந்தது.

ராய் வில்லாவை விட்டு வெளியே வந்தனர். தேகத்தை வருடிச் செல்லும் காற்றில் சகோதரி நிவேதிதையின் மூச்சுக் காற்று பரவியிருப்பது போல் ஓர் உணர்வு...

ஷர்மிளாவின் மனம் மழை விழுந்த மண் போல இளகிக் கிடந்தது. தோட்டத்திலிருந்த சிமெண்ட் இருக்கையில் அவள் சாய்ந்து அமர்ந்தாள். மனம் பின் நோக்கி நூற்றாண்டு காலம் கடந்து விரைந்தது.

**கல்கத்தா** பாக்பஜார் பகுதியில் அமைந்திருந்தது அந்தப் பள்ளி. சகோதரி நிவேதிதை, ஜன்னலில் கன்னங்களைப் புதைத்தபடியே தெருவையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கண்களும், மனமும் மாணவிகளை எதிர்பார்த்துக் காத்திருந்தன.

காலை 8 மணி - பள்ளி நேரம். ஆனால் எந்தக் குழந்தையும் எட்டு மணிக்கு வந்ததாய் சரித்திரமில்லை. நினைத்த நேரத்திற்கு, நினைத்தபோது வருவார்கள். தொடர்ந்து வருவார்கள் என்றும் கூற முடியாது. ஆனாலும் நிவேதிதை அவர்களை எதுவும் கடிந்து பேசியதில்லை. அவர்கள் பள்ளிக்கு வருவதே பெரிய விஷயமல்லவா!

மாணவிகள் வரும்வரை பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுதலாம் என்று எழுத ஆரம்பித்தார். அரை மணி நேரத்துக்குப் பிறகு, 'தீதி' (அக்கா) என்ற உற்சாகக் குரல் ஒலித்தது. நிவேதிதையின் மனம் பரபரப்படைந்தது. வேகமாக வாசலுக்குச் சென்றபோது எண்ணெய் காணாத பரட்டைத் தலையுடன் இருந்த பத்து வயது சிறுமி ஒருத்தியைக் கையில் பிடித்தபடியே ஓர் இளம் பெண் நின்றிருந்தாள்.

"வா மிருணாள்... வா... இன்னிக்கு என்ன இத்தனை நேரமாயிடுச்சு?" என்றபடியே


> **உண்மைத் துறவி யார்?**
>
> *ரமண மகரிஷியிடம் ஒருவர் ''உண்மையான துறவி யார்?'' என்று கேட்டார்.*
>
> *அதற்கு மகரிஷி '' 'எல்லாவற்றையும் துறந்து விட்டேன்' என்று நினைப்பவனைக் காட்டிலும் தன் கடமைகளைப் பற்றற்று செய்துகொண்டு நான் செய்கிறேன் என்ற அபிமானமற்று இருப்பவனே உண்மைத் துறவி'' என்றார்.*
>
> –நெ.ராமன்

இறைவன் தன் அடியார்களைக் காக்கிறார். அவர்களுக்குத் துன்பம் தருபவர்களைக் காலமே கடுமையாகத் தண்டிக்கிறது. - சான்றோர் வாக்கு

சிறுமியின் கையைப் பிடித்து பள்ளிக்குள் அழைத்து வந்தார் நிவேதிதை.

“புறப்படுற நேரத்துல இவங்க அப்பா ஒரே தகராறு தீதி... பொட்டப் புள்ளைக்குப் படிப்பு எதுக்குனு எங்களைத் திட்டிட்டே இருந்தாரு.. ஒரு வழியா சமாளிச்சுட்டு வந்தோம்...” என்ற படியே தரையில் அமர்ந்தாள் மிருணாளின் தாய்.

பாக்பஜார் மட்டுமல்ல, கல்கத்தாவில் இருக்கும் பெரும்பாலான பெண்களுக்கும் அவர் ‘தீதி’ தான். வெளிநாட்டுக்காரி என்ற பேதமின்றி அவரைத் தங்கள் குடும்பத்தில் ஒருத்தியாகவே எண்ணி, அன்பு காட்டுவதிலும், தங்கள் பிரச்னை களை அவரிடம் சொல்வதும் இந்தப் பெண்களுக்கு இயல்பாகிவிட்டது. சரளமாக வங்க மொழி யைப் பேச முடியாவிட்டாலும், பேசினால் புரியும் அளவுக்குக் கற்றுக் கொண்டிருந்தார் நிவேதிதை.



“கவலைப்படாதே சரளா... நாளைக்கு நான் உன் கணவரைப் பார்த்துப் பேசறேன்... பெண் குழந்தைகள் படிச்சாதானே குடும்பம் சிறப்படையும். நாடு நல்லாயிருக்கும்.. இது உன் கணவருக்குத் தெரியலையே...” என்றபடி குழைந்த களிமண் குவிக்கப்பட்ட சட்டி ஒன்றை மிருணாளுக்கு அருகே கொண்டு வந்து வைத்தார் நிவேதிதை.

“பொம்மை, கார், ஆட்டுக்கல், அம்மி, தெய்வ உருவங்கள்னு உனக்கு எது தோணுதோ அதைச் செய் மிருணாள்...”

“சரி தீதி...” என்ற மிருணாளின் முகம் தாமரையாய் மலர்ந்தது. அடுத்த சில நிமிடங்களில் மிருணாள் தன்னை மறந்தாள். களி மண்ணில் அவளது சிறு விரல்கள் ஜாலம் புரிந்தன. முயல், பறவைகள், பூக்கள் என்று அவளது கற்பனை உலகம் விரிந்து கொண்டே இருந்தது. தான் பிடித்து வைத்த பிள்ளையாருக்கு, களிமண் பூக்களைக் கோர்த்து மாலையாக்கிப் போட்டு அழகு பார்த்தாள்.

மிருணாளின் முகத்தையே ரசித்துக் கொண்டிருந்த நிவேதிதைக்கு, சுவாமி விவேகானந்தரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. பள்ளியை ஆரம்பித்த புதிதில் நிவேதிதை அவரிடம், “சுவாமிஜி, எந்த முறையில் பள்ளியை நடத்தறதுன்னு எனக்குத் தெரியலை. நீங்கதான் வழி காட்டணும்...” என்றபோது, அவரது முகத்தில் மென்முறுவல் படர்ந்தது.

“அதைக் குழந்தைகளே உனக்குச் சொல்லித் தந்துடுவாங்க நிவேதிதை” என்றார் மெல்லிய குரலில்.

“புரியலை சுவாமி”

“காலப்போக்கில் எல்லாம் புரியும்.”

ஆம். இப்போது புரிந்துவிட்டது நிவேதிதைக்கு. குழந்தை களின் வழியிலேயே போய் பாடத்தைப் புகட்டும் வித்தையை இந்தக் குறுகிய காலத்திலேயே அவர் கற்றுக் கொண்டிருந்தார்.

“மிருணாள், நீ கோர்த்திருக்கிற இந்த மாலையில் எத்தனை பூக்கள் இருக்குதுன்னு தெரியுமா?” மிருணாளுக்கு அருகில் அமர்ந்து நிவேதிதை கேட்டபோது, அவரது முகத்தை ஏறிட்டாள் மிருணாள்.

“இங்கே பார்... இரண்டு... ஐந்து... பத்து.. பதினொன்று... மொத்தம் பதினொன்று பூக்களைக் கோர்த்து மாலையாக்கி யிருக்கே... இதே போல் அடுத்த மாலையில் எத்தனை மலர்கள் இருக்குதுன்னு எண்ணிக் காட்டுப் பார்க்கலாம்....”

இப்போது புரிந்தது மிருணாளுக்கு. விறுவிறுவென்று எண்ண ஆரம்பித்தாள். இவ்வாறு அடிப்படைக் கணக்கை, விளையாட்டாகவே சொல்லிக் கொடுக்கப் பழகிக் கொண்டார் நிவேதிதை.

“சரளா, மிருணாளைத் தினமும் குளிக்கச் சொல்லு. நல்ல ஆடை யைப் போட்டுவிடு...” பேசிக் கொண்டே போன நிவேதிதையை இடைமறித்தாள் சரளா.

“இருக்கிற இரண்டு

திறந்த மனதின் அடையாளம் திறந்த காதுகள்.- டேவிட்

ஸ்ரீ ராமஜெயம்

# வடமாநில புனித யாத்திரை

47 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம்



**18.01.2017** இது 6 நாட்கள் கொண்ட ஆந்திரபிரதேஸ் யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 8,200/-

**18.01.2017** இது 7 நாட்கள் கொண்ட கர்நாடக யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 9,000/-

**25.01.2017** இது 8 நாட்கள் 64 திவ்ய தேசங்கள் கொண்ட தமிழ்நாடு யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 10,300/-

**30.01.2017** இது 7 நாட்கள் கொண்ட கேரள திவ்ய தேசங்கள் அடங்கிய யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 9,500/-

**03.02.2017** இது 8 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 10,000/-

**03.02.2017** இது 11 நாட்கள் கொண்ட மஹாராஷ்டிரா உஜ்ஜெயினி யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 13,000/-

**09.02.2017** இது 15 நாட்கள் கொண்ட பஞ்சதுவாராக யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 17,000/-

**16.02.2017** இது 6 நாட்கள் கொண்ட மலேசியா – சிங்கப்பூர் சுற்றுலா. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 62,000/-

**01.03.2017** இது 4 நாட்கள் கொண்ட துபாய் – அபுதாபி சுற்றுலா. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 43,000/-

**01.03.2017** இது 14 நாட்கள் கொண்ட ஸ்ரீமத் ராமாயண உபன்யாச யாத்திரை. அலகாபாத் - சித்ரகூடம் - நைமிசாரண்யம் - அயோத்தியா - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 10,500/-

**01.03.2017** இது 17 நாட்கள் கொண்ட ஸ்ரீமத் ராமாயண உபன்யாச யாத்திரை. அலகாபாத் - சித்ரகூடம் - நைமிசாரண்யம் - அயோகத்தியா - கயா - புத்த கயா - காசி - சாரநாத் - நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 14,000/-

**16.03.2017** இது 12 நாட்கள் கொண்ட முக்திநாத் – ஜனக்பூர் யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 14,500/-

**20.03.2017** இது 13 நாட்கள் கொண்ட சிக்கிம் – டார்ஜிலிங் – காமாக்யா யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 16,800/-

**02.04.2017** இது 14 நாட்கள் கொண்ட மும்பை 7 ஜோதிர்லிங்க யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 16,000/-

**03.04.2017** இது 12 நாட்கள் கொண்ட காசி யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 12,800/-

**03.04.2017** இது 17 நாட்கள் கொண்ட காசி ஹரித்துவார் யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 17,500/-

**30.04.2017** இது 12 நாட்கள் கொண்ட முக்திநாத் – ஜனக்பூர் யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 14,500/-

**30.04.2017** இது 19 நாட்கள் கொண்ட முக்திநாத் – ஜனக்பூர் – காசி யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 20,000/-

**30.04.2017** இது 28 நாட்கள் கொண்ட முக்திநாத் – காசி – பத்ரிநாத் – கேதார்நாத் யாத்திரை. நபர் ஒருவருக்கு கட்டணம் ரூ. 30,000/-

ஒரே குழுவாக வருபவர்களுக்கு நீங்கள் விரும்பும் இடங்கள் ஏற்பாடு செய்து தருகின்றோம்.



ஆங்காங்கு தங்கும் வசதிகள், ஊர்சுற்றிப் பார்க்க பஸ் கட்டணம், தூங்கும் வசதி கொண்ட இரண்டாம் வகுப்பு ரயில் கட்டணம், கைதேர்ந்த தென்னிந்திய பிராம்மணர்களைக் கொண்டு காலை - காபி, டிபன்; மதியம், இரவு உணவளிப்பதுடன் இங்கு குறிப்பிட்ட அனைத்துச் செலவுகளும் எங்களைச் சேர்ந்தவை. எந்த யாத்திரைகளில் கலந்து கொள்வதானாலும் குறைந்தபட்சம் 125 நாட்களுக்கு முன் முன்பதிவு செய்து கொள்வது நலம்.

மேலும் விவரங்களுக்கு:-

## ஸ்ரீ விஜயலட்சுமி டிராவல் சர்வீஸ்

பழைய எண். 55/3, புதிய எண். 12, சிங்கராச்சாரி தெரு, (நல்ல தம்பி தெரு கார்னர்)
திருவல்லிக்கேணி, சென்னை - 5. ✆ : **28440144** உரிமையாளர் : **S. ஜெயராமன்**
E-mail:sreevijayalakshmitravels@gmail.com ◆ www.sreevijayalakshmitravels.com

உடைகளும் கிழிஞ்சிடுச்சு. கிழிசலை துவைச்சா, அதிகம் கிழிசலாகிவிடும்.. அதுதான்...” சுருக் கென்றது நிவேதிதைக்கு.

“நாளைக்கே மிருணாளுக்கு 2 செட் யூனிபார்ம் தைக்க ஏற்பாடு செய்யறேன். அதைப் போட்டுட்டு வந்தா போதும்...” என்றார்.

அன்றைய பாடம் அத்துடன் முடிந்தது. வறுமையும், அறியாமையும் இந்தியப் பெண்களை எப்படி தன்னம்பிக்கையற்ற வர்களாக, சுய பலம் இல்லாதவர்களாக மாற்றியிருக்கிறது என்பதை நினைத்த போது, நிவேதிதையின் மனதில் இனம் புரியாத வேதனை குடிகொண்டது.

‘ஒவ்வொரு பெண்ணுக்கும் கல்வியறிவு கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்களது பொருளாதார நிலை உயர வேண்டும். சொந்தக் காலில் நிற்கும் துணிச்சலை அவர்கள் பெற வேண்டும்.

‘அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தியா விரைவில் விடுதலை பெறும். வளமையான, வலிமை யான இந்தியா, பெண்களின் கல்வி, சுதந்திரத்தால் மட்டுமே சாத்தியமாகும்...’

இப்படி ஏதேதோ சிந்தித்த படியே நீண்ட நேரம் அங்கேயே அமர்ந்திருந்தார் நிவேதிதை.

மிருணாளைத் தொடர்ந்து நிறைய மாணவிகள் அவரது பள்ளிக்கு வர ஆரம்பித்தனர். சுத்தம், சுகாதாரம்தான் அவரது தலையாய போதனையாய் இருந்தது. பிறகு, படிப்படியாக தொழிற் கல்வியைப் புகுத்தினார்.

**அழகோ அழகு!**

அன்பிற்கு அழகு அறிவு
அறிவுக்கு அழகு கல்வி
கல்விக்கு அழகு படிப்பு
படிப்பிற்கு அழகு பட்டம்
பட்டத்திற்கு அழகு வேலை
வேலைக்கு அழகு கடமை
கடமைக்கு அழகு நேர்மை
நேர்மைக்கு அழகு உண்மை
உண்மைக்கு அழகு உழைப்பு
உழைப்பிற்கு அழகு ஊதியம்
ஊதியத்திற்கு அழகு சிக்கனம்
சிக்கனத்திற்கு அழகு சேமிப்பு
சேமிப்புக்கு அழகு தானம்
தானத்திற்கு அழகு கருணை
கருணைக்கு அழகு இரக்கம்
இரக்கத்திற்கு அழகு மௌனம்
மௌனத்திற்கு அழகு ஆண்டவன்
ஆண்டவனுக்கு அழகு அருள்
அருளிற்கு அழகு பக்தி
எல்லாவற்றிற்கும் அழகு அன்பு.

நூல் : அன்பின் மகத்துவம் ஆயிரம்

“ஓவியம், கைத்தையல், பாய் முடைதல், நெசவு என எது உங்களுக்குப் பிடித்திருக்கிறதோ அதைக் கற்றுக் கொள்ளுங்கள். இந்தப் பள்ளியை விட்டுப் போனபிறகும், இங்க நீங்க கற்றுக் கொண்டது உங்களோட வாழ்நாள் முழுவதும் பயன்படும். பெண்களுக்குப் பொருளாதார சுதந்திரம் வேணும்...

இடையில் நிவேதிதை வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களில் ஈடுபட வேண்டியிருந்தது. பள்ளி இறுதி நாளில் மாணவிகள் மத்தியில் (ஐந்தாறு பேர் மட்டுமே) அவர் உருக்கமாகப் பேசியபோது, மாணவிகளின் கண்களில் ஈரம் கசிந்தது.

“மாணவிகளே, மீண்டும் பள்ளிக்குத் திரும்பி வரும்வரை தினமும் பள்ளியில் செய்த வற்றை விடாம வீட்டிலிருந்தபடியே செய்து பாருங்கள். நான் எங்கிருந்தாலும் உங்களை நினைத்தபடியே இருப்பேன்.

சகோதரியின் பேச்சை மிருணாள் தன் உள்ளத்தில் பொக்கிஷமாகப் பொதிந்து வைத்துக் கொண்டாள். தையலை, அந்தத் தையல் தன் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே ஆக்கிக் கொண்டாள். மீண்டும் அந்தப் பள்ளியை நிவேதிதை திறந்தபோது, மிருணாளுக்குத் திருமணம் ஆகியிருந்தது.

தன் மனம் கவர்ந்த மாணவி மிருணாளை, தன் பள்ளியின் தையல் ஆசிரியராக நியமித்தார் நிவேதிதை. நிவேதிதையின் மரணத்துக்குப் பிறகும், மிருணாள் அங்கு பணியாற்றி நூற்றுக்கணக் கான மாணவிகளை உருவாக்கினாள்.

“**ஷர்மிளா,** அறைக்குப் போகலாமா? நேரமாயிடுச்சு...” மிதுனின் குரல் கேட்டு, தன் உணர்வு பெற்றாள் ஷர்மிளா.

“எங்க குடும்பத்துல முதல்ல வேலைக்குப் போனவங்க சகோதரி யின் பள்ளியில் படிச்ச எங்க பாட்டி தான். அதன் பின் என் அம்மா தேவிகா, எங்க பரம்பரையிலேயே முதல் பட்டதாரியாகி, ஆசிரியை யாக வேலை பார்த்தாங்க.

‘‘நான் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆகிவிட்டேன். பெண்கள் இன்று பல துறைகளையும் ஜெயிப்பதற்கு, சகோதரி நிவேதிதை அன்று போட்ட விதைதான் காரணம்... சகோதரியின் பள்ளியில் தான் படித் ததைப் பற்றி எங்க பாட்டி கதை கதையா சொல்லியிருக்காங்க...

‘‘90 வயசு வரைக்கும் நிறை வாழ்வு வாழ்ந்த அவங்க அடுத்த தலைமுறைக்கு நாம எதை விட்டுட்டுப் போகணும்னு சகோதரி நிவேதிதை யோட மனச்சாட்சியா இருந்து வழிகாட்டி னாங்களோ அந்த வழியில் வருங்காலத் தலை முறைக்கு நான் அதை எடுத்துட்டுப் போக முடியும்னு நம்பறேன்...”

நெகிழ்ச்சியுடன் பேசும் ஷர்மிளாவைத் தன் னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான் மிதுன். அனு அவர்களை நோக்கி ஓடி வந்தாள். தூரத்தில் ராய் வில்லா கம்பீரமாக ஒளிர்ந்தது!❖



# பிரார்த்தனை செய்வோம்!

சுவாமி அபவர்கானந்தர்

அந்தக் கப்பல் ‘க்யூபெக்’ நகருக்குப் பயணித்துக் கொண்டிருந்தது. அதில் ஜார்ஜ் முல்லர் என்பவர் அந்நகரில் ‘பிரார்த்தனையின் மகிமை’ என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவதற்காகப் பயணித்துக் கொண்டிருந்தார்.

திடீரென மூடு பனி வந்து கப்பல் முழுவதையும் கவ்விக் கொண்டது. மாலுமி செய்வதறியாது திகைத்துப் போனார்.

முல்லரிடம் வந்து, ‘மூடு பனி எப்போது விலகுமோ தெரியவில்லையே? கப்பல் க்யூபெக்கிற்கு சீக்கிரம் போக வேண்டுமே’ எனக் கூறி அங்கலாய்த்தார்.

முல்லர் அதற்கு, ‘‘மூடுபனி விலக ஒரே வழி உள்ளது’’ என்றார்.

‘‘என்ன வழி?’’

‘‘பிரார்த்தனை செய்வது தான் அதற்கு வழி.’’

‘‘இதென்ன பைத்தியக்காரத் தனம்! பிரார்த்தனையால் மூடுபனி விலகுவதாவது?’’ - என்று கூறி நகைத்தார் மாலுமி.

‘‘நான் வாழ்க்கையில் சாதித்துள்ள அத்தனை காரியங்களும் பிரார்த்தனையின் பலத்தினால்தான் நடந்தேறியுள்ளன’’ - என்று முல்லர் பதிலளித்தபடி தன் அறைக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டார்.

சற்று நேரம் கழித்து மாலுமி அங்கு வந்து முல்லரிடம், ‘என்ன ஆச்சரியம்! மூடு பனி முற்றிலும் போய்விட்டது’ எனக் கூறி மகிழ்ந்தார்.

மேற்கண்ட சம்பவம் பிரார்த்தனையின் மகிமைக்கு ஒரு சான்று. பிரார்த்தனை செய்வது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது.

இந்த உலகம் முழுமையான பாதுகாப்பை உள்ளடக்கியது என்று கூறிவிட முடியாது. எந்தக் கணத்திலும் எதுவும் நடக்கலாம். வாழ்வில் ஏதாவதொரு கட்டத்தில் தனக்கு மீறிய சக்தியிடம் பிரார்த்தனை செய்யாதவர்கள் என்று யாரும் இருக்கவே முடியாது. சிறுவர் சிறுமியர் முதல் பெரியோர் வரை பிரார்த்தனையைத் துணை கொள்கின்றனர். பயமும், கவலைகளும், துன்பங்களும் விலக இறைவனிடம் இறைஞ்சுவோரின் எண்ணிக்கை எண்ணிலடங்காதது.

பிரார்த்தனையில் இருவகை: காமியம் மற்றும் நிஷ்காமியம்.

லௌகீக நோக்கங்களுக்காகச் செய்யப்பட்டால் அது காமிய பிரார்த்தனை. அதுவே ஆன்மிக முன்னேற்றத்திற்காகவும் இறைவனை அடைவதற்காகவும், உலக மேன்மைக்காகவும் செய்யப்படும்போது நிஷ்காமியமாகிறது.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் பிரார்த்தனையின் முக்கியத்துவத்தை அமுதமொழிகளில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்.

‘இறையனுபூதிக்கான வழி எது?’ என்ற கேள்விக்கு அவர் தந்த பதில் ‘மன ஏக்கமும் பிரார்த்தனையுமே வழி.’

மேலும் அவர் கூறுகிறார்: ‘இறையருளாலேயே காட்சி கிடைக்கிறது. அவர் ஞானசூரியன். அவரது ஒரே ஒரு கிரணம்தான் இந்த உலகம் முழுவதற்கும் அறிவொளியைக் கொடுக்கிறது. அதனால்தான் நாம் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள முடிகிறது; எத்தனையோ விதமான கலைகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது. தமது ஒளியை அவரே தமது முகத்தின் மீது ஒருமுறை திருப்புவாரானால் அவரைக் காண முடியும்.

‘போலீஸ்காரன் இரவு வேளையில் கையில் லாந்தரை வைத்துக் கொண்டு சுற்றுகிறான். அவனுடைய முகத்தை யாரும்பார்க்க

மனத்திறன் வளர வளரப் பேச்சு குறையும். - ஒரு பெரியவர்

முடிவதில்லை. ஆனால் அந்த விளக்கின் ஒளியால் அவன் மற்றவர்களின் முகத்தைப் பார்க்க முடிகிறது, மற்றவர்களும் ஒருவருக் கொருவர் முகத்தைப் பார்த்துக் கொள்ள முடிகிறது.

'யாராவது போலீஸ்காரனைப் பார்க்க விரும்பினால், அவனிடம் சென்று, ''ஐயா, தயவு செய்து விளக்கை உங்கள் முகத்தின் பக்கமாக ஒருமுறை திருப்புங்கள். உங்களைப் பார்க்க விரும்புகிறேன்'' என்று கேட்க வேண்டும்.

' ''பகவானே! ஞானஒளியைக் கருணை கூர்ந்து உங்கள் மீது ஒருமுறை திருப்புங்கள், நான் உங்களைப் பார்க்கிறேன்'' என்று பிரார்த்தனை செய்.'

இறைவனை நாம் சென்றடையாதிருக்கக் காரணம் நம்மிடம் உள்ள பற்றே. பிரார்த்தனையே அதை நீக்குவதற்கான எளிய வழி.

ஆகவே குருதேவர் கூறுகிறார்: '...நாமஜபம் செய். அத்துடன் பிரார்த்தனையும் செய். இறைவனிடம் பக்தி உண்டாக வேண்டும். இரண்டொருநாள் மட்டுமே நிலைக்கக்கூடிய செல்வம், புகழ், உடலின்பங்கள் ஆகியவற்றின் மீதுள்ள பற்று குறைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்யுங்கள்.'

நாம் செய்யும் பிரார்த்தனைகளை இறைவன் கேட்கிறாரா என்றால் நிச்சயமாகக் கேட்கிறார். இதற்கும் குருதேவர் பதிலளிக்கிறார்: 'மன ஏக்கத்துடன் அவரிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிரார்த்தனை நம் மனதின் ஆழங்களிலிருந்து வருவதால் அவர் நிச்சயமாக அதற்குச் செவி சாய்க்கிறார்.'



பிரார்த்தனையின் மகத்துவத்தை வேதங்களில் காணலாம். வேதங்களில் நான்கு பிரிவுகள் உண்டு. அவை மந்திரங்கள், பிராம்மணம், ஆரண்யகம் மற்றும் உபநிஷத். மந்திரங்கள் என்ற பகுதியில்தான் எண்ணற்ற துதிகளும் பிரார்த்தனைகளும் அடங்கியுள்ளன. மந்திரங்களின் தாய் எனப் போற்றப்படும் காயத்ரி மந்திரம் பிரார்த்தனையின் வடிவமே அன்றி வேறில்லை.

வேதங்களிலுள்ள பிரார்த்தனைகளில் ஒன்று இது: 'இருளைப் போக்குபவரே! நெஞ்சார உம்மை வணங்குகிறோம். தினந்தோறும் அல்லும் பகலும் உம்மை அணுகுகிறோம். மகனுக்குத் தந்தை எளிதாக அணுகக் கூடியவராவது போல் எமக்கு நீர் எளிமை உடையவராகுக.

'சுயம்பு ஜோதியான நாதரே! நீங்கள் எம்முடன் இருந்து எமக்கு ஆசிகளை வழங்குவீராக!

'எல்லா உலகங்களையும் கவனித்து வருபவரும், அனைத்துப் பொருட்களுக்கும் ஆதியான மெய்ப்பொருள் ஆனவரும், எல்லாவற்றையும் முழுமையாக அறிபவருமான அந்த இறைவன் நம்மை எல்லோரையும் காக்கட்டும். ஓம் சாந்தி சாந்தி சாந்தி!'

பிரார்த்தனை என்பது கடவுளுடன் பேசுவது; அவரிடம் வேண்டியதைக் கேட்பது. அது மனித ஆன்மாவை பரமாத்மாவுடன் ஒன்றிணைப்பது.

பிரார்த்தனை எப்படி அமைந்திருக்க வேண்டும்?

ஒருவர் தன் அன்பிற்குரியவரிடம் பேசுவது அவருக்குரியதாக, ஆனந்தம் தருவதாக இருப்பதுபோன்று பிரார்த்தனையானது கடவுள் மற்றும் பிரார்த்திப்பவர் இருவருக்கிடையில் மட்டுமே இருக்க வேண்டும்.

அது முயற்சியின்றித் தாமாக வெளிப்பட வேண்டும். ஒருவர் தனக்கு எப்படிப் பிடிக்குமோ அப்படியே பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனை முழுமை பெற உண்மையான ஆர்வம் இருப்பின் ஒருவரின் பிரார்த்தனையே அதற்கு வழி காட்டிச் செல்லும்.

பிரார்த்தனை இரண்டு வகையாகச் செய்யப்படுகிறது. ஒன்று கோயில்களிலோ, பூஜையறையிலோ இறைவிக்ரகங்கள் அல்லது படத்தின் முன்போ செய்வது.

மற்றது தன் உடலாகிய கோயிலில், உள்ளமாகிய கர்ப்பகிரகத்தில், இறைவனை எழுந்தருளச் செய்து மானசீகமாகப் பிரார்த்திப்பது.

பிரார்த்தனை மனிதனைச் சாதாரண நிலையிலிருந்து தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது.

எப்படிப் பிரார்த்திக்க வேண்டும்?

நேரம் தவறுதல் பண்பில் குறைந்ததாகும். - மேசன்

ஹிந்து ஒருவன் மதம் மாறினால் நம்மில் ஒருவன்
குறைவதுடன் எதிரிகளில் ஒருவன் அதிகமாகிறான்!
- சுவாமி விவேகானந்தர்



# தாய் மதம் தழைத்தோங்கிட ...



ஹிந்துக்கள் தலைநிமிர்ந்து நடந்திட!
ஒரே நாடு ஒரே மக்கள்
என்பதை ஊர்தோறும் பரப்பிட!

## "தெய்வீக இசைக் கடிகாரம்"

விவேகானந்தரின் பொன்மொழிகள், திருமந்திரம், பகவத்கீதை பரப்பிடும் கருவி
உங்கள் கோயிலின் பழைய ஒலிபெருக்கியோடு இணைத்தால்
காலை 5 முதல் இரவு 10 வரை நேரம் சொல்லி மணிக்கொரு மந்திரம் ஒலிக்கும்!

ஏற்பாடு
**தமிழ்ச் சமய பிரச்சார் பாரதி**
246, ரங்கராஜபுரம் பிரதான சாலை, கோடம்பாக்கம், சென்னை - 24.
☎ : 72 00 00 54 60 93800 90100
Email : thirumoolarsabai@gmail.com

தெய்வீக இசைக் கடிகாரம் மதிப்பு
**ரூ.5100/-**

Space Sponsored by :
**GKR OPTICS**
(Opp. to Kodambakkam Power House) Chennai - 600 024.
☎ : 044-2483 0713 / (M) : 97907 97177



# பக்தி உலா வழங்கும் யாத்திரைகள்

**04.11.2016 முதல் 12.11.2016 : ஆந்திர விஜயம் -** புட்டபர்த்தி - மந்திராலயம் - மகாநந்தி - அகோபிலம் - மட்டபள்ளி - வாடபள்ளி - வேதாத்திரி - பத்ராச்சலம் - ராலி - அன்னவரம் - பிட்டாபுரம் - சாமல்கோட்டா - திராட்சாராமா - பீமாவரம் - பாலகொல்லு - துவாரகா திருமலா - விஜயவாடா - மங்களகிரி - அமராவதி - குண்டூர்

**17.12.2016 முதல் 24.12.2016 : மார்கழி உற்சவம் -** ஆழ்வார்களும் - நாயன்மார்களும், ஸ்ரீரங்கநாத தரிசனமும், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் ரங்கமன்னாரும், இத்துடன் பாண்டியநாடு 18 திருப்பதிகள் - திருசெந்தூர் - மதுரை மீனாட்சி - இராமேஸ்வரம் - நவகயிலாயம் (9 கோயில்கள்)

**06.02.2017 முதல் 19.02.2017 : குஜராத் - ராஜஸ்தான் விஜயம் -** அகமதாபாத் - பாவ் நகர் - சோம்நாத் - பாலக் - முல்துவாரகா - போர்பந்தர் - ஜாம்பவான் குகை - துவாரகா - பேட் துவாரகா - கோபிதளம் - நாகேசம் - டாக்கூர் துவாரகா - அம்பாஜி - சோட்டா அம்பாஜி - உதய்பூர் - ஸ்ரீநா துவாரகா - காங்குரோலி துவாரகா - புஷ்கரம் - அஜ்மீர் - ஜெய்பூர் - சென்னை

**22.03.2017 முதல் 31.03.2017 : காசி யாத்திரை (பூரண வைதீக ஏற்பாடுகளுடன்)**

**பித்ருக்களின் பிரித்திக்காக ஒரு பிரத்யேக விஜயம்**
**புனித அமாவாசையில் - புண்ணிய காசி விஜயம்**
பூரண வைதீக ஏற்பாடுகள் செய்து தரப்படுகிறது

**புறப்படுவோம் வாரீர்! ரயில் யாத்திரைகளுக்கு 120 நாள் முன்பே முன்பதிவு செய்வது சிறப்பு!!**

விபரங்களுக்கு : **ஆர். பட்டாபிராமன்,** ஒருங்கிணைப்பாளர்
**பக்தி உலா, அசோக் மெடிக்கல்ஸ்,**
10, தண்டீஸ்வரம் மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை - 42.
**22434374 - 9042042138 - 9840753969**

யாத்திரைகள் யாவும்
உணவு, தங்குதலுடன்

மனம் நம்புவதை மனிதன் நிச்சயம் அடைவான். - ஹில்



இதை மகான்களே தங்கள் வாழ்க்கையில் காட்டியுள்ளனர். இறைவனின் திருவடிகளை அடைவதற்கு சக்தியோ, திறமையோ இல்லாத நிலையில் அவனை அடைய வேண்டும் என்ற தீவிர ஏக்கமிருந்தால், அந்த ஏக்கமே பிரார்த்தனையின் மூலம் இறைவனிடம் சென்றடைகிறது.

தவமே புரிந்திலன்; தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன்;
அவமே பிறந்த அருவினையேன்;
உனக்கு அன்பர் உள் ஆம்
சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்;
நின்திருவடிக்கு ஆம்
பவமே அருளு கண்டாய்; அடியேற்கு
எம் பராபரமே. **(5.1.5)** (திருச்சதகம்)

'எம்பெருமானே, நான் தவம் செய்ததில்லை, குளிர்ந்த மலர்களைத் தூவி முறையாக உன்னை வழிபட்டதில்லை. மண்ணில் வீணாகப் பிறந்த பாதகன் நான். பக்தர்களுக்கே உரியதாகிய சிவ போதம் என்னும் அழியாத செல்வத்தை நான் பெற்றிருக்கவில்லை. உன்னை அடைவதற்கான நல்ல பிறவியை எனக்குத் தந்தருள்வாய்' என்று இறைஞ்சுகிறார் மாணிக்கவாசகர்.

பிரார்த்தனை இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை வலுப்படச் செய்து, இவ்வுலகில் இறைவனின் சந்நிதியில் அவருடனேயே வாழ்ந்து, முடிவில் அவரது திருவடியில் ஒன்றாகும் நிலைக்கு இட்டுச் செல்கிறது.

ஆனால் 'கருணையே இல்லாத இறைவனிடம் கெஞ்சி இறைஞ்சுவதுதான் பிரார்த்தனை. இவை யாவும் பிச்சைக்காரத்தனம்' என்றெல்லாம் சிலர் பிதற்றலாம்.

உண்மையில் பிரார்த்தனை என்பது மகன் தந்தையிடம் தன் தேவைகளை நிறைவேற்றித் தரும்படி கேட்பது போன்றது. தந்தை மகனுக்கு வேண்டியவற்றை உரியகாலத்தில் தாமே செய்வார். ஆனால் மகனே அன்புடனும் ஆவலுடன் கேட்கும்போது உரிய காலத்திற்கு முன்பே அவர் செய்து விடுவதைப் போன்றது பிரார்த்தனை.

உணவின் மூலம் உடல் சக்தி பெறுவதைப் போன்று பிரார்த்தனையின் மூலம் ஆன்மிக வாழ்வுக்கு வேண்டிய சக்தியை ஒருவர் பெறுகிறார். அத்துடன் பிரார்த்திப்பவரைப் பாதுகாக்கும் கவசமாகவும் அது ஆகிறது.

நிஷ்காமியப் பிரார்த்தனை ஆன்மிக சாதகர்களை ஆசைகளிலிருந்து விடுவிக்கிறது. மனதிற்கு உயர் நோக்கத்தைத் தந்து அதனைத் தூய்மையாக்குகிறது. அனைத்திற்கும்மேல் இறையனுபூதிக்கான எல்லாத் தடைகளையும் நீக்கி இறையருள் பெறத் துணை புரிகிறது.

நாளடைவில் பிரார்த்தனை தியானத்தோடும், தியானம் சமாதியோடும் முடிகிறது. சமாதி இறைவனோடு ஒன்றாகும் நிலை. இதுவே பிரார்த்தனையின் முடிவான லட்சியம்.

பிரார்த்தனை நிறைவேறுவதற்கும் சில நிபந்தனைகள் தேவைப்படுகின்றன.

- பிரார்த்தனை இயல்பாக வெளிப்பட வேண்டும். அது இதயத்தின் ஆழங்களிலிருந்து வந்திருக்க வேண்டும். இதற்கு மன ஏக்கமே துணை புரிகிறது.
- பிரார்த்தனையில் அவநம்பிக்கை கூடாது. நம்பிக்கையே பிரார்த்தனையின் முதல்படி.
- கடவுளின் பாதுகாப்பில் இருக்கும் உணர்வு வலுப்பட்டிருக்க வேண்டும்.
- கடவுளிடத்தில் முழுச் சரணாகதி அடைந்திருக்க வேண்டும்.
- கடவுளைத் தவிர வேறு யாரும் தனக்கு உதவ முடியாது என்ற மனோநிலை இருக்க வேண்டும். ஏனெனில் தனக்குத்தானே உதவி செய்ய முடியாதவருக்கே இறைவன் உதவுகிறார்.

நிறைவாக பிரார்த்தனையைப் பற்றி மகாபுருஷர் சுவாமி சிவானந்தர் கூறுவதைக் காணலாம்.

'பிரார்த்தனை உண்மையில் ஆன்மிக வாழ்க்கைக்குத் துணை புரிகிறது. பிரார்த்தனை அனுபூதிக்கு இட்டுச் சென்று கடவுளின் சந்நிதியிலேயே இருக்கும்படி செய்கிறது. அது கடவுளை எல்லா நேரத்திலும் நினைத்திருக்கும்படி செய்கிறது.' ❖

> முதியவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கௌரவம், கடவுளுக்குச் செய்யப்படும் மரியாதையாகும். முதியவர்களுக்கு அவர்களது வயோதிகத்தின் காரணமாக மதிப்பளிக்கும் ஒவ்வொரு இளைஞருக்கும், அவர்களது வயோதிகப் பருவத்தில் மரியாதை செய்பவர்களைக் கடவுள் நியமிக்கிறார். - நபிகள் நாயகம்

இறைவனின் அருளைப் பெற்றவன் கடவுளை மட்டுமே விரும்புவான்; வேறு எதையும் விரும்ப மாட்டான். - பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

ராசிகேசவன்


ஜெசிகாகாக்ஸ்

# சாதிக்க முடியாதவர் என்று

திரு. ராசிகேசவன் பார்வையில்லா மாற்றுத் திறனாளி. ஆனால் இந்தியாவெங்கும் சுற்றுப்பயணம் செய்து தமது அறிவு மற்றும் நினைவாற்றலால் இளைஞர்கள் மற்றும் மாணவர்களிடத்தில் உற்சாகத்தையும் ஊக்கத் தையும் ஊட்டி வருகிறார். சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடம் நடத்திய இளைஞர் முகாமில் அவர் ஆற்றிய உரையிலிருந்து....

எல்லோராலும் சாதிக்க முடியும். 'என்னால் முடியுமா?' என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டு தளர்ந்து விடாமல், 'முடியுமே என்னால்!' என்று முயற்சியில் இறங்கினால் யாராலும் சாதிக்க முடியும். அப்படி சாதித்த ஒரு சிலரது வாழ்க்கையைப் பார்ப்போமா!

**வில்மா** 1940-இல் அமெரிக்காவில் ருடால்ஃப் என்பவருக்கு ஐந்தாவது குழந்தையாகப் பிறந்தவர்.

2-வது வயதில் வில்மாவை நிமோனியா தாக்கியது. கூடவே போலியோ இலவசமாகக் கிடைத்தது. அதனால் இரு கால்களும் பாதிப்புற்றன.

அந்தக் குழந்தையின் ஆறாவது வயதில் ஒரு கனவு. கனவு என்றால் தூக்கத்தில் வந்ததல்ல. மேதகு அப்துல்கலாம் சொன்னது போன்றது. அவள் தன் தாயிடம் கூறினாள்: 'இந்த பூமியில் அதிவேகமாக ஓடும் பெண் என்ற பெயர் எனக்கு வரவேண்டும்.'

ஆனால் நகருவதற்கே வீல்சேரும், ஓரடி எடுத்து வைக்க இன்னொருவரின் உதவியும் தேவை என்ற நிலை.

வில்மா கூறியதைக் கேட்டு அவளது தாய் அவளை அணைத்தபடி, 'நீ கண்டிப்பாக வருவாய், சாதிப்பாய்' என்று வாயால் சொன்னார்; ஆனால் மனதிற்குள் அழுதார்.

ஆனால் வில்மா வெறும் வார்த்தைகளால் அதைச் சொல்லவில்லை. தன் உடம்பிலிருக்கும் ஒவ்வொரு செல்லுக்கும் உயிர் கொடுத்துச் சொன்னாள். தினமும் அதையே மனக்கண்ணால் கண்டு வாழ்ந்தாள்.

'நீ என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்' என்று சுவாமி விவேகானந்தர் கூறியது போன்றே நடந்தது. இதுதான் ஆக்கபூர்வ சிந்தனையுடன் கூடிய வாழ்வு.

9-வது வயதில் அவர் காலில் இருக்கும் கட்டைக் கழற்றிவிட்டு வலியையும் தாங்கிக் கொண்டு ஒவ்வோர் அடியாக நகர்ந்தார்; அடுத்து ஓடினார். அதைக் கண்டு பயிற்சியாளர் அவளிடம், 'நீ ஓடுவதற்கென்றே பிறந்தவள்' என்று கூறி, உன்னை யாராலும் தடுக்க முடியாது என்று உற்சாகமூட்டினார்.

அந்தப் பெண் முன்னேறி 1956-இல் ஆஸ்திரேலியா, மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக்கில் கலந்து கொண்டார். பிறகு 1960-இல் இத்தாலி, ரோம் நகரில் நடந்த ஒலிம்பிக்கில் 100 மீ., 200 மீ., 400 மீ.... ஓட்டப்பந்தயங்கள் மூன்றிலுமே பல சாதனைகளை முறியடித்தார்.

**ஜெசிகாகாக்ஸ்** என்ற பெண்மணிக்கு கால்கள் மட்டுமே இருக்கின்றன. ஆனாலும் அவர் இன்று பைலட். அத்துடன் டேக் வென்டோவில் இரண்டு முறை உலக சாம்பியன்.

34 நாடுகளுக்கு அவர் பயணம் செய்து, தமது சொற்பொழிவுகளால் மக்களை உற்சாகப்படுத்தியிருக்கிறார்.

**ஷெல்லிமேன்** ஓர் அமெரிக்கப் பெண். இவரும் போலியோவால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாதவர். பெற்றோர்கள் அவரை நீரிலேயே இருந்தால் காலுக்குச் சக்தி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நீச்சல் குளத்தில் விட்டார்கள்.

சிறிது சிறிதாக முன்னேற்றம் ஏற்பட்டது. ஆறு வருடங்களுக்குப் பிறகு, அவர் ஒலிம்பிக்கில் நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கம் வாங்கினார். கால் ஊனமுற்ற நிலையிலிருந்து மீண்டு நன்றாக இருப்பவர்களுடன் போட்டியிட்டு ஒலிம்பிக்கில் உலக சாதனை சாதித்தவர் ஷெல்லிமென்.

**சிலுக்குரி பரமாத்மா** தெலங்கானாவில் வசிக்கிறார். ஒரு

**ஐந்து விதப் பிரார்த்தனைகள்**

தூய்மை, நீதிதவறாமை, பகவானது பெயரால் தானம் செய்வது, மனத்தூய்மை பெற முயற்சி செய்தல், இறை வழிபாடு என பிரார்த்தனைகள் ஐந்து வகைப்படும். - குருநானக்

தொழிலில் முக்கியமானது நேர்ந்தவறாமை. அது இல்லாமல் எந்த முறையும் பயன்தராது. - ஸெசில்

டாக்டர் கர்ப்பிணிப் பெண்ணிற்கு மருந்து எழுதிக் கொடுத்தார். அது கர்ப்பத்தில் இருக்கும் சிசுவின் வளர்ச் சிக்கானது. ஆனால் அந்த மருந்துச் சீட்டை வாசித்த மருந்துக் கடைக்காரர் மருந்தின் Spelling-ல் சிறிது வித்தியாசமான மருந்தைக் கொடுத்துவிட்டார். அது கருவிற்கு எதிர்மறை விளைவைக் கொடுக்கக்கூடியது. இதனால் அந்தச் சிசு இறந்துவிட்டது. இது சிலுக்குரி பரமாத்மாவின் குடும்பத்தில் நடந்த நிகழ்ச்சி.

# யாருமில்லை

மருத்துவர்கள் இதைப் போல புரியாத முறையில் எழுதுவதால் மருந்துகள் மாற்றிக் கொடுக்கப்பட்டு ஒரு வருடத்தில் 40,000 நோயாளிகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று ஓர் அமெரிக்க ஆய்வு தெரிவிக்கிறது.

இதற்கு நாம் ஏதேனும் தீர்வு கண்டுபிடிக்க வேண்டும் என்று தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் (Right to Information Act) விவரம் கேட்டு எழுதினார். பதில் இல்லை. பிரதம மந்திரி அலுவலகத்திற்கு எழுதினார். பதில் இல்லை. கடைசியாக நீதிமன்றத்திற்குச் சென்று போராடினார்.

உச்சநீதிமன்றத்தில் அவருக்கு நீதி கிடைத்தது. 2012-ல் மருத்துவர்கள் Capital letter-ல்தான் Prescription-ஐ எழுத வேண்டும் என்கிற உத்தர வைப் பெற்றார். இன்று பயனாளிகள் சிலுக்குரி பரமாத்மாவைப் பாராட்டுகிறார்கள்.

**சாது கிருஷ்ணதாஸ்.** மும்பை குண்டு வெடிப்பைத் தொடர்ந்த கலவரத்தில் இவரது டீக்கடை அழிக்கப்பட்டது. கடைசியாக மிஞ்சியிருந்தது ஒரு பழைய சைக்கிள் மட்டுமே.


சாது கிருஷ்ணதாஸ்

அவர், ‘ஒரு மனிதனாகிய நான் இன்னொரு மனிதனைத் துன்புறுத்தமாட்டேன்’ என்று ஒரு பலகையில் எழுதி, அதைத் தன்னிடம் மிஞ்சியிருந்த சைக்கிளில் கட்டி, தெருத் தெருவாகச் சென்று அதை வாசித்தார்.

மக்கள் முதலில் இதைக் கவனிக்கவில்லை. அதன்பிறகு சிலர் கேட்க ஆரம்பித்தனர், சிலர் யோசிக்க ஆரம்பித்தனர், சிலர் அதைப் பின்பற்ற ஆரம்பித்தார்கள்.

அவர்களுக்கு யாராவது ஒருவர் நம்மை அடித்துவிட்டால், அவனைத் திருப்பி அடிக்க வேண்டும், என்ற எண்ணம் வந்தபோதெல்லாம் இந்த வார்த்தை நினைவுக்கு வந்தது. 'நான் மனிதன், நான் இன்னொரு மனிதனைத் துன்புறுத்தக் கூடாது.' - இந்த எண்ணம் தொடர்ந்து மக்களிடம் பிரதிபலித்தது.


வில்மா

யுனெஸ்கோ அமைப்பு கிருஷ்ணதாஸிற்கு அமைதி விருது கொடுத்தது. ஒரு எளிய வார்த்தை மூலம் இன்று ஒரு சாதனையாளர் இடத்தில் இருக்கிறார் சாது கிருஷ்ணதாஸ்.

அடுத்தது **பல்பீர்சிங் சீச்சாவல்**. சண்டிகரில் இன்று யாரைக் கேட்டாலும் இவரைத் தெரியும். அந்த அளவுக்கு எல்லோர் மனதிலும் இவர் எப்படி நின்றார்?

அதற்கு முதலில் சீக்கிய மத ஸ்தாபகரான குருநானக் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். நானக் 13-வது வயதில் ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்தார். அப்போது ஒருவர் பொருள்களை வாங்குகையில் 1, 2, 3 என அவற்றை எண்ணிக் கொடுக்கிறார். 13 ஐ சொல்லும்போது ‘தேரா’ என்று சொல்கிறார்.

‘தேரா’ என்றால் உன்னுடையது. உடனே ‘மேரா’ -என்னுடையது என்ற எதிர்ப்பதம் நானக்கின் நினைவுக்கு வருகிறது.

‘தேரா’- ‘இறைவா எல்லாமே உன்னுடையது; எல்லாம் நீயே’ என்ற எண்ணம் அவருக்கு உதித்தது. உடனே சென்று அங்கு இருந்த ‘ஸ்வேத கங்கா’ என்கிற நதியில் மூழ்கி எழுந்தார். அனுபூதிமானாய் ஆனார்.

அந்த இடத்தைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்தார் இந்த சீச்சாவல். அந்த நதி முழுவதும் சாக்கடையாக மாறியிருந்தது. பன்றிகள்



மேய்ந்து கொண்டிருந்தன. எலிகள் செத்திருந்தன. அதைப் பார்த்து நொந்து போய் விட்டார்.

தமது மதகுரு குருநானக் அனுபூதி பெற்ற இடம் இவ்வளவு மோசமாக இருக்கிறதே. இதை எப்படியாவது மாற்ற வேண்டும் என்று நினைத்தார். எவ்வளவோ முயற்சி செய்தார்.

அவர் சொன்னார்: 'சீக்கியர்கள் ஒருநாள் தங்கள் மதத்திற்காக வேலை செய்ய வேண்டும் என்று உள்ளது. எனவே நீங்கள் வாரத்தின் ஒருநாளை எனக்கு ஒதுக்குங்கள். உங்களுடைய மாத வருமானத்தில் ஒருநாள் வருமானத்தை என்னிடம் கொடுங்கள். இந்த இடத்தைச் சுத்தம் செய்துவிடலாம்.'

ஒரு சிலர் இவருக்கு உதவி செய்தார்கள். அந்த ஆற்றில் கழிவுகள் கலப்பதைத் தடுக்க அரசிற்குக் கடிதமும் எழுதினார். சிறிது பலன் கிடைத்தது.

இவர் மேலும் மக்களிடம், 'இனி நம் குடும்ப நிகழ்ச்சிகளை இந்த ஆற்றங்கரையில் தான் நடத்த வேண்டும்' என வேண்டுகோள் விடுத்தார். அத்துடன், 'எந்த நிகழ்ச்சியை நடத்தினாலும் நாம் முதலில் போகும்போது எப்படி இருந்ததோ அதைவிட அதிகமாக அந்த இடத்தைச் சுத்தப்படுத்திச் செல்ல வேண்டும்' என்றும் கூறினார்.

இதற்கு எல்லோரும் ஒத்துழைத்தார்கள். பிறகு நல்ல மழை பெய்தது. சாக்கடை சுத்தமாயிற்று. அதில் சிறியதாக அணை கட்டி நீரைத் தேக்கினார். அங்கே 40 அடி தோண்டினாலே தண்ணீர் கிடைக்கும் அளவிற்கு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. சுத்தமான நீர் கிடைத்தது.

சாக்கடையாக இருந்த அந்த 110 கி. மீ. நீளமுடைய 'ஸ்வேத கங்கா' இன்று சுத்தமான, ஒரு புனிதமான நதியாகத் தனி ஒருவரின் முயற்சியால் மாறியிருக்கிறது.

அடுத்ததாக, இன்று உலகத்திலேயே அதிக வேகத்தில் ஓடுபவர் **ஹுசைன் போல்ட்.** அவரிடம் ஒருமுறை பத்திரிகையாளர் கேட்கிறார் : 'எப்படி உங்களால் மூன்று முறை வெற்றி பெற முடிந்தது?''

''நான் முதல் முறை வாங்கிய ஒலிம்பிக் கோல்டு மெடலை என்னுடைய ஆசிரியரின் காலடியில் வைத்து, 'இது உங்களுக்கே சொந்தமானது' என்று கூறி ஆசி வேண்டினேன்.

'' 'என்ன ஆயிற்று உனக்கு? இது உனக்குத்தானே சொந்தம்' என்று அவர் தங்கப் பதக்கத்தை திருப்பிக் கொடுத்தார். நான் அதை மறுக்க, அவர் மறுக்க இறுதியாக ஆசிரியர் சொன்னது, 'சரி நான் இதை வைத்துக் கொள்கிறேன், ஆனால் ஓர் ஒப்பந்தம்.

'' 'இதை ஏலம் விட்டு, அதில் வரும் பணத்தால் மருத்துவமனை, பள்ளிக்கூடம், கோவில் இந்த மூன்றிற்கும் மின்சார வசதி செய்து கொடு' என்றார்.

''நான் செய்தித்தாளில் விளம்பரம் செய்தேன். அந்த ஒலிம்பிக் கோல்டு மெடல் சில கோடிகளுக்கு ஏலம் போயிற்று. அதன் மூலம் மின்சார வசதி ஏற்படுத்தினேன்.

''அங்கிருக்கும் எல்லோரும் மகிழ்ந்தார்கள். அதைப் பார்த்த பிறகு ஒரு இன்ஜினீயரிடம் சென்று 'இந்த மொத்த கிராமத்திற்கும் மின்சாரம் கொண்டு வர எவ்வளவு ஆகும்?' என்று கேட்டேன்.

''அதற்கு அவர், 'நீ இன்னும் இரண்டு கோல்டு மெடல் வாங்க வேண்டும்' என்றார். நான் மீண்டும் பயிற்சி செய்தேன். இரண்டு கோல்டு மெடல் வாங்கி அந்த கிராமத்திற்கே மின்சார வசதி ஏற்படுத்தித் தந்தேன்'' என்றார்.

சாதித்துக் காட்டுவதென்றால் இதுதான்.


'என்றைக்கு மற்றவர்களைப் பற்றி யோசிக்கிறோமோ, அன்றைக்கு நாம் முன்னுக்கு வருவோம்' என்கிற முதல் விதை இதன் மூலம் விதைக்கப்படுகிறது.

நம்மைப் பற்றியே யோசிப்பது சுயநலம். ஆனால் நம்மைச் சுற்றியுள்ளவர்களைப் பற்றி யோசித்தால், நாம் நினைத்ததைச் சாதிப்போம் என்பது மேற்கண்ட நபர்களின் வாழ்விலிருந்து தெரிகிறது. ❖

---

***ஓர் அன்பர் : உயிர்க்கொலை பெரிய குற்றம் அல்லவா?***

***ஸ்ரீரமணர்:*** நம்மையே நாம் கொலை செய்து கொண்டிருக்கிறோமே! சாஸ்வத ஆனந்த மயமான இயற்கைநிலையை நாம் அறியவில்லை; தோன்றி மறையும் தேகாதிகளே 'நாம்' என கருதுகிறோம். இவ்விதம் தற்கொலை செய்து கொண்டிருக்கும் நாம் யார், இந்த ஸ்தூல உடற்கொலையைப் பேசுவதற்கு?



–சிவ.தீனநாதன்

---

பாவம் செய்வது தவறு, பாவம் செய்வதுபோல் நடிப்பதும் தவறுதான். - பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்

சுவாமி பரமசுகானந்தர்

# பூதம் காத்த செல்வம்!

‘‘உனக்கு ஏழு ஜாடி தங்கம் வேண்டுமா ...?’’

குரல் கேட்டுத் திடுக்கிட்டு நின்றான் முத்து. அரண்மனையில் வேலை பார்ப்பவன் அவன். சுற்றுமுற்றும் பார்த்தான். அருகில் ஓர் ஆலமரம் மட்டுமே தெரிந்தது.

‘‘உன்னைத்தான் கேட்கிறேன் தம்பி...! ஏழு ஜாடி தங்கம் இலவசமாக வேண்டுமா?’’ என்று மரத்தின் உச்சியிலிருந்து மீண்டும் கேட்டது அந்தக் குரல்.

‘‘இலவசமா ...! எங்கே? எங்கே உள்ளது?’’ என்று பரபரப்புடன் கேட்டான் முத்து.

‘‘உன் வீட்டிலேயே வைத்துவிட்டேன். போய்ப் பார்’’ என்றது பூதம்.

ஓடினான் முத்து வீட்டை நோக்கி! வீட்டில் அவன் கண்ட காட்சி!... ஏழு ஜாடிகள்! எல்லா வற்றிலும் தங்கம். வீட்டின் கதவை மூடி, மனைவி ராக்காயியை அழைத்து இந்த



அதிசயத்தைக் காண்பித்தான். விஷயத்தைச் சொன்னான்.

கனவா! நனவா! என்று அவளும் ஒவ்வொரு ஜாடியாகத் திறந்து பார்த்தாள். எல்லாம் நிறைந்திருந்தது. ஆனால் ஏழாவது ஜாடியில் முக்கால்வாசிதான் தங்கம் இருந்தது.

ராக்காயி தலையில் அடித்துக் கொண்டாள். ‘என்ன இது? ஏழு ஜாடி தங்கம் என்று சொன்னீர்கள். ஏழாவதில் குறைவாக இருக்கிறதே?’ என்றாள்.

உடனே முத்து, ஏழாவது ஜாடியை எப்படியாவது நிரப்பிப் பார்க்க வேண்டும் என்று துடித்தான். வீட்டிலிருந்த தங்க நகைகள் அனைத்தையும் எடுத்து வந்து போட்டான். மனைவி அணிந்திருந்த நகைகளைப் வாங்கிப் போட்டான். என்ன ஆச்சரியம்! ஜாடி நிரம்பவே இல்லை.

வேலைக்கும் போகாமல் ஜாடியைக் காவல் காத்துக் கொண்டிருந்தான். உணவைக் குறைத்துப் பணத்தை மிச்சப்படுத்தி தங்கம் வாங்கிப் போட்டான். காடு, கழனி எல்லாம் விற்றுத் தங்கமாக்கிப் போட்டான். ஊஹூம். ஜாடி நிரம்பவே இல்லை. நொந்து போனான் முத்து.

ஜாடி நிரம்பாத கவலையில் கறுத்து, இளைத்து, உருக்குலைந்து போனான் முத்து. அரண்மனையில் பணியாளர்களுக்குத் தீபாவளிப் பரிசு அளிப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்றான்.

நீண்ட நாட்களுக்குப் பின் அவனைப் பார்த்த சக ஊழியர்கள் ‘ஏன் இப்படி இளைத்துவிட்டாய்?’ என்று துக்கம் விசாரித்தார்கள். தீபாவளிப் பரிசை வழங்கிக் கொண்டிருந்த அரசனோ இவனைப் பார்த்து ‘‘என்ன முத்து? ஏன் இப்படி இளைத்துவிட்டாய்? பூதத்தின் ஏழு ஜாடி தங்கம் கிடைத்ததோ உனக்கு?’’ என்றார்.

திடுக்கிட்ட முத்து தடாலென அரசனின் காலில் விழுந்தான். ‘‘அரசே, பேராசையால் உங்களை வஞ்சித்தது என் குற்றம். இப்போதே தங்களிடம் அதை ஒப்படைத்து விடுகிறேன். என்னை மன்னியுங்கள்’’ என்றான். சக ஊழியர்கள் திகைத்து நின்றார்கள்.

‘‘அது பூதத்தின் செல்வம். நம்மால் உபயோகிக்க முடியாது. நிரப்பவும் முடியாது. பூதத்திடமே திருப்பிக் கொடுத்துவிடு’’ என்றார் அரசர்.

அரசாணைப்படி ஓடிய முத்து அந்த ஆலமரத்தின் அடியில் நின்று, ‘‘பூதமே, உன் தங்கத்தை நீயே வைத்துக்கொள்’’ என்று கத்தினான். ‘‘அப்படியே ஆகட்டும். ஆஹா ஹா...’’ என்று சிரித்தது பூதம்.



வீட்டிற்கு வந்த முத்துவிடம் ராக்காயி அழுதுகொண்டே, ஏழு ஜாடிகள் திடீரென மறைந்துவிட்டதைக் கூறினாள். தங்கள் சொந்த நகைகளையும் ஏழாவது ஜாடியில் போட்டு ஏமாந்தது அப்போதுதான் இருவருக்குமே புரிந்தது.

பேராசையால் இது போல் உழைக்காது, நாட்டை வஞ்சித்துத் தவறான வழியில் ஈட்டிய செல்வத்தால் எத்தனை குடும்பங்கள் அழிந்துவிட்டன!

தீய செல்வம் யாவும் இந்த பூதம் காத்த செல்வம் போல் மனிதனுக்குப் பயன்படாமல் அவன் அமைதியைக் குலைத்து நஷ்டத்தை உண்டாக்குகிறது. இதையே நமது பொய்யா மொழிப் புலவர்,

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று.


‘வஞ்சனையாய் பொருளைச் சேர்த்துப் பாதுகாப்பது பச்சை மண்குடத்தில் நீரை நிரப்பிப் பாதுகாப்பதைப் போன்றது. நீரோடு குடமும் அழிந்துவிடுவது போல தீயவழியில் ஈட்டிய செல்வம் யாருக்கும் பயன்படாமல் சமூகத்தின் நாசத்திற்கு வழி வகுக்கிறது.’

உழைப்போம்; நேர்மையாய் வாழ்வோம். ❖

புராணமும் அதன் செய்தியும்

கர்வமும் அகங்காரமும் உள்ளவன் கடவுளை அடையும் முயற்சியில் வெற்றிபெற இயலாது. பணிவு மிகவும் அவசியம். - அன்னை ஸ்ரீசாரதாதேவி

# மந்திர சக்தியை எழுப்ப...



ஒரு சமயம் ஸ்ரீராமகிருஷ்ணரின் துறவறச் சீடர்களான சுவாமி பிரம்மானந்தரும், சுவாமி சுபோதானந்தரும் பிருந்தாவனத்தில் இருந்த குசும்சரோவரில் தங்கி, ஆன்மிக சாதனை செய்து வந்தனர்.

அதைப் பற்றி ஒரு சீடரிடம் கோகா மகராஜ் (சுவாமி சுபோதானந்தர்) கூறுகிறார்:

''இதோ பார்! நான் அப்போது மகராஜுடன் குஸும் சரோவரில் தவம் புரிந்து வந்தேன். சிறு வயது முதலே அதிகாலையில் நான் தேநீர் பருகுவது உனக்குத் தெரியுமே! அதனால் விடிந்ததுமே, மெதுவாக எழுந்து விஜய்கிருஷ்ண கோஸ்வாமியின் ஆசிரமம் சென்று விடுவேன். ஒரு தேங்காய் மூடியை எடுத்துக் கொண்டு போய் அங்கு தேநீர் வாங்கிக் குடித்து பின் குஸும்சரோவர் திரும்பிவிடுவேன்.


''நான் எழுந்து போவதை மகராஜ் (சுவாமி பிரம்மானந்தர்) கவனித்து விட்டார் போலும்.

''ஒருநாள் அவர் என்னைக் கூப்பிட்டு, 'கோகா! நீ இங்கு தவம் செய்ய வந்திருக்கிறாய் என்றல்லவா நினைத்தேன். எதற்காக விடியற்காலையில் எழுந்து சென்று விடுகிறாய்?' என்றார்.

" 'மகராஜ்! ஸ்ரீராமகிருஷ்ணர் நமக்கு அனைத்தையும் வழங்கிவிட்டாரே! பின் இந்தத் தவத்திற்கெல்லாம் என்ன அவசியம்?' எனக் கேட்டேன்.

''முகத்தைச் சற்று நிமிர்த்தியபடி ஸ்ரீமகராஜ், 'உண்மைதான் கோகா! அவர் எல்லாம் தந்துவிட்டார். ஆனால் ஜபம் தியானத்தினால் அவற்றை உணரச் சொன்னார் அல்லவா? எனவே ஜபதியானத்தின் மூலம் மந்திரத்தின் சக்தியை எழுப்பி அது நமக்குப் பலனளிக்க வழி செய்ய வேண்டும்' என்றார்.''

(சுவாமி சுபோதானந்தர் ஜயந்தி தினம் 11.11.2016 - வெள்ளிக்கிழமை)

# ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ் (Regd.)

நெ.16/54, கிழக்குமாட வீதி, திருவான்மியூர், சென்னை -41.
ஆபீஸ் போன்: 044 - 24451270, செல் : 94449 80270, 81229 96045
E.mail:jayalakshmi.yatra@gmail.com, www.jayalakshmiyatraservice.com



ஸ்ரீதிருப்பதி வெங்கடேஸ்வர ஸ்வாமி திருவருளால் 24 வருடங்கள் அனுபவத்துடன் வழிநடத்தும் வடஇந்திய யாத்திரை

| | | |
|---|---|---|
| 1 | 23.11.2016 | 16 நாட்கள் -உஜ்ஜயினி, மகா காளேஷ்வரர், ஓம்காரேஷ்வரர், பீமா சங்கர், த்ரியம்பகேஷ்வரர், க்ருஷ்ணேஷ்வர், நாகநாதம், வைத்தியநாதம் - 7 ஜோதிர்லிங்கம், அஷ்டவிநாயகர், பண்டரீபுரம், கோலாப்பூர் மஹாலக்ஷ்மி, நாசிக், ஷீரடி, பம்பாய் உட்பட மஹாராஷ்டிரா யாத்திரை ஒபர் ஒன்றுக்கு ரூ.17500/- |
| 2 | 4.1.2017 | 8 நாட்கள்- மேல்கோட்டை, ஸ்ரீரங்கபட்டிணம், மைசூர், பேலூர், ஹலபேடு, சிங்கேரி, ஹொரநாடு தங்க அன்னபூரணி, நஞ்சன்கூடு, சுப்ரமணியன், தர்மஸ்தலா, கட்டில், உடுப்பி, கொல்லூர் மூகாம்பிகை, முருடீஸ்வர், மங்களூர் விநாயகர், கர்நாடகா யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/- |
| 3 | 20.1.2017 | 15 நாட்கள்-ஜெய்ப்பூர், புஷ்கர், ஸ்ரீநாத் துவாரகா, மாத்ருகயா, மவுண்அபு, அம்பாஜி, அகமதாபாத், கோலியாக், (நிஷ்கலிங்க் மஹாதேவ்), சோம்நாத், போர்பந்தர், துவாரகா, பேட்துவாரகா, பஞ்ச துவாரகை யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.16,500/- |
| 4 | 10.2.2017 | 8 நாட்கள் - 53 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் 274 (79-132) யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/- |
| 5 | 22.2.2017 | 10 நாட்கள் - அலஹாபாத், விந்தியவாசினி, சீதாமரி, காசி, கயா- மஹா சிவராத்திரி காசி யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.11,000/- |
| 6 | 12.3.2017 | 7 நாட்கள்- பாண்டியநாடு திவ்யதேசம் - இராமநாதபுரம், ராமேஸ்வரம், தேவிப்பட்டிணம், உத்தரகோசமங்கை, திருப்புல்லாணி, ஸ்ரீவில்லிபுத்தூர், திருதங்கால், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருவரகுணமங்கை, திருபுளிங்குடி, திருகுளந்தை, திருக்கோளூர், திருப்பேரை, திருக்குறுகூர், திருத்தொலைவில்லிமங்கலம், இரட்டைத்திருப்பதி, திருக்குறுங்குடி, வானமாமலை, திருவண்பரிசாரம், மதுரை, திருமாலிர்சோலை, திருக்கூடல், திருமெய்யம், திருமோகூர், திருக்கோஷ்டியூர். நபர் ஒன்றுக்கு ரூ.8500/- |
| 7 | 23.3.2017 | 15 நாட்கள் - ஸ்ரீவைஷ்ணோ தேவி யாத்திரை, மதுரா, பிருந்தாவனம், கோகுலம், கோவர்த்தன், குருஷேத்திரம், ஜலந்தர் தேவிதலா, அமிர்தசரஸ், ஜம்மு, கட்ரா, சிவ்கோரி, சாமுண்டா, காங்கடா, ஜ்வாலாமுகி, சிந்தபூரணி, நைனாதேவி, டெல்லி, அக்ஷர்தாம் சக்தி பீட யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.16,500/- |
| 8 | 8.4.2017 | 6 நாட்கள் -சோழ நாடு திவ்விய தேசம் - 40 நபர் ஒன்றுக்கு ரூ.7,500/- |
| 9 | 16.4.2017 | 15 நாட்கள் - நேபாள் முக்திநாத் யாத்திரை - காசி, குஷிநகர், சீதாமரி (சீதாஜென்மஸ்தான்), ஜனக்புரி, தனுஷ்தாம், காட்மாண்டு, பசுபதிநாதர், குஜ்ஜேஸ்வரி சக்தி பீடம், போக்ரா, முக்திநாத் யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.17,000/- (முக்திநாத் சென்று வர விமானம் / ஜீப் கட்டணம் தனி) |

மேலும் விவரங்களுக்கு நிர்வாகி: K.ரகு 'ஜெயலக்ஷ்மி' யாத்ரா சர்வீஸ் போன்- 99628 22782

# ஆறு தரிசனங்களில் யோகம்

அறிந்து கொள்வோம் சநாதன தர்மத்தை! 9

சுவாமி நீலமாதவானந்தர்

யோகம் என்ற சொல் யுஜ் (சேர்தல்) என்னும் சமஸ்கிருத வேர்ச் சொல்லிலிருந்து தோன்றியது. பக்தி, ஞான, கர்மம் போன்ற பல யோக சாதனங்கள் சொல்லப்பட்டிருந்தும் யோகம் என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது யோக ஆசனங்களே.

நாம் இங்கு காண இருப்பது ஆறு தரிசனங்களில் ஒன்றான யோக மார்க்கம். பதஞ்சலி முனிவரால் கட்ட மைக்கப்பட்டுத் தரப்பட்ட, அஷ்டாங்க யோக மார்க்கமே இன்று யோக தரிசனத்திற்கு ஆதார நூலாகக் கருதப்படுகிறது.

அஷ்டாங்க யோகத்தின் மூலம் கைவல்ய (முழுமை) நிலையை அடைவதை லட்சியமாகக் கொண்டது யோகம்.

## யோகம் - பிரிதல்

யோகத்தில் உயிர்கள், புருஷன் என அழைக்கப்படுகின் றன. புருஷனைத் தவிர்த்த அனைத்தும் பிரகிருதி எனக் கூறப் படுகிறது. உயிராகிய புருஷன் எவ்வாறோ பிரகிருதியாகிய இந்த உலக வலைக்குள் விழுந்துவிட்டான். இதனிருந்து பிரிந்து தன் அறிவு மயமாகிய நிஜநிலையை அடைவதே யோகம் மற்றும் சாங்கியத்தின் குறிக்கோள். புருஷன், பிரகிருதியிலிருந்து விடுபட்டுத் தன்னிலையை உணர்தலே யோகம். ஆக யோகம் என்பதற்கு 'பிரிதல்' என்பதும் பொருள்.

## யோக மதத்தில் இறைவன்

சாங்கியத்தின் நிறைவுப் பகுதியே யோகம். இது இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்கிறது.

இறைவன் உலகைப் படைப்பவனல்ல; மாறாக, பிரகிருதியிலிருந்து உலகம் தோன்ற ஒரு காரணமான வன். கடவுளை ஏற்காத மார்க்கங்கள் பெரும்பாலும் ஞானத்தையே வலியுறுத்துகின்றன. மாறாக யோக மார்க்கத்தில் பக்தி செலுத்துவதன் மூலம் தடைகள் நீங்கி நமது லட்சியத்தை அடைய அவனது அருள் உதவி செய்யும் என்றே கருதப்படுகின்றது.

இறைவனை ஒப்புக்கொள்ளாததால் சாங்கியம் நிரீஸ்வர சாங்கியம் என்றும், யோகம் கடவுளை ஒப்புக்கொள்வதால் சேஸ்வர சாங்கியம் என்றும் அழைக்கப்படுகின்றன. இறைவன் எல்லாம் வல்ல ஒரு பரம்பொருள் என்பதை இது ஏற்பதில்லை. இறைவன் நல்வினை, தீவினை களுக்குப் பலன் தருபவனும் அல்லன். மாறாக இறைவனும் புருஷர்களைப் போன்றவனே. ஆனால் சற்று விசேஷமானவன். புருஷர்கள் கட்டுண்ட நிலையிலிருந்து வீடுபேற்றை நோக்கி சுயமாக முயற்சி செய்து விடுபட வேண்டும். ஆனால் இந்த இறைவன் கட்டுண்டவன் அல்லன்.

## எது யோகம்?

வான முகட்டைப் பார்ப் பதோ, மூக்கு நுனியைப் பார்ப்பதோ, அபாரமான சித்துவேலைகளோ, உடலை வளைக்கும் ஆசனங்களோ உண்மையில் யோகமல்ல. மாறாக நான் என்னும் அகங்காரத்தை நீக்கி, சித்த சுத்தி அடைந்து, கட்டுக்களை உடைத்துக் கொண்டு, முக்தி நிலையை அடைவதே யோகம். இந்த நிஜ நிலையை புருஷன் அடைவதற்காக ஏற்பட்டதுதான் அஷ்டாங்க யோக மார்க்கம்.

## அஷ்டாங்க யோக மார்க்கம்

முதலில் உடல் வலிமையாகத் திகழ வேண்டும். இந்தப் பேருண்மையை ஞானியர் யாவரும் உரைத்துள்ளனர். இதன் பின் வருவது இயமம், நியமம்




என்னும் சித்த சுத்திக்கான படிகள். இயமம் என்பது களவாடல், பொய்பேசுதல், உயிர் வதை, உடைமைகளைச் சேர்த்தல் போன்ற தவறானவற்றைத் தவிர்த்தலாகும்.

நியமம் என்பது தூய்மை, திருப்தி, நற்செயல் அறநூற்களைக் கற்றல் போன்றவை. இவற்றைச் சிறந்த முறையில் கடைப்பிடித்த பின் ஆசனம் என்னும் நீண்ட நேரம் அசையாமல் உட்காரும் நிலையைக் கற்றல். பின்னர் பிராணாயாமம் எனப்படும் மூச்சை அடக்கும் கலையைப் பயின்றல். இதன் மூலம் நமது சிந்தனைகளைத் தடுத்துப் பல இடங்களில் ஓடாமல் ஒருமித்த நிலைக்கு அழைத்து வருதலை பிரத்யாஹாரம் என்று அழைப்பார்கள்.

மனம் ஒருமுகப்பட்டு ஒருமித்த சிந்தனையை அடைதலே தாரணை. இதன் முடிவில் சாங்கியம் கூறும் உண்மைகளைத் தெளிவுற உணர்வதற்காகச் செய்யப் படுவதே தியானம்.

தியானத்தின் முடிவில் புருஷன், பிரகிருதியின் பிடியிலிருந்து விடுபட்டு, முக்திநிலை எனப்படும் சமாதிநிலையை அடை கிறான். அதன் பின் ஜீவன்முக்தனாகி ஆசையையும் துன்பத்தையும் கடக்கிறான். இதுவே யோகத்தின் லட்சியம். ❖

உங்கள் கையெழுத்து ஒருநாள் ஆட்டோகிராபாக மாற வேண்டிக் கடுமையாக உழைக்கவும். -ஓர் அறிஞர்



சென்ற இதழின் தொடர்ச்சி...

# லட்சிய விரதத்தினரே...


கல்வியின் முக்கிய அம்சமானது சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை மற்றும் விவேகத்தை மாணவர்களுள் விழிப்படையச் செய்தலாகும்.

சீர்தூக்கிப் பார்த்தல் என்றால் என்ன? செய்யக் கூடியவை - கூடாதவை; நியாய - அநியாயம்; சரி - தவறு என்பனவற்றில் ஞானம் பெறுதல் ஆகும்.

ஆசிரியரின் மற்றொரு கடமை மாணவனிடம் ஞானச் சுடரைத் தூண்டிவிடுவது. நியாயமாக, உண்மையாக நடந்து கொள்வது, கடமையுணர்வு, பண்போடு வாழ்தல், இறைவனின் அனைத்துப் படைப்புகளின் மீதும் அன்பு கொள்ளுதல் போன்ற மனிதநேயப் பண்புகளை அவனிடத்தில் விழிப்படையச் செய்து, அறநெறிமிக்க வாழ்க்கை வாழ உதவ வேண்டும்.

அறிவைவிட இதயமே முக்கியம். உணர்வு பூர்வமாக இதயம் வளர்ச்சி பெறாது, அறிவு மட்டும் வளர்ச்சி பெற்றிருந்தால் ஒருவன் அரக்கனாகிவிடுவான். ராவணன், இந்திரஜித், ஹிட்லர், ஸ்டாலின் போன்றோர் அறிவு வளர்ச்சி மிக்கவர்களே. ஆனால் அவர்களே மனித சமுதாயத்தின் சாபக்கேடாக ஆகிவிட்டனர்.

ஒரு கதை: ஒரு விஞ்ஞானி சிறந்த மூளையுடன், இதயமே இல்லாத ஓர் இயந்திர மனிதனை உருவாக்குகிறான். பின்னர் அந்த இயந்திர மனிதன் ராட்சசனாக மாறி எல்லாவற்றையும் அழித்து, தன்னை உருவாக்கிய விஞ்ஞானியையும் அழித்து, இறுதியில் தன்னையுமே அழித்துக் கொண்டான்.



### சகோதர உணர்வில்லாத பட்டப்படிப்புகள் ஒரு சாபக்கேடு

இன்றும் நம் நாட்டில் அதிமேதாவிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், விஞ்ஞானிகள் இருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் மக்களுக்குத் தொண்டு செய்கிறார்களா? மருத்துவ மாணவன் ஒவ்வொருவனுக்கும் அரசு பல லட்சம் ரூபாய் செலவிடுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் டெல்லியில் முன்னூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் நகரங்களில் பணி செய்வோமே தவிர, கிராமங்களுக்குச் செல்ல மாட்டோம் என மறுப்புத் தெரிவித்தது வெளிப்படை.

ஒரிஸாவின் வனப் பகுதிகளில், எண்ணற்ற நம் மக்கள் மருத்துவ வசதியின்றி உயிரிழக்கின்றனர். மருத்துவ மையத்திற்குச் செல்ல அவர்கள் குறைந்தது 30 கி.மீ நடக்க வேண்டும். போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலையில் கடும் காய்ச்சல், வயிற்றுப் போக்கு போன்ற நோயுள்ளவர்கள் எப்படி அவ்வளவு தூரம் செல்ல முடியும்? அவர்கள் நம் சகோதர - சகோதரிகள் இல்லையா?

சமுதாயத்தின் செலவில் படித்துப் பட்டம் பெற்ற இவர்கள் - இது போன்ற வனப்பகுதிகளுக்கும், மலைவாழ் மக்களுக்கும் தொண்டு செய்யத் தயாராக இல்லை. எனவே இதயத்தில் அனைவரிடத்தும் அன்பு பாராட்டும் நல்ல பண்புகளை வளர்க்கச் செய்வது அதிமுக்கியம். நம் மாணவர்களிடத்தில் இவை வளர்க்கப்பட்டால், அவர்கள் உண்மையிலேயே நாட்டின் செல்வங்களாக ஆவார்கள்.

தன் மாணவர்களிடத்தும், சக ஆசிரியர்களிடத்தும், நாட்டு மக்கள் மீதும் அபரிமிதமான அன்பு உடையவராக ஓர் ஆசிரியர் இருந்தால், அவரது மாணவர்களும் அவரைப் பின்பற்றி அதே உணர்வுள்ளவர்களாக விளங்குவார்கள். மாணவர்களுக்கு இதயபூர்வமான வேண்டுகோள் விடுப்பதன் மூலமே, மாணவர் உலகின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

பிறருடைய மகிழ்ச்சியில் நமது மகிழ்ச்சியும் அடங்கியுள்ளது. - பிரமுக்சுவாமி

## சுவாமி நிகிலேஸ்வரானந்தர்

### மாணவர்களின் அமைதியின்மைக்கான மருந்து

பல ஆண்டுகளுக்கு முன், கர்நாடகத்தின் சில பகுதிகளில் ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர்கள் மத்தியில் பெரும் அமைதியின்மையை ஏற்படுத்தியது.

போராட்டத்தில் அரசுக்கு எதிராக சுவர் வாசகங்களை எழுதினார்கள். சில மாணவர்கள் கீழ்த்தரமாகக் கல்வி அமைச்சர், அவரது மனைவி, மகள் ஆகியோரைப் பற்றி மிகக் கொச்சையான வாசகங்களை எழுதினார்கள்.

இப்போராட்டங்கள் ஓய்ந்து, வித்யாலயம் திறக்கப்பட்டதும் வகுப்பறையில் ஹிந்தி ஆசிரியர் மாணவர்களிடம், "உங்கள் போராட்டம் வெற்றி பெற்றதா?" எனக் கேட்டார். உற்சாகத்துடன் மாணவர்கள், "ஆமாம் ஐயா" என பதில் அளித்தனர்.

மேலும் ஆசிரியர், "உங்களுக்குப் படிக்கக் கடினமாக இருப்பது ஆங்கிலமா? ஹிந்தியா?'' எனக் கேட்டார். மாணவர்கள் யாவரும் ஒரே குரலில், "ஆங்கிலமே கடினமானது. அதன் உச்சரிப்பு, இலக்கணம், வார்த்தைக்கேற்ற எழுத்துகள் என எல்லாமே கடினமாக இருக்கிறது. ஆனால் எங்களுடைய தங்கைகள் வீட்டிலேயே உட்கார்ந்து கொண்டு ஹிந்தி படித்து விடுகிறார்கள்" என்றனர்.

ஆசிரியர், ''அப்படியானால் நீங்கள் ஆங்கிலத்தை எதிர்க்காமல் ஏன் ஹிந்தியை எதிர்த்துப் போராடினீர்கள்" என வினவினார். இக்கேள்வியை எதிர்பார்க்காத மாணவர்கள், ஆச்சர்யத்துடன், "எங்களுக்கே தெரியாது ஐயா; யாரோ சிலர் எங்களை அதில் சேரச் சொன்னார்கள்; நாங்களும் அவர்கள் பின்னால் சென்று விட்டோம்" எனப் பதிலளித்தனர்.

''அது ஒரு புறமிருக்கட்டும். ஆனால் நீங்கள், அமைச்சர், அவரது மனைவி, மகள் பற்றி கேவலமாக சுவர்களில் எழுதியிருக்கிறீர்கள். நாளைக்கு, உங்கள் தாய், சகோதரிகளைப் பற்றி இப்படி யாராவது எழுதினால் என்ன நினைப்பீர்கள்?" எனக் கேட்டார்.

இக்கேள்வியால் அதிர்ந்த மாணவர்கள் தலை குனிந்தனர். அவர்களில் ஒருவன், "ஐயா, நாங்கள் தவறிழைத்துவிட்டோம். என்ன செய்தோம் என்று எங்களுக்கே தெரியாது. தயை கூர்ந்து மன்னிக்க வேண்டும். இனி ஒருபோதும் இதுபோன்ற செயல்களில் ஈடுபட மாட்டோம்" என்றான்.

மாணவர்களின் இதயத்தைத் தொடும்போது தான், இது போன்ற அற்புதங்கள் நிகழ முடியும். அதனால் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தி, விவேகம் இரண்டும் விழிப்படையும்.

> **சுருக்கமாக எழுதுவது எப்படி?**
>
> *புகழ்மிக்க பத்திரிகை வெளியீட்டாளர் புலிட்சர் தம் இளம் வயதில் ஒரு பத்திரிகையில் வேலைக்குச் சேர்ந்தார். இதழின் ஆசிரியரிடம், ''சுருக்கமாக எழுதுவது எப்படி?'' என்று கேட்டார்.*
>
> *ஆசிரியர் கூறினார்: ''கூற வேண்டியதை எல்லாம் எழுதிக் கொள். அதை இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு உன் சொந்தச் செலவில் தந்தி அனுப்புவதாக வைத்துக் கொள். தானே செய்தி சுருங்கிவிடும்!''.*
>
> - நெ.இராமன்

### தேசிய நன்னடத்தையை எப்படி உருவாக்குவது?

மேலும் இரு உதாரணங்களைப் பார்ப்போம் :

1. கர்நாடக மாநிலத்தில் ஹிந்து சேவா பிரதிஷ்டான் அமைப்பின் சார்பில் நடைபெறும் மழலையர் பள்ளிகளைப் பார்வையிட, அதன் மேற்பார்வையாளர் ஓர் ஊருக்குச் சென்றிருந்தார். பேருந்து நிலையத்தில் கழிவறையை உபயோகித்தார். அதற்குரிய கட்டணம் 50 பைசா. அவர் காவலாளியின் ஏழ்மையைக் கண்டு ஒரு ரூபாய் கொடுத்து, ''மீதியை நீயே வைத்துக் கொள்'' என்று கூறினார்.

அந்தக் காவலாளி அதை மறுத்துக் கூறினார்: ''முன்பு நானும் கூடுதல் தொகை பெற்று வந்தவன் தான். ஆனால் என் மகள் மூலமாக நான் மாறிவிட்டேன்''.

மேலும் விசாரித்ததில் அவர் கூறியது: "எங்கள் ஊரில் துவங்கப்பட்டுள்ள மழலையர் பள்ளியில் படிக்கும் என் குழந்தையிடம், 'தினமும் பள்ளிக் கூடத்தில் என்ன சொல்லிக் கொடுத்தார்கள்' என்று கேட்பேன்.

''ஒரு நாள் தன் ஆசிரியை, 'நேர்மையாகக் கிடைக்கும் பணம் அமுதத்திற்குச் சமம்; நேர்மை யற்ற வழியில் கிடைப்பது விஷம் போன்றது' என்று கூறியதாகத் தெரிவித்தாள். அன்று முதல், நான் கட்டணம் தவிர அதிகத் தொகையைப் பெறுவதில்லை" என்று கூறினார்.

2. ஒருமுறை, நண்பர்கள் சிலர் திபெத் எல்லையில் உள்ள உத்தரபிரதேச கிராம மக்களிடம்



எப்போதும் அமைதியாகவும், பதற்றமின்றியும் இருங்கள். சமநிலையே யோகம். - பகவான் ஸ்ரீகிருஷ்ணர்

தொடர்பு கொள்ளச் சென்றார்கள். நண்பர்கள் கொடுத்த புத்தாண்டு வாழ்த்து அட்டையைப் பார்த்ததும் அக்கிராம மக்கள் அதைக் கிழித்தெறிந்தனர்.

அந்த நண்பர்கள் பொறுமையாக அவர்களிடம் விசாரித்தபோது, அக்கிராமத்தினர் தாங்கள் விக்கிரமாதித்தனால் விரட்டப்பட்ட சகரர்களின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள், ஆகவே எதிரியின் படத்தைக் கிழித்ததாகக் கூறினர்.

நண்பர்கள் அக்கிராம மக்களின் அடிப்படைத் தேவை ஒரு பள்ளிக்கூடம் என்பதை அறிந்தனர்.

சில நாட்களில் அங்கு ஒரு மழலையர் பள்ளி துவங்கப்பட்டு, குழந்தைகளுக்கு பிராதஸ்மரணம், தேசபக்திப் பாடல்கள், வந்தே மாதரம் எல்லாம் கற்றுக் கொடுக்கப் பட்டது. அவர்கள் அனைவரும் இப்பாடல்களைப் பாடிப் பயின்று விக்கிரமாதித்தன் உட்பட எல்லாத் தேசியத் தலைவர்களையும் மதிக்கத் துவங்கினர்.

அப்பள்ளி ஆசிரியைகள் பாடத்துடன் பண்பையும், தேச பக்தியையும் கற்றுக் கொடுத்தனர். உள்ளூர் மக்களின் இதயத்தை அன்பினால் வெல்ல முடிந்தது. அம்மக்களின் பார்வை விசாலமடைந்து இந்த மண்ணின் கலாச்சாரத்தையும் வரலாற்றையும் ஏற்றுக் கொண்டு ஒன்றிப் போனார்கள்.

மக்களின் இதயத்தை விழிப்படையச் செய்துவிட்டால் தீண்டாமை, குறுகிய வகுப்புவாதம் போன்ற சமுதாயத் தீமைகளை வெற்றிக் கொண்டு அனைவரையும் ஓரணியில் திரளச் செய்யலாம். இணக்கமும், தேசபக்தியும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்கலாம். இன்றைய இளைய தலைமுறையினரிடமிருந்து இம்முறையிலேயே 'நன்னடத்தை உள்ள தேசிய மனிதனை' உருவாக்க முடியும்.

### உண்மையான தேசியக் கல்வி

தாய் நாட்டின் மீது ஆழமான தேச பக்தியுணர்வை ஊட்டுவதன் மூலம் 'இதயமும் - மூளையும்' பண்பின் உருவகமாகவே மாறுகிறது. நம் நாட்டில், கடந்த மற்றும் சமீப காலங்களில் வாழ்ந்த பெரியோர்களின் ஒளிரும் வாழ்க்கை முன்னுதாரணங்களைப் பின்பற்றி வாழ்வதும், நம் கலாச்சார மரபுகளின் உன்னதமான பண்புகளை அடியொற்றி நடப்பதுமே 'உண்மையான தேசியக் கல்வியின்' உயிர்மூச்சு ஆகும்.

இவை ஒருவனை லட்சிய மனிதனாகவும், அறிவு, உணர்வு, பண்பு, ஆன்மிகம் அனைத்திலும் மணம் பரப்புபவனாகவும் உருவாக்கும். எனவேதான், நம் நாட்டின் மாபெரும் சான்றோர்கள் அனைவரும் பண்பிலும் ஆன்மிகத்திலும் ஒளிரும் சின்னங்களாகத் திகழ்கிறார்கள்.

நம் ஆசிரியர்கள், தேசியக் கல்வியின் இந்தச் சிறப்பம்சத்தைப் புரிந்து கொண்டால் நிச்சயமாக அவர்கள், 'தங்களது ஆசிரியர் பணி - உண்மையில் மாபெரும் உலகை உருவாக்கும் லட்சிய விரதம்' என்று முழக்கமிடுவார்கள். உலகெங்கும் இந்தச் செய்தியைக் கொண்டு செல்லக்கூடிய தகுதி படைத்தவர்களாக, நம் இளைய தலைமுறையினரை உருவாக்குவார்கள்.

### உண்மையில் உலகின் ஆசிரியர் நீங்களே

இதுவே நமது லட்சியப்பாதை. உலக



நாடுகளனைத்தும் பாரதத்துக்குப் புகழாரம் சூட்டுவதற்கான பல காரணங்களில் முதன்மையானது உலக குருவாக விளங்கும் நம் ஆசிரியர்களே. நிஜமாகவே அவர்கள் 'ஜகத்குரு' என்ற நிலையை அடைந்தார்கள்.


அமெரிக்க நாட்டு வரலாற்று ஆசிரியரான வில்டூரண்ட், 'கணிதத்தின் அரிச்சுவடிப் பாடங்களைப் பாரதமே எங்களுக்குக் கற்றுக் கொடுத்தது. பகவான் புத்தரின் மூலமாகப் பண்புகளைக் கற்றுக் கொண்டோம். கிராமப் பஞ்சாயத்து அமைப்பின் மூலம் பாரதம் ஜனநாயகத்தின் தாயாக விளங்குகிறது' என்று கூறியுள்ளார்.

நிறைவாக, அவர் பிரகடனம் செய்தது இதுவே: "இந்தியாவே எங்கள் அனைவரின் தாய்".

'ஜகத்ஜனனியான பாரதத் திற்கேற்ற தகுதி படைத்தவர்கள் நாம்' என்பதை நிரூபிப்போம். மீண்டும் மனிதகுலம் முழுவதும் நம் நாட்டை அதே அன்புடனும் பக்தி கலந்த மரியாதையுடனும் பார்க்கும்படிச் செய்வோம். ❖

நம் ஆசிரியர்கள், தேசியக் கல்வியின் இந்தச் சிறப்பம்சத்தைப் புரிந்து கொண்டால் நிச்சயமாக அவர்கள், 'தங்களது ஆசிரியர் பணி - உண்மையில் மாபெரும் உலகை உருவாக்கும் லட்சிய விரதம்' என்று முழக்கமிடுவார்கள்.
உலகெங்கும் இச்செய்தியைக் கொண்டு செல்லக்கூடிய தகுதி படைத்தவர்களாக, நம் இளைய தலைமுறையினரை உருவாக்குவார்கள்.

# சண்டை போடுங்கள்!



சுவாமி விஞ்ஞானானந்தர் பிறருடைய மனதைப் படிக்க வல்லவர். ஆனால், 'எது நல்லதோ அதை மட்டும்தான் சொல்ல வேண்டும், உண்மையாகவே இருந்தாலும் பிறருடைய மனம் நோகுமென்றால் அதைச் சொல்லக்கூடாது' என்று சாஸ்திரங்கள் கூறுவதால் சுவாமிகளும் அதன்படியே நடந்து கொள்வார்.

சில சமயங்களில் அவரது வார்த்தைகள் பிறருக்கு மனஸ்தாபத்தை ஏற்படுத்தி விடும். மரியாதை நிமித்தமாக உண்மையைச் சொல்லாமல் பூசி மெழுகிப் பேசுவது அவரது இயல்புக்கே கொஞ்சமும் ஒத்துவராத விஷயமாக இருந்தது.

ஒருமுறை நாகரீகமான, இளம் பெண் ஒருத்தி சுவாமிகளைக் காண வந்தாள். சுவாமிகள் அந்தப் பெண்ணைப் பார்த்த உடனே அவளிடம் இருந்த தவறுகளைக் கண்டு கொண்டார்.

அப்பெண் சுவாமிகளிடம், ''எனக்கு நீங்கள் என்ன அறிவுரை சொல்ல விரும்புகிறீர்கள்?'' என்று கேட்டார்.

சுவாமிகள் உடனே எதையும் மறைக்காமல், ''நன்றாகச் சண்டை போடுங்கள்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட அந்தப் பெண் தனது தவறுகளைச் சுவாமிகள் அறிந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணத்தில் தலைகுனிந்து நின்றார்.

அந்தப் பெண்ணுடைய சண்டையிடும் குணத்தைத் தெளிவாக அறிந்துகொண்டு சுவாமிகள் அளித்த பதில் அவருடைய வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்திவிட்டது. அவர் தன் வாழ்க்கை முறையை மாற்றி வாழ முயற்சி செய்தார்.

(சுவாமி விஞ்ஞானானந்தர் ஜயந்தி தினம் 13.11.2016 - ஞாயிற்றுக்கிழமை)

# தமிழ்நாடு, ஸ்ரீராமகிருஷ்ணர் - ஸ்ரீசாரதாதேவி - சுவாமி விவேகானந்தர் பக்தர்களின் 24-ஆவது மாநாடு, 2016

**நாள் : 2016 டிசம்பர் 23 வெள்ளி, 24 சனி, 25 ஞாயிறு**

**இடம் : ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி வளாகம், ஸ்ரீ சாரதா நகர், NH 45, பெரம்பலூர் - 621 113.**





தெய்வத் திருமூவர்களது திருவருளைப் பெற்றுள்ள அன்பார்ந்த பக்தர்களே வணக்கம்.

தமிழ்நாட்டில் ஒவ்வோர் ஆண்டும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதாதேவியார் - சுவாமி விவேகானந்தர் பக்தர்களின் மாநாடு, சிறப்பாக நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு **24-ஆவது** மாநில மாநாடு பெரம்பலூர், ஸ்ரீராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இம்மாபெரும் ஆன்மீகத் திருவிழாவில் சுவாமி கௌதமானந்தஜி மகராஜ் மற்றும் தமிழகத்திலுள்ள அனைத்து ஸ்ரீராமகிருஷ்ண மடங்களைச் சார்ந்த துறவியர் பெருமக்கள், ஸ்ரீ சாரதா மடங்களைச் சார்ந்த சந்நியாசினிகள், அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகள், சிறப்பு பூஜை, ஹோமம், கருத்தரங்கம், பக்திப் பாடல்கள் - இசைக்கச்சேரி, கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இடம்பெறும்.



இந்த விழாவில் பக்தர்கள் கலந்து கொண்டு திருமூவர்களது திருவருளைப் பெற்று வாழ்வாங்கு வாழ அன்புடன் வேண்டுகிறோம்.

**நுழைவுக் கட்டணம் : ரூ. 250/-** **(மூன்று நாட்களுக்கும் தங்கும் வசதி, உணவு உட்பட)**

அன்பர்கள் தாங்கள் அளிக்க விரும்பும் நன்கொடைகள் - மாநாட்டு உறுப்பினர் கட்டணம் ஆகியவற்றை **Tamil Nadu Sri Ramakrishna - Sri Saradha Devi - Swami Vivekananda Devotees 24th Conference 2016, Perambalur** என்ற பெயரில் நேரிலோ / டி.டி / காசோலை / மணியார்டர் மூலமோ தங்களது இருப்பிட முழு முகவரி, கைபேசி எண்ணுடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**திரு. எம். எஸ். விவேகானந்தன்**
செயலாளர்

**டாக்டர் எம். சிவசுப்பிரமணியம்**
தலைவர்

மற்றும் மாநாட்டுக் குழுவினர்

தொடர்புக்கு : அ.சந்திரசூடன் - **7373054550**, மு.சரவணன் - **9843375687**

# சென்னை, ராமகிருஷ்ண மிஷன் பள்ளிகளின் சாதனை

* ராமகிருஷ்ணா மிஷன் சாரதா வித்யாலயா நடுநிலைப்பள்ளி 2014-15 வருடத்திற்கான 'சிறந்த பள்ளி' எனும் விருதினை தமிழக அரசிடமிருந்து பெற்றுள்ளது.



* ராமகிருஷ்ண மிஷன் சாரதா வித்யாலயா பள்ளிகளின் இரண்டு ஆசிரியைகள் இந்த ஆண்டிற்கான நல்லாசிரியர் விருதான டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதினைப் பெற்றுள்ளார்கள்.

1. சென்னை, ராமகிருஷ்ண மிஷன் சாரதா வித்யாலயா மாடல் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியையான திருமதி. கண்ணகி பிரபாகரன்.

இவர் மாதர் சங்கம் வழங்கிய டாக்டர் முத்துலட்சுமி விருது, தமிழ்நாடு பள்ளி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 'ஆசிரியச் செம்மல்' விருது மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கழகத்திலிருந்து 'சிறந்த ஆசிரியர்' விருதினையும் பெற்றவர்.

2. சென்னை, ராமகிருஷ்ண மிஷன் சாரதா வித்யாலயா மேல்நிலைப் பள்ளியின் உயர்கல்வி ஆசிரியரான டாக்டர் ஜி.வசுந்தரா.

கடந்த 6 வருடங்களாக இவரது மாணவர்கள் 100% தேர்ச்சியினைப் பெறும்படி செய்துள்ளார். சமச்சீர் கல்வி பாடத்திட்டக் குழுவினர்களுள் இவரும் ஒருவர். மேலும் பல பாடநூல்களை




அதற்காக எழுதியுள்ளார்.

விருதுகளைப் பெற்ற ஆசிரியர்கள் மற்றும் இப்பள்ளிகளைச் சேர்ந்த அனைவரையும் ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் வாழ்த்துவதோடு அவர்களுக்கு பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவருள் பெருகப் பிரார்த்திக்கிறது. ❖


கடவுளைக்காண கயிலைக்கு வாருங்கள்... / மாதம் ஒரு குழு புறப்படுகிறது

முக்திநாத், நேபாள், ஜனக்புரி யாத்திரை - 6/10 நாட்கள்



திருக்கயிலாயம் - மானஸரோவர்

11/13 நாட்கள் ஹெலிகாப்டர் மற்றும் விமானம்



மே முதல் செப்டம்பர் வரை மாதம் ஒரு குழு

பௌர்ணமியன்று மானஸரோவரில் நீராடி வேள்வி செய்து தங்குகின்றோம்

ஆன்மீக இலங்கை 7 நாட்கள்
யாழ்ப்பாணம், தேவாரப்பாடல் பெற்ற சிவாலயங்கள், இராமாயணம் தொடர்புள்ள இடங்கள், சக்திபீடங்கள், முருகனின் கதிர்காமம், கந்தசாமி கோவில் மற்றும் புத்தமத தலங்கள் தரிசனம்

குறைந்த கட்டணத்தில் அந்தமான் விமானத்தில் அனைத்து செலவுகளுடன் ரூ.19,994/- 5 நாட்கள்

சிங்கப்பூர் மலேசியா 6 நாட்கள்
நவசோதிர்லிங்கம் கடல்கோவில் 15 நாட்கள்
காசி, கயா, அலகாபாத் 10 நாட்கள்
காசி, கயா, அலகாபாத் விமானத்தில் 5 நாட்கள்
விமானத்தில் ஷீரடி 2 நாட்கள்
தாய்லாந்து கம்போடியா 7 நாட்கள்
ராயல் பூடான் 11 நாட்கள்
ராயல் ராஜஸ்தான் 12 நாட்கள்
பேங்காக்-பட்டயா 5 நாட்கள்
துபாய் அபுதாபி 4 நாட்கள்
கங்கோத்ரி-யமுனோத்ரி கேதார்-பத்ரி 15 நாட்கள்
அமர்நாத் பனிலிங்கம் வைஷ்ணவிதேவி 15 நாட்கள்
கேங்டாங் டார்ஜிலிங் 10 நாட்கள்
சிம்லா-குல்லு மணாலி 10 நாட்கள்
மொரிசியஸ் மஹாசிவராத்திரிக்கு 5 நாட்கள்

தாங்கள் ஒரு குழுவாக இருந்தால் விரும்பும் தேதியில் சுற்றுலாக்கள் நடத்தித் தருகின்றோம்.

ஒரு குழுவிற்கு 32 அன்பர்கள் மட்டும். அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும்




மனோகர் டிராவல்ஸ்

போன் செய்தால் போதும் நேரில் வருகின்றோம்

www.manohartravels.com

e-mail : manohartravvels@gmail.com

2/176, பெரியண்ணா வீதி, ஈரோடு - 638001.
செல் : 94433 80152, 94434 04919
பெரியமேட், சென்னை-600 003.
செல் : 95780 38845, 81220 20021



**வெ.இறையன்பு, இ.ஆ.ப.**



# உழைப்பும் முயற்சியும்

எளிதான செயல்களை நிகழ்த்திக் காட்டுவது எல்லோருக்கும் சாத்தியம். மணற்கேணிகளைக் குழந்தைகளும் தோண்டிவிடலாம். கடினமான பணிகளைச் செய்து முடிப்பதில்தான், சாதனை அடங்கியிருக்கிறது. வேதனை வேர்கள் பூக்கும்போதுதான் சாதனை மலர்கள் சாத்தியமாகின்றன.

பலரால் நன்கு உழைக்க முடியும். ஆனால், சின்னத் தடங்கலுக்கே சிலர் சிறுத்து விடுவார்கள். தடைகளின் அளவைக் காட்டிலும், முயற்சியின் அடர்த்தி அதிகமாக இருந்தால் மட்டுமே பணிப் பண்பாடு நிறைவேற முடியும். திட்டமிட்டுப் பணியாற்றுவதிலும், அனைத்துப் புலன்களையும் அந்தப் பணியிலேயே குவித்தலும் அவசியம்.

அவ்வாறு முழு அர்ப்பணிப்புடன் பணியைச் செய்தால், அது தோல்வியடைந்தாலும் தேய்ந்து விடாமல் மீண்டும், மீண்டும் முயற்சி செய்ய இயலும். அறிவியல் உலகிலும், வர்த்தக நிறுவனங்களிலும் இப்படிப்பட்ட தொடர்ந்த முயற்சிகளே தொடுவானத்தை எட்ட வைத்தன.

மேம்போக்காகப் பணிகளை அணுகுபவர்களால் முழு முயற்சியை மேற்கொள்ள முடியாது. பலமுறை மறுப்புகள் வந்தாலும் சோர்வடையாது திரும்பத் திரும்பப் பணியை மேற்கொள்ள முற்படும்போது, நமது அணுகுமுறை முதிர்ச்சியடைகிறது. வெறுமனே முயற்சி செய்தால் அது நடந்துவிடாது.



தோல்விக்குக் காரணம் என்ன என்று தீவிர ஆலோசனை செய்து, அவற்றை முற்றிலுமாகக் களைந்து விட்டு, முயற்சியைப் புதுப்பிக்க வேண்டும். விஞ்ஞான வளர்ச்சி நமக்குப் பல வசதிகளைத் தந்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் நம் கவனக்குறைவால் பல தவறுகள் நிகழ்கின்றன. கணினி வந்த பிறகே நூல்களில் அதிக அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன. காரணம், அஜாக்கிரதையும், முழுமையான முயற்சியின்மையும்.

விற்பனைப் பிரதிநிதி ஒருவர் தன் தேயிலையை விற்கக் கடும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எல்லாக் கடைகளிலும் அவருடைய தேயிலையே விற்கப்பட வேண்டுமென்பது அவருடைய கனவு.

ஆனால், அந்தப் பகுதியில் அந்தத் தேயிலைக்கு அவ்வளவு பரிச்சயமில்லை. அவரது வற்புறுத்தலால் ஒருசிலர் இரண்டு மூன்று பாக்கெட்டுகளை வாங்கிப் பார்வைக்கு வைத்திருந்தார்கள். ஆனால், ஒரே ஒருவர் மட்டும் ஒத்துக்கவில்லை. அந்தப் பிரதிநிதி தன் மகளை அந்தக் கடைக்கு அனுப்பி, அந்தத் தேயிலை இருக்கிறதா? என்று கேட்டு வாங்கி வரச் சொன்னார்.

இரண்டாவது நாள் வேறொரு சிறுவன். மூன்றாம் நாள் மற்றொரு மாணவி என்று குறிப்பிட்ட அந்தக் கடையை நோக்கியே பலரும் படையெடுக்க, வேறு வழியின்றி அந்தக் கடைக்காரர் தேயிலை பாக்கெட்டுகளை வாங்க ஆரம்பித்தார். இதைப் பார்த்த மேலும் சிலர் வாங்க முன் வந்தனர்.

பிரதிநிதி பல தேநீர்க் கடைகளில் அந்தத் தேயிலையினால் தேநீர் தயாரித்து வாடிக்கையாளர்களுக்கு இலவசமாகத் தந்து அதன் ருசியைப் புரிய வைத்தார். நாளடைவில் அது சுவையான தேநீர் என்பது மக்களுக்குத் தெரிய ஆரம்பித்தது.

கடைகளுக்குத் தள்ளுபடி, இலவசத் தட்டு, பெண்களுக்குத் தேநீர் தயாரிக்கும் பயிற்சி முறை, உபயோகித்தவர்களிடையே வாசகப் போட்டி என்று பல விதங்களில் மக்களின் ஆழ்மனதில் அந்தத் தேயிலையைப் பதிய வைத்தார். இரண்டே ஆண்டுகளில், போட்டித் தேயிலையை வென்று காட்டினார். அந்தப் பிரதிநிதி வேறுயாருமல்ல; என் தந்தைதான்.

முயற்சிப்பவர்கள், வழக்கமான நடைமுறைகளைக் கையாள்வதில்லை. அவர்கள், புதிய புதிய உத்திகளைக் கண்டுபிடிக்கிறார்கள். ஒரு ஜன்னலை அடைத்தால் புதிய ஜன்னல்களை உருவாக்குகிறார்கள். தங்களுக்குத் தாங்களே சவால் விட்டுக் கொண்டு சாதிக்க முற்படுகிறார்கள்.

திரும்பத் திரும்ப எழுதுகிறபோதுதான் உரைநடை கவிதையாக மலரும். கட்டுரை போன்று இருந்த நடை, கதையாக உருவகம் பெறும். இன்று நம்முடைய அறிவியல் கண்டுபிடிப்புகள் எண்ணற்ற முயற்சிகளில் உருண்டு, திரண்ட வெண்ணெய்யாக உருவெடுத்தவை. சாதாரண உழைப்பு, 'ஒன்று போலச் செய்வது போல' நின்றுவிடும். முயற்சியோடு கூடிய உழைப்பு மட்டுமே புதுமைகளை உருவாக்கி, அடுத்தக் கட்டத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும்.

உழைப்பு, முயற்சியுடன் சேர்ந்தால் முத்துக்களைக் கொண்டு வரும். அயற்சியுடன் இணைந்தால் விரக்தியின் விளிம்பில் விட்டுவிடும். ❖

செல்வம் சிறு சிறு துளிகளாகச் சேரும், ஆனால் பெருவெள்ளம்போல் மறைந்து விடும். - பழமொழி

# உபதேசத் தியானம்



சுவாமி விமூர்த்தானந்தர்

மனிதன் பல நல்லுபதேசங்களைக் கேட்கிறான்; படிக்கிறான்; யோசிக்கிறான்; பிரச்சாரம் செய்கிறான்; அடுத்தவருக்கு உபதேசம் கூட செய்து விடுகிறான்.

ஆனால் குருவிடம் கேட்ட உபதேசத்தை உள்ளது உள்ளபடி அவன் உணர்கிறானா?

'தத்துவமஸி' - 'நீ பரம்பொருள்' என்று சத்குரு உபதேசித்ததும், சத்சிஷ்யன் 'அஹம் ப்ரம்மாஸ்மி' - 'நான் பிரம்மம்' என்று உணர்ந்து கொள்கிறான்.

குதிரையின் சேணத்தில் ஒரு கால் வைத்து மறுகாலை எடுத்து வைக்கும் அந்தக் கண நேரத்திலேயே பிரம்ம ஞானத்தை ஜனகருக்கு ஏற்படுத்தினார் அஷ்டாவக்கிரர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் நரேந்திரரின் நெஞ்சைத் தொட்டதும் சமாதி நிலைக்கு ஏக அவரால் முடிந்ததே!

அதுபோல் நம்மாலும் முடியாதா? என்ற ஏக்கம் பக்தனுக்கும் சிரத்தையுள்ள சாதகனுக்கும் வருவது இயற்கை.

'பலர் பாலைப் பார்க்கிறார்கள்; பால் பற்றிப் பலர் பேசுகிறார்கள்; ஏதோ ஒரு சிலரே பாலைப் பருகுகிறார்கள்' என்பார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

அறிவிலும் நினைவிலும் ஏற்றிக் கொண்ட உபதேசத்தை ஒருவரால் உணர்வில் கொண்டு வர இயல்கிறதா? இல்லை.

ஏன் அது இயலவில்லை?

அந்த முயற்சியில் ஒருவனுக்கு எவையெல்லாம் தடையாக உள்ளன?

'இறைவன் மட்டுமே சத்தியம்; உலகம் நிலையற்றது' என்று ஸ்ரீராமகிருஷ்ணர் திரும்பத் திரும்ப உபதேசிக்கிறார்.

எல்லா நேரங்களிலும் மனிதன் இறைவனை முன்னிலைப்படுத்தி வாழ்வதுதான் நிலையான, பாதுகாப்பான வாழ்க்கை.

ஆனால் ஒவ்வொரு கணமும் விதவிதமாக மாறிக் கொண்டிருக்கும் உலகைப் பிடித்துக் கொண்டு மனிதன் வீணாக அலைகின்றான். அவதிப்படுகிறான்; பிறரையும் அவதிப்படுத்துகிறான்.

இதுவே ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவதின் சாரம். மனிதப் பிறவியின் இந்த உண்மையை எல்லோரும் வாழ்வின் ஏதோ ஒரு நேரத்தில் உணரத்தான் வேண்டியிருக்கிறது.



சிந்திப்பவன் சில நாட்களிலேயே உணர்கிறான்; சிந்திக்கத் தவறுபவன் சில பிறவிகளில் சிரமப்பட்டு உணர்கிறான்.

'மனிதப் பிறவி எவ்வளவு போற்றத்தக்கது தெரியுமா? எனவே மிகவும் பாடுபட்டு பகவானைக் கூப்பிடு. தீவிர முயற்சி வேண்டும், முயற்சி இல்லாமல் ஒன்றும் நடக்காது!

'ஆனால் மனிதன் அவ்வளவு எளிதாக பகவானை அழைப்பதற்கு முன்வருவானா என்ன? வாழ்க்கையில் அடி வாங்காமல் எவராவது ராம நாமத்தைக் கூறுவாரா?'

இவ்வாறு அன்னை ஸ்ரீசாரதாதேவி நடைமுறைச் சிக்கலை நயமாக நமக்கு எடுத்துரைக்கிறார்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் மேற்கூறிய முக்கியமான உபதேசத்தை ஒரு சாதாரண பக்தன் காதால் கேட்கிறான்; படிக்கிறான்; ஆனால் அது வீர்யமிக்க உபதேசமாகவா அவனுக்குள் இறங்குகிறது?

இல்லையே! ஒரு செய்தியாக எங்கோ போய் அல்லவா அமர்கிறது! அந்த உபதேசம் அவனுக்குள் வந்தாலும் அது முடிவில் எங்கு போக வேண்டுமோ அங்கு சேர்வதில்லை.

மனிதனின் ஆன்மிகத்தின் மையமான ஹிருதயத்தில் - உணர்வில் சேர வேண்டிய உபதேசம் வழியில் பல்வேறு புதைகுழிகளில் பரிதாபமாய்ச் சிக்கிக் கொள்கிறது.

## காதில் உபதேசம்

முதலில், குருவின் திருவாயிலிருந்து உபதேசம்

சத்யம், தர்மம் இவற்றை அகிம்சையுடன் ஒருங்கே கடைப்பிடிக்க வேண்டும். அஹிம்சை இல்லாமல் மற்ற இரண்டால் மட்டுமே நன்மை விளையாது. - பாகவதபுராணம்

சீடனின் காதில் விழுகிறது. இங்கு இரண்டு விதமான வினைகள் நடைபெறலாம்.

ஒன்று, காதால் கேட்ட உபதேசம் அறிவாக உள்ளே சென்று இடம் பிடிக்கிறது. இரண்டாவது, இடது காதிலிருந்து வலதிற்குப் போய் வெளியே ஓடிக் காற்றோடு காற்றாகக் கழிந்துவிடுகிறது.

## வாயில் உபதேசம்

அடுத்த நிலையில், காதில் விழுந்த உபதேசம் அல்லது படித்த அருள்வாக்கு அறிவாக மனிதனுக்குள் உள்ளே செல்லாமல், வாய் வழியே வெளியே அடிக்கடி சென்று வருகிறது.

அப்படிப்பட்டவன்தான் ‘சப்த ஜாலம் மஹாரண்யம் - சொற்களின் ஒலி என்ற வனத்தில்' சிக்கி வார்த்தைகள் என்ற சங்கிலிகளால் பந்தப்படுகிறான்.

‘சாஸ்திரக் கருத்துகளைப் பிறருக்கு ஓதியும், ஓதுவித்தும் 'தான்' அடங்காத பேதையான ஒரு பண்டிதர் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் வந்து, ‘‘ஐயனே, நான் சந்தனக் கட்டையைச் சுமக்கும் கழுதையாக உள்ளேன். கட்டையின் பாரம் தெரியும்; ஆனால் சந்தனத்தின் அருமை அறியவில்லை. என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று மன்றாடினார்.

வாயிலும் நினைவிலும் தங்கிவிட்ட உபதேசத்தை அந்தப் பண்டிதரின் ஹிருதயத்தில் இறக்குவதற்காக மனமிரங்கி அருளினார் குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

குருதேவரின் அருளால் அந்தப் பண்டிதர் விவேக, வைராக்கியம் மிக்க சாதகரானார். நாமும் அந்தப் பிரார்த்தனையை ஒரு கணம் எண்ணி ஹிருதய சுத்தி பெறுவோம்!

## கருவிகளில் உபதேசம்

மூன்றாம் வகையினர், உபதேசத்தைக் கேட்டதும் அகத்திற்குள் இறக்கிக் கொள்ளாமல், வாய்ஸ் ரெகார்டிங், டி.வி.டி, ஐ - பாட் என எத்தனையோ நவீன வசதிகளில் அவற்றை ஏற்றிக் கொள்கின்றனர்.

ஹிருதயத்தில் இடம் பெற வேண்டியது ஏட்டிலேயே இருந்துவிடுகிறது. விளைவு? எழுதிக் கொண்ட அந்த உபதேசத்தைப் பலரிடம் காட்டிக் காட்டிக் குதூகலிக்கிறான் அவன். உபதேசத்தைப் பிரச்சாரம் செய்கிறான், தனக்குப் பயனில்லாமலேயே.



## நினைவில் உபதேசம்

குருவின் உபதேசத்தை நினைவில் பலரும் வைத்துக் கொள்கிறார்கள். நல்லதுதான். அதிலுள்ள நல்லம்சம் என்னவென்றால் எப்போது வேண்டுமானாலும் குருவாக்கிய உபதேசத்தை நினைவுபடுத்திக் கொள்ளலாம். அதனால் புதுத் தெம்பு பிறக்கும்.

ஆனால், நினைவில் மட்டும் உபதேசம் சிக்கிவிடுவதால் ஏற்படும் சிக்கல் என்னவென்றால், நினைவாற்றலுள்ள மனிதன் அந்த உபதேசத்தைப் பல இடங்களிலும் திரும்பத் திரும்பக் கூறத் தொடங்கிவிடுகிறான். கூறித் திரிவதில் மட்டுமே சுகம் காண்கிறான். வாயில் போட்டதை மெல்ல வேண்டியவன், வாந்தி எடுப்பது போல.

இவ்வாறு செய்து கொண்டிருந்த சதாசிவ பிரம்மேந்திரரை அவரது குரு, ‘உன் வாய் மூடாதோ?’ என்று கேட்டார் வேகமாக. அக்கணமே சீடனின் வாய் மூடியது; ஹிருதயம் திறந்து கொண்டது.

## மனதில் உபதேசம்

அடுத்த நிலையில் இருப்பவன், குரு கூறிய உபதேசத்தை மனதில் மட்டும் வைத்திருக்கிறான். அவ்வாறு வைத்திருப்பதால் உள்ள சிறப்பம்சம், என்றாவது அந்த உபதேசம் அவனது அடியாழத்திலிருந்து ஹிருதயத்திற்குச் சென்றுவிடும். அதனால் அவன் நல்ல பக்தனாகவோ, முக்தனாகவோ மாறிவிடுவான்.

## அகங்காரத்தில் உபதேசம்

ஆனால் உபதேசத்தை மனம் எனும் ஆணியில் மட்டும் மாட்டி வைத்திருப்பவனிடம் வந்து சேரும் ஆபத்து என்ன தெரியுமா?

‘என் குருவிற்கு இவ்வளவு சீடர்கள் இருக்க, குரு எனக்கு மட்டுந்தானே சொன்னார்! அப்படியென்றால், நான்தான் அவரது பிரதான சீடன்’ என்று அந்த அகங்காரம் பிடித்த மனம் தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்ளும்.

உபதேசம் அவனது அகங்காரத்தின் வழியே செயல்படுகிறது. கள் குடித்த குரங்கைத் தேள் கொட்டி, அதைப் பூதமும் பிடித்து ஆட்டிய கதைதான்.

## அறிவில் உபதேசம்

மனதிலிருந்தும் அகங்காரத்திலிருந்தும் உபதேசத்தை மீட்டு இன்னும் அடியாழத்திற்குச் சென்றால், அங்கு வித்யா ஸ்தானம் - அறிவு நிலையில் அது நிற்கிறது.


தபால் மூலம்
வெற்றிகரமான 31-ம் ஆண்டில்
வீட்டில் இருந்தபடியே படிக்கலாம்...
சிறுவர் சித்திரப் பயிற்சி
CHILDREN'S
ART COURSE
ஓவியம் வரையக் கற்றுக் கொள்ளுங்கள்!
கற்பனை சக்தி, படைப்பாற்றல் வளரும்,
கையெழுத்தும் அழகாகும், மனம் ஒருமைப்படும்.
உங்கள் சித்திரங்களை அன்பளிப்பாக வழங்கலாம்,
வீட்டில் மாட்டலாம், விலைக்கும் விற்கலாம்.
பள்ளி ஓவியப் போட்டிகளில் கலந்துகொள்ளுங்கள்;
பரிசுகள், பாராட்டுக்களை பெறுங்கள்!
அருமை பெற்றோர்களே!
உங்கள் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி
உங்கள் கனவு எதுவானாலும் இருக்கட்டும்.
ஆனால் ஓவியம் கற்றுக்கொடுங்கள்.
அது அவர்களை நேர்த்தியானவர்களாக மாற்றும்.
இது ஒரு தவம். இது ஒரு தியானம்.
சிந்தனையும், செயலும் சீர்படும்.
நேரம் பயனுற விளங்கும்.
விவரப்புத்தகம் இலவசம்!
உங்கள் முகவரியை போனில் சொல்லுங்கள்.
அல்லது SMS அனுப்புங்கள்
இலவச விவரப் புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும்
AJANTHA
School of arts (Govt. Regd.)
No.6, Muthu Nagar, Poonamallee, Chennai - 56. Ph : 044 - 26490363
Cell : 93810 50477, 99403 90708 email : ajanthaschoolofarts@yahoo.com

இந்த நிலையில் உள்ள வாய்ப்பு என்னவென்றால், வித்யானந்தம் அதாவது 'சிறந்ததொரு கருத்தை என் குருநாதர் கூறிவிட்டார். அதை நான் நன்கு சிந்தித்து அதற்குத் தக்கபடி வாழ்வேன்' என்று அந்தப் பக்தன் முயற்சிப்பான். இந்த நிலையிலுள்ள ஆபத்து என்னவென்றால்...,

'இந்த உபதேசத்தை எந்த ஆச்சார்யர் எப்படியெப்படி சொல்லியிருக்கிறார், அவர் ஏன் இப்படி சொல்கிறார்? ஏன் அவ்வாறு கூறவில்லை?



கூறியதில் எதுவெல்லாம் விட்டுப் போனது? அதை நான் சரி செய்ய வேண்டும்' என அலசி ஆராய்ந்து அலையும் நிலைக்கு வந்து விடுகிறான் அவன்.

இந்த நிலையில் இருக்கும் பலரும் குருவின் அருளைப் பெற்ற சீடர்களாவதற்குப் பதிலாக, குருவை வெல்ல நினைத்துச் சீரழிகிறார்கள்.

## உணர்வில் உபதேசம்

அடுத்த உன்னத நிலை, உபதேசத்தை உணர்வால் உணர்வது. திரௌபதி, துரியோதனன் சபையில் துகிலுரிக்கப்பட்டபோது, அவளைக் காத்தது யார்?

பராக்கிரமசாலிகள் அவளது கணவன்மார்கள், மாவீர சூரர்கள் அவளது உறவினர்கள்; இருந்தாலும் திரௌபதி துன்பப்பட்டாள்.

'கண்ணன்தான் காத்தான்; கண்ணன்தான் என்றும் காப்பான்' என்பது அவளது மனதிற்கும் மூளைக்கும் அனுபவத்திற்கும் தெரிந்திருந்ததுதான். ஆனால் அந்த உண்மையை உபதேசமாக திரௌபதி உணர்ந்தது துரியோதனனின் சபையில்தான். இவ்வாறு ஓர் உபதேசமானது,

சத்குருவின் ஹிருதயத்தில் உதித்து,
அவரது தூய மனதில் கருணையுடன் கலந்து,
அகங்காரச் சேற்றில் சிக்கி விடாமல்,
அறிவு எனும் ஆற்றலுடன் சேர்ந்து,
சீடனின் ஆன்ம நலனை நினைவில் நிறுத்தி,
வேதம் ஓதும் சத்குருவின் வாயிலிருந்து சீடனின் காதில் சேரும் - இந்த உபதேசப் பயணம் எப்படி நலம் விளைவிக்காமல் போய்விடும்?

ஸுரத மன்னனும் சமாதி என்ற வைசியனும் தங்களது படைகளாலும், அமைச்சர்களாலும் குடும்பத்தினராலும் ஒதுக்கப்பட்டனர்.

உலக வாழ்வு நிலையில்லாதது என்ற உண்மை அனுபவத்தில் பெற்றிருந்தாலும் நடைமுறையில் பயன்படவில்லை. அவர்களது மனம் உதாசீனப் படுத்தியவர்களைக் குறித்த வீண் கவலையையே நாடி நின்றது. வீண் பற்று விஞ்சி நின்றது.

ஆதிபராசக்தியான தேவியின் மாஹாத்மியத்தை மேதஸ் ரிஷி எடுத்துரைத்து, தெய்வத் துணையை அவர்களுக்கு உணரச் செய்து - அந்த உபதேசத்தை உணர்வில் ஊட்டினார்.

இவ்வாறு குருவின் ஹிருதயத்திலிருந்து தொடங்கிய ஒரு சத்தான உபதேசம், போய்ச் சேரும் வழிகளில் சிக்காமல் சென்றால் சீடனின் ஹிருதயத்தை வந்தடையும்.

'சாதாரண குரு மந்திரத்தை - உபதேசத்தைச் சீடனின் காதில் ஓதுகிறார். உத்தம குருவோ சீடனின் ஹிருதயத்திலேயே மந்திரத்தை ஏற்றுகிறார்' என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ணர்.

சத்குரு தயாராக இருந்தாலும் சத்சீடர்களாக நாம் விளங்கப் பிரார்த்திப்போம்; பிரயத்தனம் செய்வோம். ❖


## நல்ல கருத்துகளைப் பரப்புவோம், வாருங்கள்!

'பலவீனத்திற்கான பரிகாரம் ஓயாது பலவீனத்தைப் பற்றியே சிந்திப்பதல்ல. மாறாக, பலத்தைப் பற்றிச் சிந்திப்பதுதான் தீர்வு' என்பார் சுவாமி விவேகானந்தர்.

தற்போதைய நமது சமுதாயத்தின் அத்தனை பலவீனங்களையும் பலங்களாக மாற்ற நாம் ஏன் முயலக் கூடாது?

அதற்கு எளிய வழி நவீன காலத்திற்கு மிகவும் ஏற்றதான ஸ்ரீராமகிருஷ்ண - விவேகானந்தரின் கருத்துகளை எல்லோரிடமும் கொண்டு செல்வதுதான்.

அந்தக் கருத்துகளை எப்படிக் கொண்டு சேர்ப்பது? அதற்கு மிக எளிய வழி உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம் எனும் தீபத்தை உங்கள் பள்ளியில், நண்பர்கள், உறவினர்கள் இல்லங்களிலும் ஏற்றி வைத்து, அவர்களையும் விஜயத்தின் சந்தாதாரர்களாக்குங்கள். சந்தாதாரர்களான நீங்கள் உரிய காலத்தில் உங்களின் சந்தாவைப் புதுப்பித்து, விஜயம் தொடர்ந்து உங்களுக்குச் சேவையாற்றிட உதவுங்கள்.



✶ முகவரியின் முதல் வரியில் உள்ள எண்ணானது (RV என்று தொடங்குவது) உங்களின் விஜயம் இதழின் சந்தா எண் ஆகும். அந்த எண்ணைத் தங்களது எல்லாக் கடிதங்களிலும் குறிப்பிடவும்.

✶ இரு வாரங்களுக்குப் பிறகும் இதழ் கிடைக்காவிடில், எங்களிடமிருந்து மாற்று இதழ் பெறலாம். இதழ் கிடைக்காதது குறித்து ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் வரும் புகார்கள் (வெளி நாட்டுச் சந்தாதாரர்கள் 2 மாதத்திற்கு மேல் தெரிவிக்கும் புகார்கள்) ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

தொடர்புக்கு ✆:044- 24621110. Extn : 215

# அடிபணியாதே! அடி! பணியாதே!

**கேள்வி: வாட்ஸ் அப் (Whatsapp) பில் பலவிதமான தகவல்களை என் நண்பர்கள் அனுப்புகிறார்கள். அவற்றில் பல எனக்கு எரிச்சலை ஊட்டுகின்றன. சில பயனுள்ளதாக உள்ளன.**

**வீணாக வரும் Whatsapp-ஐ எப்படி கட்டுப்படுத்துவது?**

- சிரஞ்சீவி பார்கவ், திண்டிவனம்.

பதில்: Thoughts-up (சிந்தனைகளை மேம்படுத்தும்) வகையில் Whatsapp இருக்கிறதா என்று பார். அப்படி இல்லாதவற்றை அனுப்புபவர்களிடம் நேரடியாகக் கூறி விடு அல்லது குழுவிலிருந்து வெளி வந்துவிடு.

**கேள்வி: காந்திஜிக்கும் நேதாஜிக்கும் லட்சியம் இந்தியச் சுதந்திரம் தானே! அவர்களுக்குள் ஏன் பல வேறுபாடுகள் தோன்றின?**

- ஆசைத்தம்பி, ஓமலூர்.



பதில்: தம்பி, இன்றைய இளைஞர்கள் பலர் காந்திஜி - நேதாஜி புரிந்த தியாகங்களைப் பற்றி வாசிக்காமல், அவர்களை நினைவு கொள்ளாமல் கைபேசியில் 3G, 4G-க்களில் சீரழிவதைக் காண்கிறோம்.

அப்படிப்பட்ட நிலையில் காந்திஜி நேதாஜி பற்றி ஒரு கேள்வி கேட்டு நெஞ்சை நெகிழ வைத்து விட்டாய் தம்பி. இந்தக் கேள்விக்குப் பக்கம் பக்கமாகவும் பதில் கூறலாம்; ஒரே வரியிலும் கூறலாம்.

சொற்பொழிவாளர் ராஜாராமன் ஒருமுறை இவ்வாறு கூறினார்: 'காந்திஜிக்கும் நேதாஜிக்கும் லட்சியம் ஒன்றே. அவர்கள் விடுதலைக்காகப் போராடிய முறைகள்தான் வேறுபட்டன'.

'ஆங்கிலேயன் போடும் அநியாய உத்தரவிற்கு 'அடிபணியாதே' என்றார் காந்திஜி.'

அநியாய ஆங்கிலேயன் திமிராக உத்தரவிட்டால் அவனை, 'அடி; பணியாதே' என்றார் நேதாஜி.

**கேள்வி: மனப்பாடம் மட்டும் செய்து படிப்பதால் என்ன நன்மை? என்ன தீமை?**

- செல்வன் திருநாவுக்கரசு, பள்ளிப்பாளையம்.

பதில்: ஒரு கவிதையைக் கேள்.

கணித பாடத்தில் புலியாய் வருவான் என்றெண்ணி,
அவனை மனப்பாடம் செய்து மதிப்பெண்
வாங்க வைத்தனர் அப்பாவும் ஆசிரியரும்!
இன்று அவன் வளர்ந்து நிற்கிறான்
பாடம் செய்யப்பட்ட புலியாக;
உயிரின்றி, உற்சாகமின்றி உழைக்கிறான்;
ஊதியக் கணக்கு ஒன்றே குறியென்று!

திருநாவுக்கரசு, மனப்பாடம் செய்வதில் என்ன நன்மை? என்ன தீமை? என்று இப்பொழுது உன் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்வாயா?

**கேள்வி: என் தோழி ஒருத்தி பிடிவாதக்காரியாகவும், தான் சொல்வதே, செய்வதே பெரிது என்றும் நினைக்கிறாள். அவளை எப்படித் திருத்துவது?**

-செல்வி அலமேலு, திருப்பதி.

பதில்: பெர்னார்ட் ஷா ஒரு பெரிய ஆங்கில அறிஞர். நோபல் பரிசு பெற்றவர். சிறந்த நாடகாசிரியர். ஆனாலும் பாவம் கொஞ்சம்....... அகம்பாவம் பிடித்தவர்.

பொதுவாக, அகங்காரம் பிடித்தவர்கள் அதைக் காட்டக் கூடாத இடத்தில் காட்டி மூக்குடைபடுவார்கள்.

ஒருமுறை ஒற்றையடிப் பாதையில் ஷா போய்க் கொண்டிருந்தார், கம்பீரமாக. எதிரே பாதி வழியில் ஒரு சிறுவன் வந்தான். யாராவது ஒருவர் வழிவிட்டால்தான் அடுத்தவர் போக முடியும்.

ஷா சிறுவனிடம் விறைப்பாக நின்று, ''முட்டாள்களுக்கெல்லாம் நான் வழி விட மாட்டேன்'' என்றார். உடனே சிறுவன், ''ஓ.கே. சார். நான் வழிவிடுவேன்'' என்றான்.

யானைக்கும் அடி சறுக்கியது! புரிகிறதா, யார் முட்டாள் என்று!

அலமேலு, உன் தோழி விஷயத்தில் கொஞ்சம் நிதானமாகப் பொறுமையைக் கடைப்பிடி; வாய்ப்பு அமையும்போது அவளிடம் அவளது சிறுபிள்ளைத் தனத்தைச் சொல். அவள் நிச்சயம் திருந்துவாள்.

**கேள்வி : வரப் போகும் பிரச்னைகளை எதிர்கொள்ள தன்னம்பிக்கையும் துணிவும் உண்டாக்கிக் கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன?**

- செல்வி. சாய்பிரியா, சேலம்.

பதில் : ஓர் அடர்ந்த, இருண்ட காட்டில் ஒருவன்

மாணவர் சக்தி சுவிர்

## மாணவ, மாணவிகளே! உங்கள் கேள்விக்குப் பதில் வேண்டுமா?

**ஆசிரியர் - மாணவர் உறவு, சக மாணவ மாணவியிடம் பிரச்னை இல்லாமல் இருப்பது எப்படி? நல்ல நண்பர்களை / தோழிகளைப் பெறுவது எப்படி? பெற்றோர்களிடம் அன்பாக இருப்பது எப்படி? போன்றவை தொடர்பான கேள்விகளை எழுதி அனுப்பினால் சுவிர் பதிலளிக்கக் காத்திருக்கிறார்.**

**ஆசிரியர்களே! நீங்களும் உங்கள் மாணவர்களின் கேள்விகளைத் திரட்டி அனுப்புங்களேன்.**

தன்னந்தனியாகச் சிக்கிக் கொண்டான். எப்படிப் போக வேண்டும் என்று அவனுக்குத் தெரியவில்லை. ஆங்காங்கே கொடிய விலங்குகளின் கொடூரமான சண்டையிடும் சத்தம் கேட்கிறது. அவன் பயந்து செத்தான்.



சிறிது நேரத்திற்குள் திடீரென்று மழை பெய்ய ஆரம்பித்தது. இடி இடித்தது. மின்னல் அவனது கண்ணைப் பறிப்பதாக ஒளிர்ந்தது. ஒதுங்க இடமில்லை. குளிரில் நடுங்கினான். ஓ வென அழுதான். உதவி வேண்டிக் கூவினான். ஒருவரும் வரவில்லை.

கடைசியில் எப்படியும் அங்கிருந்து சென்றே தீருவது என்று தீர்மானித்தான். இருட்டில் திடீரென ஒரு மின்னல் அடித்தது. அந்த ஒளியில் அவன் தனக்கு முன்னால் உள்ள 15 அடி தூரத்தில் என்ன இருக்கிறது என்று பார்த்தான். அந்த மின்னல் ஒளியில் அவன் அந்த தூரத்தைக் கடந்து நின்றான்.

அடுத்த மின்னலில் அவன் அடுத்த 15, 20 அடிகளைப் பயமின்றிக் கடந்தான். இப்படியே போகப் போக அவனுக்குப் பாதை புரிந்தது.

உனக்கு வரும் பிரச்னைகளைச் சமாளிக்க உனக்கு இன்று எந்த அளவிற்குத் தைரியம் இருக்கிறதோ அதை முதலில் பயன்படுத்து.

உன் தைரியமே அந்த மின்னல் ஒளி.

உன்னைச் சுற்றியுள்ள பிரச்னைகள்தான் அடர்ந்த காடு.

பிரியா, இருட்டு எனில் இனி பயப்படுவாயாம்மா? ❖

## கேட்டதும் கிடைத்ததும்

*'என் பழக்க வழக்கங்களை மாற்றிவிடு' என்றேன் இறைவனிடம்.*

*'நீயாக ஏற்படுத்திக் கொண்ட அவற்றை நீதான் மாற்ற வேண்டும்' என்றான்.*

*'என்னை முழுமையானவனாக்கு'.*

*'உன் ஆன்மா முழுமையானது, உடல் தற்காலிகமானது'.*

*'எனக்குப் பொறுமையைக் கொடு'.*

*'சங்கடங்களுக்கிடையில் உருவாவதுதான் பொறுமை. அதைக் கொடுத்துப் பெறுவதில்லை, உணர வேண்டும்'.*

*'எனக்குச் சந்தோஷத்தைக் கொடு'.*

*'உனக்கு ஆசி வழங்குகிறேன். சந்தோஷப்படுவது உன் கையில்தான் உள்ளது'.*

*'என் துன்பங்களிலிருந்து விடுதலை கொடு'.*

*'துன்பங்கள்தான் உனக்கு உண்மையை உணர்த்தி உன்னை எனக்குச் சமீபமாகக் கொண்டு சேர்க்கின்றன'.*

*'எனக்குத் துணிவைக் கொடு'.*

*'துணிவு கொடுத்துப் பெறுவதல்ல. மனதில் உறுதி இருந்தால் துணிவு அங்கே பிறக்கும்'.*

*'செல்வத்தைத் தா'.*



*'எது செல்வம் என்பதைத் தெரிந்து கொண்டு வா'.*

*'எனக்கு அமைதியைக் கொடு'.*

*'நல்லெண்ணம், நன்னடத்தை, நல்லொழுக்கமுள்ள இதயத்தில் அமைதி தானாகப் பிறக்கும்.'*

*'சந்தோஷமாயிருக்க வளத்தைக் கொடு.'*

*'ஏழ்மையைத் தருகிறேன், அதைப் புரிந்து கொள்.'*

*'பிறர் என்னைப் போற்றிட அதிகாரமும் புகழும் கொடு.'*

*'அவை உன் கண்ணை மறைக்கும். உனக்கு அடக்கத்தைத் தருகிறேன்.'*

*'பெரும் செயல்கள் புரிய வசதிகள் பல தா.'*

*'சிறப்பான சாதனை புரிய அறிவும் ஊக்கமும் தருகிறேன்.'*

*'வாழ்க்கையை அனுபவிக்க வேண்டுவன எல்லாம் கொடு.'*

*'வாழ்க்கையைத் தந்துள்ளேன். முறைப்படி வாழ்ந்து எது வேண்டுமோ அதை முயன்று தேடிக் கொள்.'*

*இறுதியாக, 'எல்லாம் கேட்டாய் என்னிடம், ஒன்று மறந்துவிட்டாயே' என்றான் இறைவன்.*

*'என்ன அது?' என்றேன், நமட்டுச் சிரிப்புடன் 'நன்றி' என்று கூறி மறைந்தான்.* -க.ஜெயராமன்

# இளைய பாரதமே, எழுந்திரு!

## இளைஞர் முகாம் - தமிழ்நாடு - 2016

**25, 26, 27 நவம்பர் 2016**
(வெள்ளி, சனி, ஞாயிறு)

**16 முதல் 30 வயதுள்ளவர்கள் வரை ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொள்ளலாம்**

முகாம் நடத்துபவர்கள்: **ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்** (தலைமைச் செயலகம், பேலூர் மடம், வங்காளத்தின் கிளை மையம்)
SRKV அஞ்சல், பெரியநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் 641 020. Ph: 0422-269 2676, Cell: 9944941427, e-mail: ycsrkvcbe20@gmail.com, Web: www.srkv.org

*முகாமின் நோக்கம்: தேசிய விழிப்புணர்வு* - இளைஞர்களை நாட்டுக்காக அர்ப்பணிக்கும் புனிதமான பணியில் ஈடுபடுத்தி நல்வழி காட்ட, தேசத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட சுவாமி விவேகானந்தர் போன்றோரை முன்னோடிகளாக வைத்து நடத்துவது.

### முகாமின் அன்றாட நிகழ்வுகள்

**காலை**

| | | |
|---|---|---|
| 5:00 | : | துயிலெழுதல் |
| 6:00 – 9:00 | : | பக்திப்பாடல், தியானம், யோகா, சிற்றுண்டி |
| 9:00 – 12:30 | : | இரு சொற்பொழிவுகள், கேள்வி–பதில் தேனீர் இடைவேளையுடன் |

**மதியம்**

| | | |
|---|---|---|
| 02:00 – 04:45 | : | கலந்துரையாடல், கட்டுரை சமர்ப்பித்தல், கேள்வி–பதில் |
| 05:00 – 06:00 | : | விளையாட்டுகள் |
| 06:00 – 08:00 | : | Videofilm, இரவு உணவு |
| 08:00 – 09:30 | : | கலை நிகழ்ச்சிகள் |

### கலந்துரையாடல், பேச்சு, கட்டுரை சமர்ப்பித்தலுக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தலைப்புகள்

- ✦ சுவாமி விவேகானந்தர் விரும்பிய பெண் விடுதலை.
- ✦ சுவாமி விவேகானந்தர் பரம்பரையில் சகோதரி நிவேதிதையும் பாரதியாரும்.
- ✦ சுவாமி விவேகானந்தரும் ஸ்ரீராமானுஜாச்சாரியாரும்.
- ✦ இதிகாசங்கள் உணர்த்தும் நற்பண்புகள்.
- ✦ மனதில் உறுதி வேண்டும்.
- ✦ இளைஞர்களின் தலைமைப் பண்பிற்கான வெற்றி மந்திரங்கள்
- ✦ இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் - சமுதாய முன்னேற்றம்.
- ✦ உலக அமைதிக்கு இளைஞர் சக்தி.
- ✦ மனித மேம்பாட்டிற்கு சுவாமி விவேகானந்தரும் கல்வியும்.
- ✦ சுவாமி விவேகானந்தர் அறிவுறுத்திய ஆளுமை வளர்ச்சி.
- ✦ மனதின் அதிசயத்தக்க சக்தியை உபயோகிப்பது எப்படி ?
- ✦ உலக குடிமக்களாக இளைஞர்கள்.
- ✦ ஆகுக & ஆக்குக.

விருப்பமுள்ள இளைஞர்கள் **10 நவம்பர் 2016**-க்குள் தாங்கள் சமர்ப்பிக்க விரும்பும் கட்டுரையின் நகலை (தமிழ் அல்லது ஆங்கிலம்) எங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும். 5 நிமிடத்திற்குள் படிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். சுயமாக எழுதப்பட்ட, தெளிவான, எடுத்துக்கொண்ட தலைப்புடன் தொடர்புடைய, நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் உள்ள கட்டுரைகளுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்படும். **தேர்வுக்குழுவின் முடிவு இறுதியானது**.

- ◆ முழுவதும் உறைவிட முகாம்
- ◆ சைவ உணவு
- ◆ பாதுகாப்பான எளிமையான இருபாலருக்கும் தனித்தனி தங்குமிடம்
- ◆ பெரும்பாலான நிகழ்வுகள் தமிழிலும் சில ஆங்கிலத்திலும் இருக்கும்
- ◆ பங்கேற்போர் சாதாரணமான படுக்கை போர்வையுடன். ஸ்வெட்டர், டார்ச் லைட் மற்றும் குடை போன்றவற்றையும் எடுத்துவர வேண்டும்.
- ◆ உடைகளைப் பொறுத்தவரை கண்ணியமாக, நமது நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உகந்தவையாக இருக்க வேண்டும். ஜீன்ஸ் மற்றும் மிகவும் இறுக்கமான உடைகளை முகாமில் அணியக்கூடாது.
  <u>ஆண்கள்:</u> கௌரவமான கலரில் பேண்ட், சர்ட். <u>பெண்கள்:</u> சேலை/சுடிதார், சல்வார் கம்மீஸ்
- ◆ போதைப் பொருள்களை (சிகரெட், மது, போதை பொருள்கள்) பயன்படுத்துவது கண்டறியப்பட்டாலோ அல்லது நாகரீகமற்ற முறையில் நடந்துகொண்டாலோ அவர்கள் உடனடியாக முகாமைவிட்டு வெளியேற்றப்படுவார்கள்.

**முகாம் கட்டணம் : உணவு, தங்குமிடம் மற்றும் புத்தகங்கள் உட்பட ஒருவருக்கு ரூ.500/-**

முகாமில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் கட்டணத்தை டி.டி. அல்லது மணி ஆர்டராக "Ramakrishna Mission Vidyalaya" என்ற பெயருக்கு எடுத்து செயலர், ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம், வித்யாலய அஞ்சல், கோவை - 641 020. என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் செலுத்த விரும்புவர்கள் ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தில் உள்ள **இளைஞர் முகாம் அலுவலகத்தில் காலை 9.30 முதல் 12.00 வரையிலும் மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரையிலும்** செலுத்தலாம். **Thro' NEFT/RTGS** மூலம் செலுத்த **Ramakrishna Mission Vidyalaya, Indian Overseas Bank, Periyanaickenpalayam Branch, Account No.256101000015000, Account Type: SB, IFSC Code: IOBA 0002561**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்கள் முகாம் கட்டணத்துடன் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள்: **30-10-2016.**
அதிகபட்சமாக 1200 பேர் வரை கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். முதலில் விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே வாய்ப்பு.

எங்களுடைய இணையதளத்திலிருந்தும் இதற்கான பதிவுப்படிவத்தை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

# சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்துச் செய்திகள்



ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் ஓர் அங்கமான விவேகானந்த கலாச்சார மையம் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச யோகா கருத்தரங்கம் மடத்தில் செப்டம்பர் 10, 11 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தர் ஆத்ம குணங்கள், எப்போதும் மகிழ்ச்சியாக இருத்தல், உடல் ஆரோக்கியம் போன்றவற்றை விளக்கி ஆசியுரை அளித்து இந்தக் கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்தார்.

PCRD - டாக்டர் சீஷான் அலி, டாக்டர் நடராஜன், சமையற்கலை நிபுணர் செஃப் வெர்கில் ஜேம்ஸ், டாக்டர் ஜெயந்தி, இன்டர்நேஷனல் வெஜ் யூனியனின் தலைவர் டாக்டர் C.K.அசோக் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு முகாமை நடத்தி வைத்தனர்.

## முகாமில் முன்வைக்கப்பட்ட கருத்துகள்

தாவர உணவுகள் மற்றும் மன நிறைவாக உண்பது; நமது உணவுப் பழக்க வழக்கத்தின் மூலம் இரண்டாம் வகை நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட உறுப்பை எப்படி மறுசீரமைத்துக் கொள்வது;

உடல், மனம், ஆன்மா மூன்றும் சிறப்புற்றிருக்கத் தேவையான 3E எனப்படும் Energy, Emotion, Environment என்பதன் அவசியம்;

காய்கறிகள், கீரைகள் ஆகியவற்றின் சத்து அழியாமல் சமைக்கும் செயல்முறை விளக்கம்;

உடல் உறுப்புகளின் பணி நேரம் மற்றும் அதற்கேற்ப நாம் செய்ய வேண்டியவை; இரவு நேரத்தில் நீண்ட நேரம் கண்விழித்திருப்பது ஏற்படுத்தும் உடல் பிரச்னைகள்;

மேலும் தாவர உணவுகளை மட்டும் உண்பதன் மூலம் பெறக்கூடிய பலன்கள்; பழைய சாதம் மற்றும் இட்லி ஆகியவை மேலைநாட்டவர்களால் சத்தான உணவுகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டது; பால் தயாரிப்புகளுக்குப் பதில் எள், கேழ்வரகு, முருங்கை ஆகியவற்றை உணவில் சேர்த்துக் கொள்வது போன்ற ஆரோக்கியத்திற்கான விஷயங்கள் விளக்கப்பட்டன.

சர்வதேச அரங்கில் தாவர உணவைப் பின்பற்றும் மிகவும் பிரபலமான விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைப் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது.

இரண்டு நாட்களும் காலை தேநீர், மதிய உணவு, மாலை சிற்றுண்டி அனைத்தும் சிறுதானியங்கள், முளைகட்டிய பயறு வகைகள், பனை வெல்லம் போன்ற இயற்கை உணவுகளைக் கொண்டு தயார் செய்யப்பட்டிருந்தது அனைவரையும் கவர்ந்தது.

பங்கேற்பாளர்களில் பலர் தங்களது குறைபாடுகளைக் கூறி அவற்றிற்கான ஆலோசனைகளை நெறியாளர்களிடமிருந்து பெற்றனர். மொத்தத்தில் இதயத்திற்கு இதமாக இருந்தது இந்த முகாம்.

–தங்கமணி

## மெய்யூரில் ஒரு திருவிழா

11, செப்டம்பர், 2016 அன்று திருவள்ளூர் மாவட்டம், மெய்யூர் கிராமம் களை கட்டியிருந்தது. அங்கு ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சேவைப் பணிகளுக்காகப் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்தை மடத்தின் தலைவர் சுவாமி கௌதமானந்த மகராஜ் திறந்து வைத்தார்.

கடந்த 15 ஆண்டுகளாக இப்பகுதியில் உள்ள பின்தங்கிய மக்களுக்கு ராமகிருஷ்ண மடம் மருத்துவம், கல்வி, சுற்றுப்புற சுகாதாரம், பெண்கள் மேலாண்மை, கோயில் திருப்பணி என்று பலவிதங்களில் பணியாற்றி வருகிறது.

இப்பணிகளுக்கு வலு சேர்க்கவே புதிய கட்டிடம் ஏற்படுத்தப்பட்டது. திறப்பு விழா பொதுக்கூட்ட வரவேற்புரையில் மடத்தின் மேலாளர் சுவாமி விமூர்த்தானந்தர், 'மெய்யூர் மக்களின் வாய்மையைப் பறைசாற்றும் வண்ணமாக, [மெய் + ஊர்] என்று வழங்கப்படும் இத்திருத்தலத்தில் நம் குருமகராஜ் வந்து அமர்ந்துள்ளார்' என்றார்.

ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தர் தமது உரையில் ஊட்டியின் அருகிலுள்ள ஒரு கிராமத்து மக்கள் குடிப் பழக்கத்தை விட்டது பற்றிக் கூறி அதுபோல் இப்பகுதி மக்களும் அந்தத் தீய பழக்கத்தை முற்றிலுமாக விட்டுவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

BPCL மேலாளர் திரு. வரதராஜன், 'தான் ராமகிருஷ்ண மடத்தின் பள்ளி, கல்லூரியில் படித்ததாலேயே இப்பதவிக்கு வர முடிந்தது என்பதைக் கூறி, இப்பதவிக்கு வந்ததைவிட இந்தக் கிராம மக்களின் சேவைக்கான கட்டிடம் கட்டுவதற்கு உதவி செய்த தன் மூலம் பெருமகிழ்ச்சி அடைகிறேன்' என்றார்.

நீதிபதி [ஓய்வு] சந்துரு மற்றும் ஊர்ப் பிரமுகர்கள் பலர் விழாவில் உரையாற்றிச் சிறப்பித்தனர்.

மெய்யூரில் தனது சேவைப் பணிகளை மேலும் விரிவாக்க மடம் திட்டமிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

– ஜி.கோபாலகிருஷ்ணன்



சிறு காரியங்களை நீங்கள் நன்றாகச் செய்தால், பெரியவற்றை இன்னும் நன்றாகச் செய்வீர்கள். - சுவாமி பிரம்மானந்தர்

# ஒரு வெற்றியாளர் எழுதுகிறார்...

ஸ்ரீராமகிருஷ்ண விஜயத்தின் 2006 தேசிய இளைஞர் தினப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ப.நாராயணன், அப்போட்டியால் தன்னிடத்தில் ஏற்பட்ட நல்ல தாக்கத்தைப் பற்றி நமது மடத்தின் மேலாளர் சுவாமிஜிக்கு எழுதிய கடிதம்.

25.09.2016

இலண்டன்

மதிப்பிற்குரிய ஸ்வாமிஜி அவர்களுக்கு,

பணிவான வணக்கங்கள். ‘14-ஆம் ஆண்டு தேசிய இளைஞர் தினப் போட்டி’ விவரம் கண்டு மகிழ்ந்தேன். இந்தப் போட்டியில் இடம் பெற்றுள்ள சுயமுன்னேற்றம், சமுதாயச் சீரமைப்பு சார்ந்த கேள்விகள் யாவும் போட்டியில் கலந்து கொள்வோரின் வாழ்வை முன்னேற்றும்! அதற்கு அடியேன் ஒரு சிறிய உதாரணம்.



நான் +2 வகுப்பில் தோல்வியுற்றேன்.

‘மலை போன்ற சகிப்புத்தன்மை, இடைவிடாத முயற்சி, எல்லையற்ற நம்பிக்கை இவையே நற்காரியத்தில் வெற்றி தரும்’ என்ற சுவாமி விவேகானந்தரின் வீரமொழி எனக்கு உற்சாகமூட்டியது. தோல்வியிலிருந்து மீண்டெழுந்து கல்லூரி சேர்ந்தேன்.

தேசிய இளைஞர் தினப் போட்டியில் 2005ல் 16-ம் இடத்திலும், 2006-ல் முதல் இடத்திலும் தேர்வுற்றேன்! இந்தப் பத்து ஆண்டுகளில் என்னை நான் ஒரு வெற்றியாளனாக உணர்கிறேன். கணினிப் பயிற்சி மற்றும் படிப்பில் சாதனை புரிந்துள்ளேன்.

நான் எழுதிய மூன்று புத்தகங்களில், ‘Software Automation Testing Secrets’ மிக அதிக அளவில் விற்பனையில் சாதித்ததோடு, பலருக்கு I.T. நிறுவனங்களில் வேலை கிடைக்க உதவியுள்ளது. 220 நாட்களில் 600 பிரதிகள் விற்றன. இப்போது இரண்டாம் பகுதியை எழுதி வருகிறேன்.

வேலை நேரங்கள் தவிர விடுமுறை நாட்களில் கல்லூரி செல்லும், வேலை தேடும் இந்திய, பாகிஸ்தானிய, பங்களாதேஷிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய மாணவர்களுக்கு ‘Automation testing’ (மென்பொருள் பயன்பாடு பரிசோதனையில் தானியங்கித் தொழில் நுட்பம்) கற்பிக்கிறேன். பலர் வேலை கிடைத்து மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். எனது youtube காணொளி வகுப்பறை 8 நாட்களில் 1200 பேர்களால் பார்வையிடப் பெற்றுள்ளது.

அனைத்து அகில இந்திய வானொலியின் எட்டு நிகழ்ச்சிகளில் சுதந்திரக் கதைகளையும் சுவாமிஜி பற்றிய செய்திகளையும் பேசியுள்ளேன். இங்கிலாந்து வாழ் இந்தியக் குழந்தைகளுக்கும் கதைகள் (சுவாமிஜி மற்றும் சரித்திரக் கதைகள்) கூறி இந்தியப் பண்பாட்டை விளக்க என்னால் இயன்றதைச் செய்து வருகிறேன்.

உலகின் எந்த மூலையில் இருந்தாலும் இறைவழிபாடு - என்பதை 'தேசிய இளைஞர் தினப் போட்டி’ எனக்குக் கற்றுக் கொடுத்தது. இப்போதும் இங்கிலாந்தில் வசித்தாலும் தினமும் இறை வழிபாட்டைத் தவறாது கடைபிடிக்கிறேன்.

இவ்வாறு வாழ்க்கையில் நான் நல்ல குடிமகனாக மலர, ‘அன்று’ தாங்கள் இளைஞர் தினப் போட்டியின் மூலம் அளித்த நம்பிக்கையும், வழிகாட்டுதலுமே காரணம். இந்த வருடத்து ‘இளைஞர் தினப் போட்டி’யில் ஏராளமான மாணவர்களும் இளைஞர்களும் கலந்து கொண்டு பயனடைய வாழ்த்துகிறேன்.

- நாராயணன் பழனி, லண்டன்.

## பட்ட மரத்தைத் துளிர்க்கச் செய்தவன்!

பொதுக் கூட்ட மேடை ஒன்றில், ‘கண்ணன் என் மன்னன். அவனது கானம் கேட்டால் பட்ட மரம் துளிர்க்கும்...’ என்று கவிஞர் கண்ணதாசன் பேசிக் கொண்டு போனார்.

அப்போது கூட்டத்திலிருந்த வாலிபன் ஒருவன் கேட்டான்: கவிஞரே! நீங்கள் சொன்னது உண்மையென்றால் கண்ணனின் கையிலிருக்கும் புல்லாங்குழல் பட்டமரம்தானே. அம்மரம் ஏன் துளிர்க்கவில்லை?



வாலிபன் கேட்ட கேள்வியினைத் தொடர்ந்து கரகோஷமும் ஆரவாரமும் எழுந்தது.

ஆரவாரம் அடங்கிய பின்பு, “தம்பி! புல்லாங்குழல் பட்டமரம்தான். ஆனால் கண்ணனது கைகளில் எப்போதும் பட்டுக் கொண்டேயிருப்பதால் அதற்கு மீண்டும் பிறவி கிடையாது. நேராக அதற்கு மோட்சம்தான். அதனால்தான் பட்ட மரமான புல்லாங்குழல் துளிர்க்கவில்லை...” என்று சமயோசிதமாக விளக்கம் கூறினார் கண்ணதாசன்.

கேள்வியைக் கேட்ட வாலிபன் உட்பட கூட்டத்திலிருந்த அனைவரும் எழுப்பிய கரகோஷமும் ஆரவாரமும் விண்ணைப் பிளந்தன.

- சி. பன்னீர்செல்வன்

புகைப்படப் புதிர்

# மரமே மூலவர்



திருக்குளம்



மூலவரான ஆலமரம்

தவத்தில் சிறந்து விளங்கிய வான் கோபர் மற்றும் மகாகோபர் என்ற இரு முனிவர்களும், 'இறைவனைச் சென்றடைய சிறந்த வழி இல்லறமா? துறவறமா?' என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது இறைவன் இத்தலத்தில் உள்ள வெள்ளால மரத்தின் கீழ் எழுந்தருளினார். அந்த முனிவர்களிடம் இல்லறமோ, துறவறமோ எதுவாயினும் அதற்குரிய நெறிமுறைகளைப் பின்பற்றினால் ஒன்றைவிட மற்றொன்று உயர்ந்ததும் இல்லை, தாழ்ந்ததும் இல்லை என பொதுவாகத் தீர்ப்பு கூறினார்.

அதனால் பொது ஆவுடையார் என்றும் மத்தியஸ்தம் செய்தவர் என்பதால் மத்தியபுரீஸ்வரர் என்றும் இத்தலத்து இறைவன் அழைக்கப்படுகிறார்.

இக்கோயிலில் கார்த்திகை சோமவாரம் விசேஷமானது. அன்று இரவு 12 மணியளவில் நடை திறக்கப்பட்டு பூஜைகள் செய்யப்படுகின்றன. மற்ற நாட்களில் நடை திறக்கப்படுவதில்லை.

இறைவன் சிதம்பரத்தில் நள்ளிரவு பூஜை முடிந்த பிறகு தனது பரிவாரங்களுடன் இத்தலத்து வெள்ளால மரத்தின் கீழ் எழுந்தருளி, காட்சி தந்து அந்த மரத்திலேயே ஐக்கியமானார் என்கிறது தலவரலாறு.

இக்கோயிலில் இத்தல மரத்தைச் சுற்றிச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. சுவருக்கு உட்பட்ட பகுதியே கருவறை! ஆலமரமே சிவபெருமான்! இதுவே இத்தலத்தின் சிறப்பு.

மேற்கு நோக்கி வீரசக்தி விநாயகர் சந்நிதியும் அருகில் திருக்குளமும் உள்ளன. அம்பாளுக்கென்று தனி சந்நிதி இல்லை.

விநாயகர் சந்நிதிக்கு எதிரில் உள்ள புளிய மரத்தின் அடியில் அலங்கார உடையில் வான்கோபரும் துறவற உடையில் மகாகோபரும் வடக்கு நோக்கி தவக்கோலத்தில் வீற்றிருக்கும் சந்நிதிகள் உள்ளன.



கருவறை சுவர்

இந்த ஆலமரத்தின் இலைகள் மருத்துவ குணம் உடையவை. எனவே பக்தர்களுக்கு இலையும், திருநீறும் பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

பட்டுக்கோட்டையிலிருந்து 12 கி.மீ. தூரத்தில், முத்துப்பேட்டை செல்லும் பேருந்து வழித்தடத்தில் இத்தலம் உள்ளது. தலம் எது தெரியுமா?

அ. துறையுண்டார் கோட்டை

ஆ. பரக்கலக் கோட்டை

இ. சுந்தரக் கோட்டை

விடை : இ.

தஞ்சை ஜெயபாலன்

# ஸ்ரீசாரதா ஆஸ்ரமம்

## ஸ்ரீ சாரதா சேவாலயா

விவேகானந்த நகர், திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலை,
புதிய எடைக்கல், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் - 606 107.
போன்: 89030 06955 செல் : 94431 21452
இணையத்தளம்: www.srisaradaashram.org e-mail : ashram@srisaradaashram.org

## இளகும் உள்ளங்களுக்கு ஓர் எளிய வேண்டுகோள்!

### கிராமப்புற ஏழைச் சிறுமிகளுக்கான ஓர் அன்பாலயம்



*பேரன்புடையீர்! வணக்கம்.*

*நமது ஸ்ரீசாரதா ஆஸ்ரமம் கடந்த சில வருடங்களாக "ஸ்ரீசாரதா சேவாலயா" என்ற இலவச விடுதியை கிராமச் சிறுமிகளுக்கான ஓர் அன்பு இல்லமாக நடத்தி வருகிறது. குக்கிராமத்தில் வசிக்கும் வசதியற்ற மிக ஏழ்மையான 150 கிராமச் சிறுமிகள் சேவாலயத்தில் தங்கி, கல்வி பயின்று வருகின்றனர்.*

*கிராமத்துச் சிறுமிகள் பல்வேறு வேலைகளில் ஈடுபட வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில்... படிப்பென்பது பகற் கனவாய் ஆகிவிடுகிறது.*

*இதற்கு ஒரு விடிவெள்ளியாக ஸ்ரீசாரதா ஆஸ்ரமம் பலரும் தயங்குகிற கிராமப்புறச் சிறுமியர் கல்விப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.*

*உதவும் உத்தம மனம் கொண்டோர், கீழ்க்கண்ட வகைகளில் தங்கள் நல்ல உணர்வுகளை உதவிகளாக மாற்றி அளிக்கலாம்!*

| | 50 சிறுமிகளுக்கு | 75 சிறுமிகளுக்கு | 100 சிறுமிகளுக்கு | 150 சிறுமிகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| காலைச் சிற்றுண்டி | ரூ. 450/- | ரூ. 675/- | ரூ. 900/- | ரூ. 1,350/- | ஒரு சிறுமிக்கு ஓராண்டு கல்வி உதவி | ரூ. 1,400/- |
| மதிய உணவு | ரூ. 900/- | ரூ. 1,350/- | ரூ. 1,800/- | ரூ. 2,700/- | ஒரு சிறுமிக்கு ஓராண்டு பராமரிப்புச் செலவு (உணவு, உடை, கல்வி) | ரூ. 15,000/- |
| இரவு உணவு | ரூ. 600/- | ரூ. 900/- | ரூ. 1,200/- | ரூ. 1,800/- | சேவாலயம் ஒரு மாதப் பராமரிப்புச் செலவு | ரூ.85,000/- |
| ஒரு நாள் உணவு | ரூ. 1,950/- | ரூ. 2,925/- | ரூ. 3,900/- | ரூ. 5,850/- | ஒரு சிறுமியின் ஒரு வருட மருத்துவச் செலவு | ரூ. 500/- |
| ஒரு மாத உணவு | ரூ. 58,500/- | ரூ. 87,750/- | ரூ. 1,17,000/- | ரூ. 1,75,500/- | | |

*தங்களின் திருமண நாள், குடும்பத்தினர் பிறந்த நாள், தாங்கள் புதிய தொழில் தொடங்கிய நாள், முன்னோர்களின் நினைவு நாள் மற்றும் இதர பண்டிகை நாட்களில், சேவாலயக் குழந்தைகளுக்குத் தாங்கள் அளிக்கும் தொகையோ, பொருளோ எதுவாயினும் அன்புடன் ஏற்றுக் கொள்ளப்படும்.*

*இந்தச் சேவைப் பணிக்காக உதவும் நல்ல இதயம் கொண்டவர்களுக்கு மகத்தான புண்ணியம் கிடைக்கிறது. புண்ணியத்துடன் இறையருள் சேரும்போது அது "குடும்பக் கவசமாக மாறி" பல வகைகளில் பாதுகாக்கிறது. இது ஆத்ம திருப்திக்கான ஒரு வழியாகும்.*

*தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீசாரதா ஆஸ்ரமம், உளுந்தூர்பேட்டை"* (Sri Sarada Ashram, Ulundurpet) *என்ற பெயருக்கு செக்/டிடி/எம்.ஓ. மூலம் அனுப்பும்படி கோருகிறோம்.*

*நன்கொடைகளுக்கு 1961 இந்திய வருமான வரிச் சட்டம் 80 G பிரிவின்படி வரி விலக்கு உண்டு.*

இறைவன் பணியில்,
**ஸ்ரீசாரதா ஆஸ்ரம சகோதரிகள்**

'நீ பாரதத்தின் எதிர்கால மக்களுக்குத் தலைவி, சேவகி, தோழி என அனைத்துமானவளாகத் திகழ்வாய்' என்று சகோதரி நிவேதிதையை வாழ்த்தினார் சுவாமி விவேகானந்தர்

சுவாமிஜி கூறிய அனைத்துமாய் இருந்து சகோதரி நமது பாரதத்திற்கு சேவை ஆற்றினார். அந்த வீராங்கனையின் 150-வது பிறந்த ஆண்டு 2017 அக்டோபர் முதல், 2018 அக்டோபர் வரை நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது.

இந்த அரிய நிகழ்வையொட்டி சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தயாரிப்பில், 'ப்ரயத்னா' கலைமன்றத்தினர் 'சகோதரி நிவேதிதா' என்ற மேடை நாடகத்தை அரங்கேற்றியுள்ளனர்.

1.45 மணி நேரம் நடைபெறும் இந்த நாடகம் சகோதரி இந்திய மண்ணிற்கு வந்தது முதல் டார்ஜிலிங்கில் மண்ணுலகை நீத்தது வரையிலான காலகட்டத்தின் முக்கிய அம்சங்களை நம் கண் முன் நிறுத்துகின்றது.



பெறும் உரையாடல் மூலமே விளக்கியிருப்பது அருமை!

நாடகம் முழுவதும் குருபக்தி, பணிவு, உறுதி ஆகியவற்றின் உருவாகவே வந்து நிவேதிதையாக நடிக்கும் செல்வி தீபிகா சுவாமிஜியின் மறைவால் உடைந்து போவது, அவரது அந்திமக் காலத்தில் கடைசி அருணோதயம் பார்க்கக் காத்திருப்பது போன்ற இடங்களில் நம்மைக் கலங்க வைத்து விடுகிறார். அவருக்கு இது முதல் மேடை அனுபவமாம்! நம்பவே முடியவில்லை.

இப்படிப் பல காட்சிகள்! மொத்தத்தில் இந்த மேடை நாடகம் ஓர் உணர்ச்சிகரமான அனுபவம்.

கௌதம், குப்தா (சதானந்தர்) இரு பாத்திரங்களையும் கையாண்டவரின் நடிப்பில் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு வித்தியாசம். ஹரி மகராஜ், மகாகவி பாரதி, பானர்ஜி, உல்லாஸ்கர் போன்ற பாத்திரங்கள் அனைவரும் அவரவர் பங்கைக் கச்சிதமாகச் செய்ய, ஜானகியாக வந்த சிறுமி ரசிகர்களின் மனதைக் கொள்ளை அடித்துவிடுகிறார், சுவாமி

இந்த நாடகத்தின் டிவிடி விலை **ரூ.100/-**
தபாலில் பெற **ரூ.150/-**
கிடைக்குமிடம் : ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை-4.

## சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடம் தயாரித்துள்ள

# சகோதரி நிவேதிதை மேடை நாடகம்



சுவாமி விவேகானந்தராகக் கம்பீரத்துடன் தோன்றி, ஒரு தாயின் அன்புடன் நிவேதிதையை வரவேற்க துறைமுகத்திற்குச் செல்லும் சுவாமிஜி முதல், படிப்படியாக சகோதரியைப் பரிமளிக்கச் செய்யும் குருவாக திரு கிரீஷ், சுவாமிஜியின் பாத்திரத்தை உணர்ந்து அருமையாக நடித்துள்ளார்.

'பள்ளிக்கு மாணவிகளை எப்படிச் சேர்ப்பது' என்பது பற்றிய காட்சியில் கிரீஷ் மற்றும் சகோதரியாக நடித்த செல்வி தீபிகா ஆகிய இருவருமே காண்பவர்களின் உள்ளங்களைக் கவர்ந்து, கரையச் செய்துவிட்டார்கள். அவர்கள் அந்தக் கதாபாத்திரங்களாகவே வாழ்ந்து விட்டார்கள்.

கொல்கத்தா நகரம் பிளேக்கினால் பீடிக்கப்பட்ட போது சகோதரியின் தலைமையில் இளைஞர்கள் ஆற்றிய சேவையை, ஆங்கில அரசின் பாராட்டுப் பத்திரத்தை பானர்ஜி அளிக்க வரும்போது இடம்

விவேகானந்தரிடமே அவரது குரங்குக் கதையைச் சொல்லி!

கதை சொல்லும் ஜானகியிடம் 'நான்தான் அந்த பயந்த துறவி' என்று சுவாமி விவேகானந்தர் கூறுவது போன்ற காட்சிகள் நாடகத்திற்கு நல்ல நகைச்சுவையையும் கூட்டுகின்றன.

நல்ல தமிழ் உச்சரிப்பு, எளிய மேடை அமைப்பு, காட்சிகளின் தொகுப்பு ஆகியவை குறிப்பிடத்தக்க அம்சங்கள். சில வருடங்களுக்கு முன்பு அனைவராலும் பாராட்டப்பட்ட நரேந்திரா நாடகத்தை எழுதி, இயக்கிய விவேக் சங்கர் அவர்களே இந்த நாடகத்தையும் எழுதி இயக்கியுள்ளார்.

அயர்லாந்தில் பிறந்து, இந்தியாவில் வாழ்ந்து சேவையாற்றி, நாட்டு விடுதலைக்கும் போராடிய சகோதரி நிவேதையின் வரலாற்றை முற்றிலும் மாறான தமிழ் மண்ணில் நாடகமாக ஆக்கிக் காட்டுவது ஒரு சவால்.

இதைத் தரமாக, அழகாக, தமிழக மக்கள் எளிதில் புரிந்து கொண்டு ரசிக்கும் விதத்தில் வழங்கி 'சபாஷ்' பெறுகிறார் விவேக் சங்கர். 'எங்கே பார்ப்பேன் சகோதரியை?' என்ற கேள்விக்கு அவர் அளித்திருக்கும் பதில் நாடகத்தின் முத்தாய்ப்பாக உள்ளது. நம்மையெல்லாம் சகோதரியைப் போல் வாழ்வோமா என்று சிந்திக்க வைக்கிறது; ஏங்க வைக்கிறது.❖

தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் 'சகோதரி நிவேதிதை' நாடகம் மேடையேற்றப்பட்டு, தேசபக்தியும் சேவை உணர்வும் ஒவ்வோர் இதயத்திலும் பொங்கி எழச் செய்ய வேண்டும்.

நிவேதிதையின் 150-வது பிறந்த ஆண்டுக் கொண்டாட்டங்களின்போது சகோதரி நிவேதிதை தமிழகம் முழுவதும் வலம் வர வாழ்த்துகிறோம்.

உங்கள் பள்ளியிலும், கல்லூரியிலும், ஊரிலும், இந்த நாடகம் அரங்கேற வேண்டுமா? இயக்குநர் திரு. விவேக் சங்கரைத் தொடர்பு கொள்ளவும்.

✆ :98414 33965.



மும்பை ராமகிருஷ்ணன்



# படி விழா நூற்றாண்டு

குறிஞ்சி நிலத் தலைவன் முருகன். முருகு என்றால் அழகு. ஆக அவன் அழகன்.

சூரபத்மன் இறுமாப்பால் தேவர்களைச் சிறைப் பிடித்தான். அவர்கள் வேண்ட, சிவன் தன் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், சத்யோஜாதம், அகோரம் என்ற ஐந்துடன், அதோ முகம் (கீழ் நோக்கிய முகம் - தெரியாது), நெற்றிக்கண் ஆகியவற்றிலி ருந்து ஜோதியை வெளிப்படுத்தினார்.

அந்த ஜோதியை அக்னியும் வாயுவும் ஏந்தி கங்கையிலிட்டனர். கங்கை சரவணப் பொய்கை யிலிட்டாள் (தேவியே சரவணத் தடாகம் ஆனார்). அங்குள்ள தாமரைப் பூக்களில் 6 குழந்தைகள் தோன்றினர். 6 கார்த்திகை மாந்தர்கள் அவர்களைப் பாலூட்டி வளர்த்தனர். அவர்களைக் காண சிவ னும் பார்வதியும் வந்தனர்.

பார்வதி அன்புடன் குழந்தைகள் அறுவரையும் ஒருசேர அணைத்தாள். உடனே ஓர் உடல் 12 கண்கள், 12 கைகள், ஆறு முகங்கள் கொண்டதாக மாறியது. ஆகவே அக்குழந்தையின் நாமம் சிவகுமாரன், பார்வதி பாலன், அக்னி குமாரன், வாயுகுமாரன், காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன், ஆறுமுகன் என்றெல்லாம் ஆயிற்று.

கந்தன் வைகாசி பௌர்ணமி , விசாக நக்ஷத்திரத் தில் உதித்ததால் விசாகன் என்ற பெயரும் உண்டு.

ஆறு குழந்தைகள் ஒன்றானதால் கந்தன் என்று பெயர். அப்பெயருக்குப் பற்றுக்கோடாக இருப்ப வன், ஆதாரமானவன், சத்ருக்களை அழிப்பவன், சந்தோஷம் அளிப்பவன் என்றெல்லாம் பொருள்.

வியாஸர் எழுதிய புராணம் ஸ்காந்தம். காஞ்சி குமரக் கோட்ட கச்சியப்பர் தமிழில் எழுதியது கந்தபுராணம். அருணகிரியாரின் கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி என்று முருகன் துதி எல்லாம் கந்தமயமாக உள்ளது.

அந்த சிவபெருமானுக்கே ப்ரணவ உபதேசம் செய்ததால் கந்தன் சிவகுருநாதன், சுவாமிநாதன், தகப்பன் சுவாமி என்றெல்லாம் பெயர் பெற்றான்.

முருகு - என்ற சொல்லுக்கும் பல பொருள்கள் உண்டு.

மு-முகுந்தன், ரு - ருத்ரன், க- கமலோத்பவன் (படைக்கும் பிரம்மா) ஆகிய மூவருள்ளும் உறைந்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை யும் செய்பவன் முருகன். தத்தாத்ரேயர் போன்று மும்மூர்த்திகள் ஒன்றிய உருவம்.

சூரசம்ஹாரம் செய்ய, தேவசேனையின் தலைவன் ஆனான் கந்தன். இதையே கண்ணன் கீதையில், ‘சேனானீனாம் அஹம் ஸ்கந்த:’ என்று கூறுவார். பராசக்தியே வேலாக மாறினாள். ஆகவே நாம் ‘சக்திவேல்’, ‘வெற்றிவேல்’ என்கிறோம். முருகன் தாரகாசுரனையும் க்ரௌஞ்ச மலையையும் வேலால் சம்ஹரித்தான். ராமர் அனுமனைத் தூது



அனுப்பியது போல் கந்தன் வீரபாஹுவை சூரனிடம் தூது அனுப்பினான்.

போரின் இறுதியில் கந்தன் அசுரர்கள் யாவரையும் வதைத்தான். அது நடந்த தினம் ஐப்பசி சுக்ல சஷ்டி. சூரன் மயிலாகவும் சேவற்கொடியாகவும் ஆனான். ஆக சூரஸம்ஹாரம் என்பது வதம் அல்ல.

சஷ்டியில் விரதம் இருந்தால் சட்டியில் வரும் என்பதன் பொருள், சஷ்டி விரதம் இருந்தால் சந்தா னம் பெறலாம். தேவேந்திரன் சூரஸம்ஹாரத்தால் மகிழ்ந்து, தன் மகள் தேவயானையை முருகனுக்கு திருப்பரங்குன்றத்தில் மணம் புரிவித்தான்.

## திருப்புகழ்

நாரதர் கூற, வேடன் நம்பிராஜனின் மகள் வள்ளியைத் தானே வேடனாக, வேங்கை மரமாக, கிழவனாக நாடி, பாதம் பணிந்து, திருடி, சண்டையும் செய்து மணந்தான். வள்ளிமலையில் வள்ளி இருந்த குகையை இன்றும் காணலாம். திருத்தணியில் வள்ளி தேவசேனா சமேத கல்யாண சுப்ரமண்யனாக முருகன் அருள் பாலிக்கிறான்.

முருகன் துதிப்பாடல்களில் அருணகிரியாரின் திருப்புகழ் பிரசித்தம். அவர் வேசி மகளிர் இன்பத்தை நாடி, உருக்குலைந்து, வருந்தி, அருணைக் கோபுரத்தி லிருந்து கீழே விழ, கந்தன் தரிசனம் தந்து,

'முத்தைத் தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக்குருபர என ஓதும்'

என்று அடி எடுத்துக்கொடுத்தான். ஆறு படை வீடுகள் மற்றும் 200 தலங்களில் முருகனைப் பாடியுள்ளார் அருணகிரியார். மொத்தம் 16,000 பாடல்களில் கிடைத்திருப்பது 1,325 என்பர்.

## வள்ளிமலை சுவாமிகள்

கொங்கு நாட்டு பூனாச்சி கிராமத்து கன்னடத் தம்பதி சிதம்பரம், லக்ஷ்மி அம்மாள் மகப்பேறு வேண்டி திருச்செங்கோட்டில் பிரார்த்தித்தனர். அதன் பலனாகக் கார்த்திகை மூலம் 25.11.1870-ல் பிறந்த குழந்தைக்கு அர்த்தநாரி என்ற பெயரிட்டு மகிழ்ந்தனர்.



அர்த்தநாரிக்குப் படிப்பு ஏறவில்லை. பெரியவனாக ஆனதும் மைசூர் அரண்மனையில் தலைமை சமையல்காரனாக இருந்தார். சில நாட்கள் மிகுந்த வயிற்று வலியால் வருந்தினார்.

மருந்தினால் வலி குணமடையவில்லை. ஒரு கொத்தனார் சொல்ல, பழனிமலை வந்தார். முருகனின் அபிஷேக நீரே வயிற்று வலியைப் போக்கியது.

ஒருமுறை உத்சவ காலத்தில் ஒரு பெண்,

'சிங்கார ரூபமயில் வாகன நமோநம
கந்தா குமாரசிவ தேசிக நமோநம
சிந்தூர், பார்வதி சுதாகர நமோநம' - என்று பாடி

யதைக் கேட்டு அர்த்தநாரி நெகிழ்ந்தார். முருகன் என்கிற சிறுவனிடம் திருப்புகழ் பாக்களைக் கற்றார்.

ஒரு சமயம் பழனியாண்டவன் 'திருவண்ணா மலைக்குப் போ' என அவருக்கு உத்தரவிட்டான். அங்குவந்து, அண்ணாமலையாரையும் அருணகிரி யாரையும் பாடச் சொன்ன முருகனை தரிசித்து, ரமண மகரிஷியையும் கந்தாசிரமத்தில் தரிசனம் செய்தார். ரமணர் அவர் திருப்புகழ் பாக்களை நன்கு உணர்ந்து பாட உதவினார். அர்த்தநாரி திருப்புகழ் சுவாமிகள் ஆனார்.

வள்ளிமலைக் கோயிலில் சுவாமிகள் பூஜித்து அன்னம் இட, ஒரு கீரி வந்து உண்ணும். சேஷாத்திரி சுவாமிகள் 'இங்கு போ தரிசனம் தருவேன் என்றாரே' என்று யோசிக்க, ஒரு நாள் அந்தக் கீரியே சேஷாத்திரி சுவாமிகளாக தரிசனம் தந்தது.

4.1.1929 அன்று சேஷாத்திரி சுவாமிகள் சமாதி அடைந்தார். சுவாமிகள் திருவண்ணாமலை வந்து குரு சமாதி நிகழ்வில் கலந்து கொண்டார்.

அவர் பெயர் வள்ளிமலை திருப்புகழ் சச்சிதா னந்த சுவாமிகள் ஆயிற்று. சேஷாத்திரி சுவாமிகள் கூறியபடி திருப்புகழே அவருக்கு மகாமந்திரம். அருணகிரியாரின் வேல்வகுப்பு அடிகளைத் திரும்பத் திரும்ப சொல்லி, 'வேல் மாறல்' என்ற சகல ரோக நிவாரணி, சகல சௌபாக்கியம் தரும் துதி ஆகியவற்றை இயற்றினார். பல தலங்களுக்கும் சென்று முருகனைத் தரிசித்தார்.

ஆங்கிலேய ஆட்சியில் புது வருடப் பிறப்பன்று மாலை மரியாதையுடன் ஆட்சியிலிருக்கும் துரை மார்களைச் சந்திக்கும் வழக்கம் இருந்தது. இதற்கு மாற்றாக தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் வளர்க்கும் விதத்தில் திருத்தணி படி விழாவைத் துவக்கினார் சுவாமிகள்.

31.12.1917 இரவு சில பக்தர்களுடன் ஒவ்வொரு படியாக திருப்புகழ் பாடிக் கொண்டே 365 படிகள் ஏறி, மறுநாள் 1.1.1918 காலை முருகனைத் தரிசித்தார். அதுவே வழக்கமாகியது. நாளடைவில் பல திருப்புகழ் சபைகள் கலந்து கொண்டன. இப்போது திருத்தணி - திருப்படி- திருப்புகழ் விழா என்று பிரபலமாகிவிட்டது.

இந்த வருடம் அதன் நூற்றாண்டு விழா என்பது குறிப்பிடத்தக்கது.

22.11.1950 அன்று சுவாமிகள் சமாதி அடைந் தார். அவர் பூத உடல் வள்ளி மலையில் அவர் தவம் செய்த குகையிலேயே வைக்கப்பட்டது. அந்தச் சமாதியில் இன்றும் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. ❖


அவதூதரின் 24 குருமார்கள்
படக்கதை : சுவாமி பார்த்தசகானந்தா படம்: தாகோஜு சிவப்ரசாத் தமிழாக்கம் : ராஜிரகுநாதன்
1 நகுஷனின் பேரனும் யயாதியின் மகனுமான மன்னன் யது ஒரு நாள் காட்டில் சஞ்சரிக்கையில் பிரம்ம தேஜஸோடு ஒளிரும் அவதூதர் ஒருவரைக் கண்டான். அப்போது...
சுகபோகங்கள், அதிகாரம், தனம் போன்றவற்றில் ஆனந்தத்தைத் தேடி மனிதர்கள் ஓடுகிறார்கள். ஆனால் இந்த அடர்ந்த காட்டில் தன்னந்தனியாக வசிக்கும் நீங்கள் இப்பேரானந்தத்தை எவ்விதம் பெற்றீர்கள்?
2
நான் இந்தப் பரமானந்த நிலையில் எவ்வாறு வாழ்வது என்பதை 24 குருமார்களிடமிருந்து கற்றறிந்தேன்.
மகாத்மாவே, அவர்களைப் பற்றி அறிய விழைகிறேன்.
3
கர்ம பந்தங்களில் சிக்கித் துன்பம் அனுபவிக்கும் அஞ்ஞானிகள் தரும் கஷ்டங்களைப் பொறுத்துக் கொண்டு, அவர்களுக்கு முடிந்தவரை நன்மையே செய்கிறேன். இதனை நான் '**பூமிமாதா**'விடமிருந்து கற்றேன்.
4 வாசனை, துர்நாற்றம் - இவற்றைச் சுமந்தாலும் அவற்றுடன் ஒட்டாமல் இருக்கிறது '**காற்று.**' அதைப் பார்த்து சுகதுக்கங்களின் மத்தியில் இருந்தும் அவற்றில் சிக்காமல் இருக்கக் கற்றேன்.
5 எதனுடனும் தொடர்பில்லாமல் இருப்பது '**ஆகாசம்**'. அதைப் பார்த்து இந்த ஜடமான உடலைச் சுமந்தபடி 'அது நானல்ல' என்றுணர்ந்து நடக்கக் கற்றுக் கொண்டேன்.

6 அனைத்தையும் சுத்தம் செய்கிறது **'நீர்'**. அதைப் பார்த்து, என்னிடம் வந்தவர்களுக்குப் புனிதத்தையும் நன்மையையும் அளிக்கக் கற்றேன்.



7




தன்னிடம் அளிக்கப்பட்ட அனைத்தையும் எரித்துவிடுவது **'அக்னி'**. இதைப் பார்த்து யார் எதை அளித்தாலும் ஆகாரமாக ஏற்றுக் கொள்ளக் கற்றேன்.

8 வளர்ந்தாலும் தேய்ந்தாலும் மாறாதது **'சந்திரன்'**. அதைப் பார்த்து உடல் சுக, துக்கங்களைப் பொருட்படுத்தாமல் ஆனந்தமாக இருக்கக் கற்றேன்.



9 கடலிலிருந்து நீரை கிரகித்து, மழை வடிவத்தில் மீண்டும் அளிக்கிறது **'சூரியன்'**. அதைப் பார்த்து, பெற்ற உபகாரத்தைச் சரியான சமயத்தில், சரியான விதத்தில் திரும்பக் கொடுப்பதைக் கற்றேன்.




10



வேடனிடம் சிக்கிய தன் குடும்பதைப் பார்த்துத் துடித்த **'புறா'**, தானாகவே அவனிடம் சிக்கி பலியானது. அவ்விதம் சம்சாரத்தில் விழுந்து அழிந்துவிடக் கூடாதென்று அந்தப் புறாவிடமிருந்து கற்றேன்.

11



உணவுக்காக தேடியலையாதது **'மலைப்பாம்பு'**. அது போல் தானாக வந்த உணவை ஏற்று ஆத்மாவில் லயித்திருக்கக் கற்றேன்.

12 பல நதிகள் வந்து கலந்தாலும் தனது கம்பீரத்தை விடாதது **'கடல்'**. அதைப் பார்த்து, ஆசைகளின் பின்னால் ஓடாமல் ஸ்திரமாக இருக்கக் கற்றேன்.



13



கவர்ச்சியான நெருப்பில் விழுந்து எரிந்து சாம்பலாகிறது **'விட்டில் பூச்சி'**. அதைப் பார்த்துப் புலனின்பம் என்னும் நெருப்பில் விழாதிருக்கக் கற்றேன்.


14
சேமித்த தேனை அனுபவிக்க இயலாத
'தேனீ'யைப் பார்த்து நாளைக்கென சேர்த்து
வைப்பதை விட்டேன்.
15
தொடு உணர்ச்சிக்கு இலக்காகி வேட்டைக்காரனிடம் சிக்கும் 'யானை'
யைப் பார்த்து காமத்தையும் உலகசுகங்களையும் விட்டொழித்தேன்.
16
வேட்டைக்காரனின் இசைக்கு மயங்கி உயிர் துறக்கும் 'மானை'ப் பார்த்து 'கேட்டல்' எனும் புலனின்பத்தை வென்றேன்.
17
வீணே சேர்த்து வைத்த செல்வம்
பிறர் கைப்பொருளாவதை 'தேனை
எடுத்துச் செல்பவனை'ப் பார்த்து
கற்றுக் கொண்டேன். அதனால் ஞானச்
செல்வத்தை வளர்த்துக் கொண்டேன்.
18
இரைக்கு ஆசைப்பட்டுத் தூண்டிலில்
சிக்கிய 'மீன்' சுவைக்கு அடிமைப்படும்
புலனின்பத்தை வெல்லக் கற்பித்தது..
19
ஆண்களை எதிர்பார்த்துக் காத்தி
ருந்து விரக்தியடைந்த 'விலைமாது
பிங்களா'வைப் பார்த்து, ஆசாபாசங்
களுக்கு ஆளாகாமல் சுதந்திரமாக
இருக்கக் கற்றேன்.
20
காக்கைகளால் துரத்தப்பட்ட 'கழுகு', மாமிசத் துண்டை விட்டெறிந்து நிம்மதியடைந்ததைப் பார்த்து, உலக
ஆசைகளையும் அவற்றைத் தொடரும் புகழ்ச்சி, இகழ்ச்சிகளையும் கண்டு கொள்ளாமல் இருக்கக் கற்றேன்.






பிரம்மஞானம் பெற்ற மனிதன் ஒரு சமயம் பச்சைக் குழந்தை போலவும், சில சமயம் ஜடம் போலவும், அவ்வப்போது பைத்தியக்காரன் போலவும் நடந்து கொள்வான். ஆனால் உள்ளும் புறமும் எங்கும் பிரம்மத்தைத் தரிசித்தபடி நிலையாக இருப்பான்.

- பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்



**ராஜமாதா**

# கீழடியில்

கீழடி. சிவகங்கை மாவட்டத்தின் ஒரு சின்னஞ் சிறிய கிராமம். மாவட்டத்தையே ஒரு முழுத்தாள் வரைபடமாக ஆக்கினாலும் இடம் குறிப்பிடப்பட முடியாத அளவிற்குச் சிறிய கிராமம். ஆனால் இன்று இந்திய வரலாற்று வரைபடத்தில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

தென்னாட்டின் வரலாற்றையே கிறிஸ்துவிற்கு முன் 3-ஆம் நூற்றாண்டு வரை என்ற நெடுந்தொலைவிற்குப் பின்னோக்கிக் கொண்டு சென்றுவிட்டது கீழடி.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கீழடியின், பள்ளிச் சந்தை என்று அழைக்கப்படும் பரந்த தென்னந்தோப்பில் அகழ்ந் தெடுக்கப்பட்ட சதுர ஆழ்குழிகள் சங்க காலத்தைச் சேர்ந்த மிகப் பெரிய நகரங்களுள் ஒன்றின் ஒரு பகுதியாகும்.

அவற்றின் உள்ளே மண்பாண்டங்கள், கிளிஞ்சல்கள், கண் ணாடிகள், மணிகள், இரும்பினாலும் எலும்பினாலும் செய்யப் பட்ட ஆயுதங்கள், சிறிய கருவிகள், நாணயங்கள் ஆகியவை மண்ணின் பல அடுக்குகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

செங்கல் சுவர்கள், சேமிப்பு அறைகள், கிணறுகள், மண் பெட்டகங்கள் என்று வீடு களின் பல பகுதிகளும் காணக் கிடைக்கின்றன.

'கீழடியில் அகழ்வாராய்ச்சி இரு வெவ் வேறு இடங்களில் செய்யப்பட்டது. அந்த இரண்டு இடங்களுமே வேறுவேறான செய்தி களை அளித்தன. அதிலிருந்து நாங்கள் அங்கு வாழ்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டைக் கவனித்தோம்' என்கிறார் ஆராய்ச்சியாளர் அமர்நாத்.

இரண்டில், சிறியதான பகுதியில் சுமார் 50 ஆழ்குழிகள் அகழ்ந்தெடுக் கப்பட்டுள்ளன. இவற்றில் கருப்பு, சிவப்பு வண்ண மண்ணாலான மண்பாண்டங்கள், மீன் சின்னங்கள், கூரை வேயும் சொருகு ஓடுகள், தரையில் பாவப்படும் பட்டைக் கற்கள் ஆகியவை காணப்படுகின்றன.

பெரிதாக உள்ள பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட அழகிய ஆபர ணங்கள், மழமழப்பான விளையாட் டுக் கற்கள், ரத்தினக் கற்கள், தமிழ் பிராம்மி லிபியில் அமைந்த கல்வெட்டுக்கள் ஆகியவை அங்கு நன்கு படித்த, நாகரீகம் மிக்க மக்கள் வாழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக உள்ளன. கல்வெட்டுகளில் காணும் எழுத்துகள் திசன், ஆதன், உதிரன் போன்ற தனிமனிதர்களின் பெயர் களாகத் தெரிகின்றன.

அங்குள்ள கல்கட்டிடங்கள் சிறிய பகுதியைவிடச் செம்மையான வகையில் அமைந்துள் ளன. மேலும் அங்கு கண்டெடுக்கப்பட்ட படிகம், நவரத்தினக் கற்கள், மணிகள் ஆகியவை அந்தப் பகுதி மக்கள் பல வெளிநாடுகளுடன் வணிகத் தொடர்பு

## நூல் அறிமுகம்

❑ **திருக்குமரனடியார்கள்**

78 முருகனடியார்களின் வரலாறு. பக்கம் 192 - விலை ரூ. 100/-.
ஆசிரியர்: புலவர் M.S.சுப்பிரமணியம்
கிரி டிரேடிங் ஏஜென்சி பிரைவேட் லிமிடெட், 372/1, மாங்காடு, சென்னை – 122, ✆ : 26793190.

❑ **துணைபுரியும் ஸ்தோத்திரங்கள்**
(சுபமங்கள ஸ்தோத்திரம்-2)

20-க்கும் மேற்பட்ட ஸ்தோத்திரங்கள் அடங்கிய நூல். பக்கம் 96 - விலை ரூ.50/-.
நூலாசிரியர்: டாக்டர் (ஸ்ரீமதி) கே.என். சரஸ்வதி
பேராசிரியர் பா. அர்த்தநாரீசுவரர்
கடலங்குடி பப்ளிகேஷன்ஸ், 38, நடேச அய்யர் தெரு, தி.நகர், சென்னை – 17, ✆ : 24343406.

❑ **வள்ளற்பெருமான் வகுத்துத் தந்த இல்லறம் அது நல்லறம்**

வள்ளலார் வரலாறும் பேரின்பம்-இம்மை இன்பத்துக் காக அவர் காட்டும் பாதையும். பக்கம் 176 - விலை ரூ.50/. ஆசிரியர்: அரங்க. கண்ணையன்
''திருவேரகம்'' நெ.18/29, தெற்குத் தெரு, மேலக் கொட்டையூர், கும்பகோணம் – 612 002, ✆ : 9789542490

❑ **அவதார புருஷர் ஸ்ரீராம பக்த ஹனுமானின் மகாத்மியம்**

ஸ்ரீராமரின் அவதாரப்பணி முழுமை பெறத்



# தொன்மையான நகரம்

கொண்டிருந்ததைப் பறைசாற்றுகின்றன.

இங்கு 53 ஆழ்குழிகள் அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இது 3.5 கி.மீ. சுற்றளவில் உள்ள 80 ஏக்கர் விவசாயப் பகுதி. இங்கு கட்டிட வடிவங்கள் தோண்டத் தோண்டக் கிடைத்த வண்ணம் உள்ளன. இத்தகையவை முதன் முறையாக தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

வைகைக் கரையில் நன்கு வளர்ச்சி பெற்ற தொன்மையான மிகப் பெரிய நகர நாகரீகமாக இது விளங்கியிருக்கலாம். சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள 2000 ஆண்டுகளுக்கு முன்னர் செழித்திருந்த பழந்தமிழர் வாழ்க்கை முறையில் பல அம்சங்களைத் தகவல்களாக நமக்கு இந்த ஆராய்ச்சி தந்து கொண்டிருக்கிறது.

மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, பரிபாடல் ஆகியவற்றில் மதுரை மற்றும் பாண்டிய மன்னர்களின் வாழ்க்கையைப் பற்றிப் பல விஷயங்கள் பேசப்பட்டுள்ளன. ஆனால் அவை குறிப் பிடும் இடங்களை இந்தப் பகுதிகளில் துல்லியமாக வரையறுக்க முடியவில்லை.

2013 முதல் வைகைக் கரைப் பகுதிகளில் மேற்கொள் ளப்பட்ட அகழ்வாராய்ச்சிப் பகுதிகளில் கிடைத்தவை பெரும்பாலும் களஞ்சியங்கள், துறைமுகம் மற்றும் கோயில்களின் சிதைந்த பகுதிகள் போன்றவையே.

ஆனால் கீழடியில் முதன் முதலாக மொஹஞ்சதாரோ விற்கு இணையான மிகப் பெரிய மக்கள் வாழும் நகர நாகரிகம் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட பாண்டிய மன்னனின் 'பெருமணலூர்' நகரமாக இது இருக்கலாம் என்பது ஆராய்ச்சி யாளர்களின் கருத்து.


நமது தொன்மையான புராணங்களில் மக்களின் வாழ்க்கை முறைகள் நயம்பட எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஆங்கிலேயர் களின் அடிமை வாழ்வின் கறை படிந்த நமது மக்கள் புராணங் களை நம்புவதில்லை. அவற்றையே ஆங்கிலேய எழுத்தாளர்கள் எடுத்துக் கூறினால் மட்டுமே நம்ப வேண்டும் என்ற மனப் பான்மையைக் கொண்டிருப்பது நமது குறைதான்.

ஆனால் உண்மைகள் மனிதர்களால் மறைக்கப்பட்டாலும் காலம் அவற்றின் திரை நீக்கிக் காண உதவும் என்பது சமீபத்திய ஆராய்ச்சிகளின் மூலம் உறுதியாகியுள்ளது. இந்த வருட இறுதியில் இந்த ஆராய்ச்சி முடிவடையும் என்று நம்பப்படுகிறது. இதன் முழுமையான உருவத்தைக் கண்டு உலக வரலாற்றாளர்கள் வியக்கும்போதுதான் நம் பெருமையை நாமே உணர்வோம். ❖

தன்னையே அர்ப்பணித்த அனுமானின் மகாத்மியம். பக்கம் 128 - விலை ரூ.110/-.

ஆசிரியர்: கே. ராஜகோபாலன்

சங்கர் பதிப்பகம், 15/21, டீச்சர்ஸ் கில்டு காலனி, 2-வது தெரு, இராஜாஜி நகர் விரிவு, வில்லிவாக்கம், சென்னை - 49. ✆ : 2650 2086.



❑ இது நம் சனாதன தர்மம்

சனாதன தர்மத்தின் பல்முனைச் சிறப்பு களும், புராண, இதிகாசங்கள் மற்றும் சாஸ்திர நூல்களிலுள்ள பல்வேறு விஷயங்களும் எளிதில் புரியும் வண்ணம் இந்நூலில் கொடுக்கப் பட்டுள்ளன. பக்கம் 674 - விலை ரூ.350/.

ஆசிரியர்: சாமவேதம் சண்முக சர்மா

தமிழில் : ரஜி ரகுநாதன்

Rushipeetham Charitable Trust, Plot 1-19-46, HIG A-40, Sainathapuram Road, Dr.A.S.Rao Nagar, Hyderabad - 500 062. Ph : 040-27134557

❑ அகப்புறப் பொலிவும் ஆனந்த வாழ்வும்

இந்து மதம், மறுபிறவி, ஜீவன் முக்தி போன்ற 32 தலைப்புகளில் உள்ள கட்டுரைகளின் தொகுப்பு. பக்கம்248 - விலை ரூ.200/-.

ஆசிரியர்: வி. மகாதேவன்

மடத்தம்மை ஆன்மீக மன்றம், 38/33, செட்டித் தெரு, வடசேரி, நாகர்கோவில், ✆ : 94879 00309. ❖

## ஹாஸ்ய யோகம்

# இன்டர்வியூ

நேர்முகத் தேர்வுகளைச் சந்திப்பவர்களிடம் தந்திரமான கேள்விகள் கேட்கப்படுவதுண்டு. அதற்கேற்ப தந்திரமான பதில்கள் அளிப்பவர்கள் கில்லாடிகள்.

சில உதாரணங்கள் :

கேள்வி : முட்டையை கான்க்ரீட் தரையின் மேல் விரிசல் வராமல் எப்படிக் கீழே போடுவீர்கள்?

பதில் : கான்க்ரீட் தரையில் விரிசல் வரவழைப்பது அவ்வளவு சுலபமல்ல.

கே : ஒரு சுவரைக் கட்ட 8 பேருக்கு 10 மணி நேரம் பிடித்ததென்றால், 4 பேருக்கு அதே சுவரைக் கட்ட எவ்வளவு நேரம் பிடிக்கும்?

ப : சற்றுநேரம்கூடப் பிடிக்காது. சுவர்தான் ஏற்கனவே கட்டப்பட்டுவிட்டதே!

கே : வெட்டப்பட்ட பாதி ஆப்பிள் எது போலிருக்கும்?

ப : மற்றொரு பாதியைப் போல் இருக்கும்.



கே : நான் உங்களிடம் 10 சுலபமான கேள்விகள் கேட்கவா அல்லது ஒரு கடினமான கேள்வி கேட்கவா?

மாணவன் : கடினமான கேள்வியையே கேளுங்கள்.

கே : முதலில் நாள் வருமா? இரவு வருமா?

ப : நாள்தான் முதலில் வரும் சார்.

கே: அது எப்படி?

ப: மன்னிக்கவும் சார். இரண்டாவது கேள்வி கேட்க மாட்டேன் என்று நீங்கள் வாக்குறுதி அளித்திருக்கிறீர்கள்.

### கடவுளுக்கு நன்றி!

நார்மன் வின்சென்ட் பீல் ஓர் எழுத்தாளர். அவர் தன் நண்பரிடம், "நமக்கு இந்த வாழ்க்கையைத் தந்த கடவுளுக்கு நாம் நன்றி சொல்ல வேண்டும்" என்று சொன்னார்.

"ஆமாம்! நானே ஏகப்பட்ட கடன் வாங்கிவிட்டுக் கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் ஓடிக் கொண்டிருக்கிறேன். இதிலே கடவுளுக்கு எங்கே நன்றி சொல்லுவது?"

"கடன் கொடுத்தவர்களில் நீங்கள் இல்லையென்பதால் நன்றி சொல்லலாமே" என்றார் வின்சென்ட் பீல்.

### பயமாக இருக்கிறது!

ஜேம்ஸ்தர்பார் அமெரிக்க எழுத்தாளர். தமது கட்டுரைகளுக்குத் தாமே படம் போடுவார். வயதானதால் கண் பார்வை போய்க் கொண்டிருந்தது. அப்போதும் நகைச்சுவையுடன் எழுதுவதை நிறுத்தவில்லை.

அவர் கல்லூரி மாணவனாக இருந்தபோது பாரசூட் படையில் சேர ராணுவம் எல்லா மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்தது. அந்த விளம்பரத்தில் "மாணவர்களே! இந்த சாலையைக் கடப்பதைவிட பாராசூட் மூலம் குதிப்பது அப்படி ஒன்றும் ஆபத்தான செயலல்ல; எனவே பயப்படாமல் பாராசூட் படையில் சேருங்கள்" என்று கண்டிருந்தது.

ஜேம்ஸ்தர்பார் தினம் இந்த விளம்பரத்தைப் படிப்பார்; யோசிப்பார்; பிறகு போய் விடுவார். இதைக் கவனித்து வந்த பேராசிரியர், "பாராசூட் படையில் சேர என்ன யோசனை?" என்று கேட்டார்.

ஜேம்ஸ்தர்பார், "சேரலாம் என்றுதான் நினைக்கிறேன். ஆனால் அந்த ராணுவ அலுவலகம் இந்தச் சாலையின் எதிர்ப்புறத்தில் இருப்பதால் சாலையைக் கடந்து செல்லப் பயமாக இருக்கிறது" என்றாரே பார்க்கலாம்!

- சுகுமாரன்

## மரம்தான் மனிதன்; மறந்தான் மனிதன்!

- கவிஞர் வைரமுத்து




மாயையில் வீழ்ந்து மனிதன் தன் சொந்த இயல்பை மறந்துவிடுகிறான். - பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர்




எனது திட்டம்தான் என்ன? பழங்காலத்தின் மகத்தான ஆச்சாரியர்களுடைய கருத்துக்களைப் பின்பற்றுவதே. நான் அவர்களது செயல்களைப் படித்தேன். அவர்கள் மேற்கொண்ட பணிகளின் போக்கை என்னால் கண்டுகொள்ள முடிந்தது. அவர்கள் சமூகத்தின் மகத்தான ஆரம்பகர்த்தாக்கள். அவர்கள் மாபெரும் வலிமையும் தூய்மையும் வாழ்வும் தந்தவர்கள். அவர்கள் மிக அற்புதமான செயல்களைச் செய்தார்கள். நாமும் அற்புதமான வேலைகளைச் செய்தாக வேண்டும். சூழ்நிலைகள் கொஞ்சம் மாறியுள்ளன. எனவே நமது செயல்முறையும் சிறிது மாற வேண்டும், அவ்வளவுதான். - சுவாமி விவேகானந்தர்

SVIS LABS LIMITED

(Manufacturers of Active Pharmaceutical Ingredients and Intermediates)

Regd. Off. & Fact. : Plot No.88 & 89, Phase - II, Sipcot Industrial Complex, Ranipet - 632 403, Tamil Nadu. Phone : 04172 - 244820, 651507, Tele Fax : 04172 - 244820 E-mail : rao@svisslabss.net Web Site : www.svisslabss.net

Volume-96, Issue-11. Sri Ramakrishna Vijayam (Tamil Monthly) November 2016. Regd. with the Registrar of Newspapers for India under No. 1107/1957. Postal Registration Number : TN/CH(C)/221/15-17. Licenced to post without prepayment TN/PMG(CCR)/WPP-145/2015-2017. Date of Publication : 24th of every month.

